இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 72 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 04 – சனிக்கிழமை 21 அக்டோபர் 2023 – சென்னை 16+8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 72: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 04 - Saturday 21 October 2023 - Chennai 16+8 Pages ₹ 5.00

## “வழிபாட்டு உரிமைகளில் புரட்சி செய்த ஆன்மிகப் பெரியவர்”

# பங்காரு அடிகளார் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி!

## நேரில் சென்று குடும்பத்தாருக்கு ஆறுதல்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேல்மருவத்தூரில் நேற்று முன்தினம் மறைவுற்ற மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார் அவர்களின் உடலுக்கு நேற்று (20.10.2023) மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது துணைவியாரும் ஆதிபராசக்தி அறக்கட்டளை துணைத் தலைவருமான திருமதி லட்சுமி பங்காரு அடிகளார் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.சுந்தர், ஆர்.இலட்சுமணன், என்.புகழேந்தி, சி.வி.எம்.பி. எழிலரசன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய தலைவர் பொன் குமார் ஆகியோர் உள்ளனர்.

**சென்னை, அக்.21-**

**ஆன்மிகப் பெரியவர் பங்காரு அடிகளார் அவர்களின் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். மேலும் இதுகுறித்து தமது சமூக வலைத்தள பதிவில் “வழிபாட்டு உரிமைகளில் புரட்சி செய்த ஆன்மிகப் பெரியவர்” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தை நிறுவி, அதன் குருவாகச் செயல்பட்டு வந்தவர் பங்காரு அடிகளார். உடல் நலக் குறைவால் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் (19.10.2023) திடீரென மாரடைப்பு ஏற்பட்டு பங்காரு அடிகளார் இயற்கையெய்தினார். மேல்மருவத்தூர் கோவில் வளாகத்தில் உள்ள வீட்டில் பங்காரு அடிகளாரின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பங்காரு அடிகளாரின் உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேல்மருவத்தூருக்கு நேரில் சென்று பங்காரு அடிகளாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

> **“முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைத்தள பதிவில், “வழிபாட்டு உரிமைகளில் புரட்சி செய்த ஆன்மிகப் பெரியவர் பங்காரு அடிகளார் அவர்களது திருவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.”**

தொடர்ந்து பங்காரு அடிகளாரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்தார்.

அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, க.பொன்முடி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தா.மோ. அன்பரசன், ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., க.செல்வம் எம்.பி., மாவட்டச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய தலைவர் பொன்குமார், சி.வி. எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., ஆர். இலட்சுமணன் எம்.எல்.ஏ., என். புகழேந்தி எம்.எல்.ஏ., உள்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், கழக முன்னணியினர் உள்ளிட்டோரும் பங்காரு அடிகளாரின் உடலுக்கு மரியாதை செலுத்தினர்.

**முதல்வர் புகழாரம்!**

இதனிடையே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைத்தள பதிவில், “வழிபாட்டு உரிமைகளில் புரட்சி செய்த ஆன்மிகப் பெரியவர் பங்காரு அடிகளார் அவர்களது திருவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

**பொதுமக்கள் அஞ்சலி!**

பங்காரு அடிகளார் உயிரிழந்த தகவல் அறிந்ததும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து அவரது பக்தர்கள் மேல்மருவத்தூரில் குவிந்தனர். மேல்மருவத்தூரில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டிருந்த பங்காரு அடிகளார் உடலுக்கு பொதுமக்கள் மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பங்காரு அடிகளாரின் உடல் அவரது வீட்டில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோவில் வளாகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கும் ஏராளமான பொது மக்கள் மற்றும் பக்தர்கள் திரண்டு வந்து இறுதி மரியாதை செலுத்தினர்.

**அரசு மரியாதையுடன் உடல் அடக்கம்!**

பொதுமக்கள் அஞ்சலிக்குப் பின்னர் பங்காரு அடிகளாரின் உடல் நேற்று மாலை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

**கருவறைக்குள் பெண்கள் வழிபாடு!**

ஆன்மிகப் பணியுடன் கல்வி உள்ளிட்ட சமூகப் பணிகளையும் செய்து வந்தவர் பங்காரு அடிகளார். அனைத்துப் பெண்களையும் கருவறைக்குள் சென்று அவர்களே பூசை செய்து வழிபடச் செய்து ஆன்மிகப் புரட்சி செய்தவர் அவர்.

**பங்காரு அடிகளார் வரலாறு!**

செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடம், அந்த ஊரின் அடையாளமாக உள்ளது. இந்த சித்தர் பீடத்தை நிறுவியவர் பங்காரு அடிகளார். மேல்மருவத்தூரைச் சேர்ந்த விவசாயியான கோபால் மற்றும் மீனாம்பிகைக்கு மகனாக 1941ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர் பிறந்தார். அவருக்கு பெற்றோர் சுப்பிரமணி என்று பெயரிட்டிருந்தனர். ஆசிரியராகப் பணியாற்றிய அவர், உத்திரமேரூரைச் சேர்ந்த பள்ளி ஆசிரியையான லட்சுமியை திருமணம் செய்து கொண்டார். 1970-களின் தொடக்கத்தில் மேல்மருவத்தூரில் சக்தி பீடத்தைத் தொடங்கி, ஆன்மிகத்துடன் சமுதாயத் தொண்டையும் செய்துவந்தார். 1978ல் முதன் முதலாக காஞ்சிபுரத்தில் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தைத் தொடக்கி வைத்தார். இன்றுவரை 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட வார வழிபாட்டு மன்றங்களும், 25க்கும் மேற்பட்ட சக்தி பீடங்களும் மேல்மருவத்தூர் சித்தர் பீடத்துக்கு தொண்டாற்றி வருகின்றன. பங்காரு அடிகளாரை பின்பற்று பவர்களும் ஆதிபராசக்தி கோயிலின் பக்தர்களும் அவரை “அம்மா” என அழைத்து வந்தனர். 15க்கும் மேற்பட்ட நாடுகளில் இவரைப் பின்பற்றும் பக்தர்கள் உள்ளனர்.

மேல்மருவத்தூ ரில் இவர் தொடங்கிய அறக்கட்டளை பல கல்வி நிறுவனங்களை நடத்தி வருகிறது. ஆதிபராசக்தி கோயிலில் அனைத்து நாட்களிலும் பெண்கள் வழிபடலாம் என்று கடவுள் வழிபாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியவர் பங்காரு அடிகளார்.

## கழகச் செயல்மறவர் – உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

# கும்மிடிப்பூண்டி கி.வேணு மறைவு!

## ஏராளமானோர் அஞ்சலி!



**கும்மிடிப்பூண்டி, அக்.21–**

**மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும், கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான கழகச் செயல்மறவர் கும்மிடிப் பூண்டி கி.வேணு அவர்கள் நேற்று (20.10.2023) இரவு மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**கழகமே உயிர் மூச்சாகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராகத் திகழ்ந்தவர். கடந்த சில மாதங்களாக உடல் நலிவுற்றிருந்த வேணு அவர்கள் நேற்று மறைவெய்தினார்.**

**சிறுவயது முதலே கழகப் பணி!**

சிறுவயது முதலே கழகத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர் கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்கள். முதன்முதலில் திருவள்ளூர் மாவட்டத்தில் குருதனம்பேடு கிராமத்தில் கிளைக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேணு அவர்கள், 1973ஆம் ஆண்டு முதல் கும்மிடிப் பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக ஐந்து முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார். தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய இவர், திருவள்ளூர் மாவட்டக் கழகம் உருவாக்கப்பட்ட நேரத்தில் மாவட்டக் கழகச் செயலாளராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். காஞ்சிபுரம் மாவட்ட தி.மு.க. மாநாட்டு தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர். தற்போது கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினராக இருந்து வந்தார்.

**இருமுறை சட்டமன்ற உறுப்பினர்!**

1989ஆம் ஆண்டிலும், 1996ஆம் ஆண்டிலும் கும்மிடிப்பூண்டி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய வேணு, கும்மிடிப் பூண்டி நிலவள வங்கித் தலைவராகவும், மாநில நில வள வங்கி இயக்குநராகவும், திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவராகவும், மாசு கட்டுப்பாட்டு வாரிய நிர்வாகக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்ற வேணு அவர்கள், 1976ஆம் ஆண்டு ‘மிசா’ சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் மணவிழா!**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பன்பாக்கம் கிராமத்தில் 7.10.1951 அன்று கிருஷ்ணசாமி, திருமதி அலமேலு அம்மாள் இணையரின் மகனாகப் பிறந்தவர் வேணு. 1975ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் பத்மாவதி அவர்களை மணம் செய்து கொண்டார்.

இவ்விணையருக்கு செந்தில் குமார், ஆனந்தகுமார் ஆகிய இரண்டு மகன்கள் மற்றும் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி என்ற ஒரு மகள்.

இவர், திருவள்ளூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

**கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிய கலைஞர் விருது!**

இத்தகு சிறப்புக்குரிய கி.வேணு அவர்களின் பணியினைப் பாராட்டும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் 15.9.2021 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “கலைஞர் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.

இத்தகைய பெருமைக் குரியவராக விளங்கிய வேணு அவர்கள் நேற்று மறைவெய்தினார். கி.வேணு அவர்களின் மறைவுச் செய்தியறிந்த, கழகத்தினரும், அனைத்துக் கட்சியினரும், பொதுமக்களும் ஆயிரக் கணக்கில் திரண்டு வந்து இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உருக்கமிகு இரங்கல் செய்தி... 3 ஆம் பக்கம்**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 21-10-2023

# ‘நீட்’ தேர்வை நொறுக்கும் கையெழுத்துகள்

மருத்துவ மாணவர்களின் கல்விக் கனவைச் சிதைத்து வரும் நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தைத் தொய்வில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

கழகத்தின் இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி ஆகிய மூன்று அணிகளின் சார்பில் நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் அக். 21 ஆம் தேதி (இன்று) முதல் தொடங்க இருக்கிறது. இதற்கான அறிவிப்பை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், மாணவர் அணிச் செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன், மருத்துவ அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் ஆகிய மூவரும் இணைந்து வெளியிட்டுள்ளார்கள்.

இதுதொடர்பாக நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும் போது, “நீட் தேர்வு எதிர்ப்புப் போராட்டத்தை மக்கள் இயக்கமாக நாம் மாற்ற வேண்டும். நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து இயக்கத்தை நாம் தொடங்க வேண்டும். 50 நாட்களில் 50 லட்சம் பேரிடம் கையெழுத்து வாங்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை இந்திய ஒன்றியத்துக்கு உணர்த்தும் வகையில் இந்தக் கையெழுத்து இயக்கத்தை நாம் நடத்த வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**பாசிச பா.ஜ.க. அரசின் நீட் என்னும் பலிபீடத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பலியாகி இருக்கிறார்கள். ராஜஸ்தான் மாநிலத்திலும் 20க்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். இதற்குப் பிறகும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு இரக்கம் வரவில்லை. இப்படி உயிர்ப்பலிகள் அதிகம் நடக்கிறதே, என்ன காரணமாக இருக்கும் என்ற ஆய்வைக் கூட நடத்த பா.ஜ.க. அரசு தயாராக இல்லை. தமிழ்நாடு ஏன் இவ்வளவு வலிமையாக எதிர்க்கிறது என்றுகூட அவர்கள் சிந்திக்கத் தயாராக இல்லை.**

நீட் தேர்வு மதிப்பெண்ணை பூஜ்யம் ஆக குறைத்து விட்டார்கள். அதன்பிறகும் இந்தத் தேர்வில் தகுதி இருக்கிறதா? 2023-24-ஆம் கல்வி ஆண்டு முதுநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வில் பொதுப்பிரிவினர், பொருளாதாரத்தில் நலிவடைந்த பொதுப் பிரிவினருக்கு 291 மதிப்பெண்களும், பொதுப்பிரிவினரில் மாற்றுத்திறனாளிகளுக்கு 274 மதிப்பெண்களும் ஓ.பி.சி., எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு (மாற்றுத்திறனாளிகள் உட்பட) 257 மதிப்பெண்களும் இதற்கான கட்-ஆஃப் ஆக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் போதுமான மாணவர்கள் சேரவில்லை. உடனே, மதிப்பெண் தகுதியையே நீக்கிவிட்டார்கள்.

2023 ஆம் ஆண்டுக்கான முதுநிலைப் படிப்புக்கான கட்ஆப் மதிப்பெண்ணை பூஜ்யமாக ஒன்றிய குடும்ப நலத்துறை அமைச்சகம் குறைத்துவிட்டது. அதாவது இடங்கள் நிரம்பவில்லை என்றதும் மதிப்பெண் தகுதியையே நீக்கி விட்டார்கள். நீட் தேர்வில் பெறும் கட் ஆப் மதிப்பெண்ணை வைத்தே முதுநிலைப் படிப்பில் இடங்கள் கிடைக்கும். இந்த மதிப்பெண்ணை பூஜ்யமாகக் குறைத்துவிட்டது ஒன்றிய குடும்ப நலத்துறை அமைச்சகமும், இந்திய மருத்துவக் கவுன்சிலும். இதற்குப் பிறகும் இதனை தகுதித் தேர்வுதான் என்று யாராவது சொல்ல முடியுமா?

அனைத்து விதமான விதிமீறல்களும் நடக்கும் ஒரு தேர்வு என்றால் அது நீட் தேர்வுதான். கேள்வித் தாள் வெளியாகும். ஆள் மாறாட்டம் செய்தார்கள். போலியான ஆட்களை வைத்து தேர்வு எழுத வைத்தார்கள்.

ரூ.25 லட்சம் வரை தேர்வுக்கே செலவு செய்தார்கள். சி.பி.ஐ. விசாரணையில் பல்வேறு வழக்குகள் நடந்து வருகின்றன. நீட் தேர்வு எழுதிய மாணவர்கள் கைதாகி இருக்கிறார்கள். அந்த மாணவர்களின் பெற்றோர் கைதாகி உள்ளார்கள். பல மாணவர்கள் தலைமறைவாகி இருக்கிறார்கள். பெற்றோர்கள் தலைமறைவாகி இருக்கிறார்கள். குறிப்பிட்ட சென்டரில் படித்தவர்கள் மட்டுமே வெற்றி பெறுகிறார்கள். குறிப்பிட்ட தேர்வு மையங்களில் எழுதுபவர்கள் மட்டுமே வெற்றி பெறுகிறார்கள். - இப்படி இந்த தேர்வில் நடக்கும் முறைகேடுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

**தமிழ்நாட்டில் மட்டுமல்ல; ராஜஸ்தான் மாநிலத்திலும் ‘நீட்’ தேர்வுக்கு கடுமையான எதிர்ப்பு உள்ளது. ராஜஸ்தான் மாநில உயர்கல்விச் செயலாளர் பவானி தேத்தா தலைமையில், கோட்டாவில் அதிகப்படியான மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சூழலை ஆராய குழு அமைக்கப்பட்டது. இக்குழு இந்தத் தேர்வின் கொடூரமான பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டி உள்ளது.**

**நீட் பயிற்சி மையம் என்பது ரூபாய் 10 ஆயிரம் கோடி வர்த்தகம் என்றும் இந்த ஆணையம் கூறியுள்ளது. சிலரின் சுயநலத்துக்காக - அவர்கள் ஒன்றிய அரசின் உயரதிகார மையங்களைக் கையில் போட்டுக் கொண்டு நீட் தேர்வுக் கொள்ளையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அறிக்கை அம்பலப்படுத்தி இருக்கிறது.**

நீட் தேர்வுக்கு எதிராக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்கள், “அரசின் கொள்கைசார்ந்த முடிவில் நீதிமன்றம் தலையிடாது என்றாலும், மாணவர்கள் கோரிக்கையை ஏற்று மாற்றம் செய்ய வேண்டியது அரசின் கடமை. மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அதில் தலையிட வேண்டியது நீதிமன்றத்தின் கடமை. நீட் தேர்வு குறித்த வழக்குகளின் எண்ணிக்கை லட்சக்கணக்கான மாணவர்களின் விருப்பங்களை மட்டும் உணர்த்தவில்லை. மருத்துவக் கல்வியில் சீர்திருத்தம் தேவை என்பதையும் அது குறிக்கிறது” என்று சொல்லி இருந்தார்.

வழக்குகள் மட்டுமல்ல; மரணங்களும் நீட் தேர்வை அகற்றியே ஆகவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

**தனியார் கோச்சிங் சென்டர்களில் பல லட்ச ரூபாய் கட்டிப் படிக்க வசதியானவர்களின் வசதிக்காக உருவாக்கப்பட்டது இந்தத் தேர்வு. ஏழை எளிய மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்குள் வரக்கூடாது என்று தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது இந்த நீட் தேர்வு. இதனை ஒழித்தே ஆக வேண்டும். ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமைந்தால் உடனே இந்த நீட் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். அதற்கு முன்னோட்டமாகத்தான் இந்த கையெழுத்து இயக்கத்தை இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி ஆகிய மூன்று அணிகளும் தொடங்கி உள்ளன.**

**இந்தக் கையெழுத்துகள் நீட் தேர்வை நிச்சயம் நொறுக்கும்.**

●●

## தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடக்கம்!

சென்னை, அக். 21–

இந்திய வானிலை ஆய்வு மைய தென் மண்டலத் தலைவர் எஸ்.பாலச்சந்திரன், இந்தியாவில் இருந்து தென்மேற்கு பருவமழை அக்.19ம் தேதி (நேற்று முன்தினம்) முதல் விலகியுள்ளது. தென்மேற்கு பருவமழைக் காலத்தில் தமிழகத்துக்கு 35 செ.மீ. மழை கிடைத்துள்ளது. இது வழக்கத்தைவிட 8 சதவீதம் அதிகம். சென்னைக்கு 77 செ.மீ. மழை கிடைத்துள்ளது. இது வழக்கத்தைவிட 74 சதவீதம் அதிகமாகும்.

இந்நிலையில், வரும் 22ம் தேதி தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியப் பகுதிகளில் வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.10.2023) கொளத்தூர், ஜவஹர் நகர் 1வது சர்க்குலர் சாலையில் ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை சார்பில் கலைஞர் நூற்றாண்டு கட்டணமில்லா உயர் சிகிச்சை வசதிகளுடன் கூடிய கண் சிகிச்சை மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை தலைவர் ரமேஷ், சங்கர நேத்ராலயா தலைமை நிர்வாகிகள் டாக்டர் சுரேந்தரன் மற்றும் டாக்டர் கிரிஷ் சிவ ராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நல்வாழ்த்துகளுடன் - கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர்

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் புதல்வி மணவிழா!

### அமைச்சர்கள் - கழக முன்னணியினர் வாழ்த்து!

*சென்னை, அக். 21-*

*கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் - வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - செந்தமிழ்ச் செல்வி ஆகியோரின் புதல்வி டாக்டர் எம்.ஆர்.கே.பி. கண்மணிக்கும்,*

*சென்னை - கீழ்ப்பாக்கம் லான்டன்ஸ் ரோடு ஆர்.கார்த்திக் - நீதியரசர் திலகவதி ஆகியோரின் புதல்வர் டாக்டர் கே. சித்தார்த்துக்கும் மணவிழா 25.10.2023 - புதன்கிழமை அன்று காலை 9 மணிக்கு, சென்னை திருவான்மியூர், ஸ்ரீராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெறுகின்றது.*

*முன்னதாக மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 24.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6 மணிக்கு கலை இல மணி சென்னை வானொலி புகழ் அ.பார்த்திபனின் நாதஸ்வர இசை வாத்திய குழுவினரின் மங்கள இசை நிகழ்ச்சியுடன் நடைபெறுகின்றது.*

*இம்மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், இந்நாள் ஒன்றிய, மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தோழமைக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*மணவிழாவிற்கு வருகை தருவோரை கடலூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.கதிரவன் வரவேற்கிறார்.*

*மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நன்றி கூறுகிறார்.*

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.- அமைச்சர் தா.மோ.அன்பரசன் - சரத்பாலா சிறப்புரை!

## திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா தெருமுனைக் கூட்டம்!

### த.துரைசாமி - ஆ.மனோகரன் - எஸ்.டி.கருணாநிதி - நா.கோபால் பங்கேற்பு! இ.முரளிதரன் தலைமை!

*காஞ்சிபுரம், அக். 21*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் இன்று (21.10.2023 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, மேல்மதுரமங்கலம், மிசா கே. வெங்கடேசன் திடலில் நடைபெறுகிறது.*

*மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர், கிளைச் செயலாளர் இ.முரளிதரன் தலைமை வகிக்கிறார்.*

*ஏ.சேதுராமன், ஜெ. கோதண்டராமன், டி.பாஸ்கர், பி.நிர்மலா பார்த்திபன், ஆர்.மார்ட்டின், ஆர்.பரந்தாமன், வி.மோகன், ஆர். ராதா கிருஷ்ணன், வி.செந்தாமரை, இ.மாணிக்கம், ஜெ.திருமுகம், ஜெ.பிரகாஷ், ஜி.நவநீதம், எஸ்.ஆல்பர்ட், எம்.ஜெசி, என். பார்த்திபன், எல்.மணிரத்தினம், டி.கண்ணன், எம். ராஜீ, பி.ரவி, இரா.பிரகாசம், நா.சத்தியா, இ.முரளிதரன், இரா.வெங்கடேசன், எஸ்.டி.கே.சபரி ராஜா, ஜி. எஸ்.விஜயகுமார், கே.சிவபாதம், பி.ஏ.கலை மோகன், தி.பிரபாகரன், நளினா சின்னக்கண்ணு, மா.மணிவண்ணன், ச.வேலுமணி, இ. முனிகிருஷ்ணன், ஏ.நாசர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமை கழகப் பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.*

*இதில் த.துரைசாமி, படப்பை ஆ.மனோகரன், எஸ்.டி.கருணாநிதி, நா. கோபால், சாந்தி சதீஷ்குமார், நுங்கை வி.எஸ்.ராஜ், மா.கணேஷ்பாபு, மாலதி டோன்போஸ்கோ, எஸ். கே.பாலா (எ) பால்ராஜ், ப.ராமமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

### மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும்

## ககன்யான் கலன் சோதனைக்கான கவுண்ட்டவுன் தொடங்கியது!

*ஸ்ரீஹரிகோட்டா, அக். 21–*

*ரஷியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து விண்ணுக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.*

*இதற்காக ககன்யான் என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தின் கீழ் தரையில் இருந்து 400 கி.மீ. தொலைவுள்ள புவிதாழ் வட்டப் பாதைக்கு விண்கலம் மூலம் 3 வீரர்களை அனுப்பி, அவர்களை மீண்டும் பூமிக்கு பாதுகாப்பாகத் திருப்பி அழைத்து வர இஸ்ரோ முடிவு செய்துள்ளது.*

*இந்தத் திட்டத்தை 2025ம் ஆண்டில் செயல்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. அதற்கு முன்னதாக 3 கட்ட பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.*

*அதன்படி, முதல்கட்ட சோதனை நிகழ்வானது ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து இன்று (சனிக்கிழமை) காலை 7 மணிக்கு நடைபெற உள்ளது. மனிதர்களை விண்ணுக்கு சுமந்து செல்லும் மாதிரி கலனை தரையில் இருந்து 17 கி.மீ. தொலைவு வரை அனுப்பி மீண்டும் அதை பாதுகாப்பாக பூமிக்குக் கொண்டு வந்து வங்கக் கடலில் இறக்கப்படும். அங்கிருந்து கலன் மீட்கப்படும்.*

*இதற்காக கவுண்ட்டவுன் நேற்று காலை 8 மணிக்கு தொடங்கியது. இந்தச் சோதனைக்கு டி.வி.டி.1 என்ற ஒற்றை பூஸ்டர் திறன் கொண்ட ராக்கெட் பயன்படுத்தப்படுகிறது. பூமியில் இருந்து புறப்பட்டு சுமார் 17 கி.மீ. உயரத்தில் ராக்கெட் சென்றதும் மாதிரி கலன் தனியாக பிரிந்துவிடும். அது பாராசூட்கள் மூலம் மெதுவாக ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள வங்கக் கடல் பகுதியில் பாதுகாப்பாக இறக்கப்படும்.*



### கொளத்தூர் தொகுதியில் - ரூ. 3.84 கோடியில் கால்பந்து விளையாட்டுத் திடலைத் திறந்து வைத்தார்!

# ரூ.5.95 கோடி மதிப்பில் 33 புதிய திட்டப்பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார் ! பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் !

**சென்னை, அக்.21–**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (20.10.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 3 கோடியே 84 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கால்பந்து விளையாட்டுத் திடல் மற்றும் சிறுவர் பூங்காவைத் திறந்து வைத்து, 5 கோடியே 94 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 மேம்பாட்டுப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**

**மேலும், ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை சார்பில் கலைஞர் நூற்றாண்டு கட்டணமில்லா உயர் சிகிச்சையுடன் கூடிய கண் மருத்துவமனையும், அனிதா அச்சீவர்ஸ் அகாடமி தையல் பயிற்சி மையத்தையும் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**அதன் விபரம் வருமாறு:**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி.க.நகர், பல்லவன் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் சிங்காரச் சென்னை 2.0 நிதியிலிருந்து 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில், பார்வையாளர் மாடம், நடைபாதை, இறகுபந்து கூடம், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், மழைநீர் வடிகால் வசதி உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள செயற்கை புல் தரையுடன் கூடிய கால்பந்து விளையாட்டுத் திடலை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.10.2023) கொளத்தூர், திரு.வி.க. நகர் மண்டலம், வி.வி நகர் 1வது தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 5 கோடியே 94 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய மேம்பாட்டுப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன். ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பி. கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, வி.க நகர் 8வது தெருவில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 54 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், திறந்த வெளி உடற்பயிற்சிக்கூடம், நடைபாதை, இருக்கை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சிறுவர் பூங்காவை பொது மக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, ஜவஹர் நகர் 1வது சர்குலர் சாலையில் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை சார்பில் கலைஞர் நூற்றாண்டு கட்டணமில்லா உயர் சிகிச்சை வசதிகளுடன் கூடிய கண் சிகிச்சை மையத்தையும், அக்கட்டடத்தின் முதல் தளத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தையல் பயிற்சி மையத்தையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர், கொளத்தூர், ஜவஹர் நகர், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள், பயனாளிகளுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித் தொகை, மாவு அரவை இயந்திரம், காது கேட்டும் கருவி, தையல் இயந்திரம் என 55 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, வி.க.நகர் மண்டலம், வி.வி நகர் 1வது தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜி.கே.எம் காலனி 27வது தெருவில் உள்ள குழந்தைகள் வளர்ச்சி மையத்தை 5 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; ஜவஹர் நகர் 1வது வட்ட சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் 9 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் யோகா பயிற்சி மேடை அமைத்தல், கான்கிரிட் நாற்காலி உள்ளிட்ட இதர விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தும் பணி; ஜவஹர் நகர் 2வது குறுக்கு தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சிக் கட்டடத்தை 10 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பழுது மற்றும் மேம்படுத்தும் பணி; ரங்கசாயீ தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நடுநிலைப் பள்ளியில் 5 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சமையல் கூடத்தை மேம்படுத்தும் பணி; ரங்கசாயீ தெருவில் உள்ள விளையாட்டு மைதானத்தை 7 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; ஜெகநாதன் தெருவில் உள்ள வார்டு69 அலுவலகத்தை 7 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; மதுரை தெருவில் உள்ள உடற்பயிற்சி கட்டடத்தை 8 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; சந்தியப்பதாஸ் தெருவில் உள்ள உடற்பயிற்சி கட்டடத்தை 8 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; வசந்தா கார்டன் மதுரை தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் 9 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மதிய உணவு திட்ட மையத்தை மேம்படுத்தும் பணி மற்றும் வசந்தா கார்டன் மதுரை தெருவில் 22 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டும் பணி; சின்ன குழந்தை பிரதான சாலையில் உள்ள உடற்பயிற்சிக் கட்டடத்தை 8 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி;

மதுரை சாமி மடம் தெருவில் உள்ள உடற்பயிற்சி கட்டடத்தை 26 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; கனகர் தெருவில் உள்ள கனகர் குளத்தை சுற்றி 29 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை மற்றும் சுற்றுசுவர் அமைக்கும் பணி; பெரியார் நகர் 20வது தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் 29 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுசுவர் அமைத்தல் மற்றும் இதர மேம்படுத்தும் பணி; பல்லவன் சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சாலையோர பூங்காவில் 26 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், இதர பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்தும் பணி; கோட்டம்67ல் உள்ள பல்வேறு உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய பல்நோக்கு கட்டடத்தை 30 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி; வி.க நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி தொடக்க பள்ளியை 32 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி;

திரு.வி.க நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள பெண்கள் உடற்பயிற்சி கட்டடத்தை 17 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி;

12 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் உசேன் காலனியில் உள்ள அம்மா உணவகத்தின் பழுதடைந்த சுற்று சுவரை புதியதாக கட்டும் பணி, குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் மின்சார வசதிகள் அமைக்கும் பணி; நேர்மை நகர் பிரதான சாலையில் உள்ள நேர்மை நகர் மயான பூமியை 17 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி மற்றும் 27 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 16ஆம் நாள் காரிய மண்டபம் அமைக்கும் பணி; மதுரை சாமி மடம் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி உருது தொடக்க பள்ளியை 21 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; பல்லவன் சாலையில் அமைந்துள்ள வள மீட்பு மையத்தை 13 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், பெருநகர சென்னை மாநகராட்சி நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தை 13 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் மேம்படுத்தும் பணி;

ஜி.கே.எம் பிரதான சாலை (ஜம்புலிங்கம் பிரதான சாலை)யில் உள்ள மயான பூமியை 18 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்தும் பணி; வி.வி.நகர் 2வது தெருவில் உள்ள விளையாட்டு மைதானத்தை 16 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி;

கே.சி.கார்டன் 2வது தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள சமையல் கூடத்தை 6 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்தும் பணி; பார்த்தசாரதி தெருவில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் 21 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கேரம் மற்றும் சதுரங்க விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி; அஞ்சுகம் நகர் 18வது தெருவில் உள்ள அம்மா உணவகத்தை 5 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; முகமது உசேன் காலனி 5வது தெருவில் உள்ள புதிய பல்நோக்கு கட்டடத்தை 25 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி; LC1 பூங்காவில் 37 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக மழைநீர் சேகரிக்கும் குளம் அமைத்தல் மற்றும் செயற்கை நீரூற்று, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் அமைக்கும் பணி; அஞ்சுகம் நகர் 18வது தெருவில் 28 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக துப்புரவு ஆய்வாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் கட்டடம் கட்டும் பணி; வெற்றி நகரில் உள்ள தியாகராஜன் தெருவில் 34 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி;

என மொத்தம் 5 கோடியே 94 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய மேம்பாட்டுப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பி.கணேசன், ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை தலைவர் ரமேஷ், சங்கர நேத்ராலயா தலைமை நிர்வாகிகள் டாக்டர் சுரேந்தரன் மற்றும் டாக்டர் கிரிஷ் சிவ ராவ், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி.ஹெலன், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### அர்ப்பணிப்போடு கழகமே மூச்சென வாழ்ந்த கும்மிடிப்பூண்டி

## கி.வேணுவின் தியாகமும் - உழைப்பும் கழகத்தின் வரலாற்றுப் பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் நிரம்பியிருக்கும்!

### தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!

**சென்னை, அக்.21-**

**கழக மறவர் கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்களின் மறைவிற்கு முதல்வரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கலில், "மிகுந்த அர்ப்பணிப்போடு, கழகமே உயிர் மூச்சென வாழ்ந்த கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்களின் தியாகமும், உழைப்பும் கழகத்தின் வரலாற்றுப் பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் நிரம்பியிருக்கும்" என உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.**



கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

தமிழ்நாட்டின் வட எல்லையான திருவள்ளூர் மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காத்த தீரர் அருமைச் சகோதரர் கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்கள் மறைந்தார் என்ற துயரச் செய்தி கேட்டுத் துடிதுடித்துப் போனேன்.

எத்தகைய இடர் வரினும் எதிர்த்து நிற்கும் அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர் அவர். இந்திய வரலாற்றின் கருப்புப் பக்கமான 'மிசா'வை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு சிறை ஏகிய போராளி அவர். மிசா சிறைவாசத்தில் என்னோடும், கருப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபட்டு முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களோடும் சிறையில் வாடியவர் அவர்.

கும்மிடிப்பூண்டி என்றாலே வேணுதான் என்று சொல்லுமளவுக்கு, அந்தத் தொகுதி மக்களிடமும் ஒன்றுபட்ட திருவள்ளூர் மாவட்ட மக்களிடமும் அன்பு காட்டி நற்பெயர் பெற்ற அவரை இன்று இழந்து தவிக்கிறோம் என்று எண்ணுகையில் கண்களில் கண்ணீர் ததும்புகிறது.

பரந்து விரிந்த ஒன்றுபட்ட திருவள்ளூர் மாவட்டக் கழகத்தின் செயலாளராக அவர் இருந்தபோது, அந்த மாவட்டத்தை முழுவதுமாக வலம் வரவே ஓரிரு நாட்களாகும். அந்த மாவட்டத்தில் இருந்த ஒவ்வொரு ஊரிலும் வீட்டிலும் தனது காலடித் தடத்தைப் பதிய வைத்துவிட்டே வீடு திரும்புவார் அவர். இப்படி கழகப் பணிகளே தன் உயிர்மூச்சென வாழ்ந்த அவர், உடல் நலிவுற்று இருந்தபோதும் என்னைக் காண அண்ணா அறிவாலயம் வருவதை வழக்கமாக வைத்திருந்தார். ஒருமுறை மருத்துவமனையில் அவரைச் சந்தித்து நலம் விசாரித்தபோது, ஓய்வெடுக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அவரோ, தான் விரைவில் நலம்பெற்று அடுத்த கழக நிகழ்ச்சியில் நிச்சயம் கலந்துகொள்வேன் என்றார். இப்படி எந்நேரமும் கழகமே அவரது சிந்தையில் நிறைந்திருந்தது.

இத்தகைய அர்ப்பணிப்புணர்வாலும் ஆற்றல்மிக்க அவரது செயல்பாடுகளாலும், கழகத்தின் அடிமட்டத்தில் இருந்து உயர்ந்து, ஒன்றியக் கழகச் செயலாளராக, மாவட்டக் கழகச் செயலாளராக, இருமுறை சட்டமன்ற உறுப்பினராக, கழக உயர்நிலைச் செயல் திட்டக் குழு உறுப்பினராக என முத்திரை பதித்த அவரது உழைப்பும் தியாகமும் கழகத்தின் வரலாற்றுப் பக்கங்களில் பொன்னெழுத்துகளால் நிரம்பியிருக்கும்.

கடந்த 2021ஆம் ஆண்டு கழக முப்பெரும் விழாவில் அவருக்குக் கலைஞர் விருது வழங்கி வாழ்த்தினேன். இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் அவரது பேத்தியின் திருமண விழாவைத் தலைமை தாங்கி நடத்தி வைத்துப் பேசினேன். அதற்குள் அவரது மறைவுக்கு இரங்கல் சொல்லும் நாள் வந்துவிட்டதை எண்ணி மனம் வாடுகிறேன். கும்மிடிப்பூண்டி வேணு அவர்களது பிரிவால் வாடும் திருவள்ளூர் மாவட்ட மக்களுக்கும் கும்மிடிப்பூண்டி தொகுதி வாழ் மக்களுக்கும் அவரது குடும்பத்தினர்க்கும் கோடிக் கணக்கான கழக உடன்பிறப்புகளுக்கும் ஆறுதல் சொல்லி என்னை நானே தேற்றிக் கொள்ள முயல்கிறேன். கும்மிடிப்பூண்டி வேணு அவர்கள் என்றும் நம் நினைவுகளிலும் நெஞ்சங்களிலும் வாழ்வார்.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி சார்பில்

## "நீட்" தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம்!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொடங்கி வைக்கிறார்! சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

*காஞ்சிபுரம்,அக்.21-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் "நீட்" தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கத்தை அமைச்சர் தா.மோ.அன்பரசன் இன்று காலை பம்மலில் தொடங்கி வைக்கிறார். திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றுகிறார்.*

*கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி, கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி அறிவிப்பின்படி,*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவர் அணி சார்பில் "நீட்" தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம் தொடக்க விழா இன்று 21ஆம் தேதி காலை 9.30 மணி அளவில் மாபெரும் கையெழுத்து இயக்கம் தாம்பரம் மாநகரம் பம்மல் எஸ்.எஸ் திருமண மண்டபத்தில்,*

*மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் தலைமையிலும், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வீ . வி ஜ ய கு ம ா ர் , ப.இிராமமூர்த்தி, டி.கே கமலக் கண்ணன், கே. மணிகண்டன், கோ. ஜானகிராமன் ஆகியோர் முன்னிலையிலும்,*

*மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டி.பி.செந்தில் குமார் ஆகியோர் வரவேற்புரையிலும் நடைபெறவுள்ளது.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர், குறுசிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் விழாவில் கலந்து கொண்டு மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைக்கிறார்.*

*திராவிட இயக்க தமிழர்ப் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.*

*மாவட்ட கழக நிர்வாகிகள் த.துரைசாமி, இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, து.மூர்த்தி, வெ.விஸ்வநா தன், தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பெருந்திரளாக கலந்துக் கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.*

*கல்லூரி பள்ளி மாணவ மாணவியர்கள் இவ்விழாவில் கலந்துக் கொண்டு நீட்" தேர்வை எதிர்த்து கையெழுத்து இயக்க அட்டையில் கையெழுத்திட உள்ளனர்.*

---

### திரு.வி.க. நகர் - ஆலந்தூர் - பெருங்குடி மண்டலங்களில்

## மழைநீர் வடிகால் - சாலை சீரமைக்கும் பணிகள்!

### ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆய்வு!

*சென்னை,அக்.21-*

*வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க.நகர், ஆலந்தூர் மற்றும் பெருங்குடி மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், சாலைப் பணிகள் மற்றும் சாலை சீரமைப்புப் பணிகள் குறித்து கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நேற்று (20.10.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*பெருநகர சென்னை மாநகராட்சியில் 388 கி.மீ. நீளத்திற்கு 471 பேருந்து தட சாலைகள், 5,270 கி.மீ. நீளத்திற்கு 34,640 உட்புறச் சாலைகள் என மொத்தம் 5,658 கி.மீ. நீளத்தில் 35,111 சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 5,509 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.*

*மேலும், சேவைத் துறைகளான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு மின்சாரத்துறை, தனியார் நிறுவனங்களின் மூலம் கேபிள் ஒயர்கள் பதித்தல் மற்றும் கேஸ் பைப்லைன்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் 2,952 சாலைகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, 1,934 சாலைகளில் நிரந்தர சாலைப் பணிகள் மேற்கொள்ளவும், 527 சாலைகளில் தற்காலிக சாலைப் பணிகள் மேற்கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றில் நிரந்தரமாக சாலை அமைக்க ஒப்படைக்கப்பட்டுள்ள 1,934 சாலைகளில், 1,670 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு, 255 சாலைகளில் பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 9 சாலைகளில் நிரந்தர சாலைகள் அமைக்கும் பணி வரும் வாரத்தில் மேற்கொள்ளப்படும். தற்காலிகமாக சாலை அமைக்க ஒப்படைக்கப்பட்டுள்ள 527 சாலைகளில் 294 சாலைப் பணிகள் முடிவுற்று, 211 சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 22 சாலைப் பணிகள் வரும் வாரத்தில் மேற்கொள்ளப்படும்.*

*வெள்ள மேலாண்மை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 2,624 கி.மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில், கடந்த 2 ஆண்டுகளில் 685.68 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. இந்த நடப்பாண்டில் 170.65 கி.மீ. நீளத்தில் மழைநீர் வடிகால் பணிகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*மேலும், 14 முக்கியப் பகுதிகளில் 1007 மீ. நீளத்தில் உள்ள 44 இடைவெளிகள் மற்றும் கொசஸ்தலையாறு மற்றும் கோவளம் வடிநிலப் பகுதிகளில் 1115 மீ. நிளத்தில் உள்ள 30 இடைவெளிகளை சரிசெய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

*தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய மழைநீர் வடிகால்களில் 6,806 குழல் குழாய்கள் பொருத்தும் பணி (Chute pipes) மற்றும் 2,944 வண்டல் வடிகட்டித் தொட்டிகள் மற்றும் மழைநீர் வடிகால் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 1447.89 கி.மீ. நீளத்திலான மழைநீர் வடிகால்களின் தூர் வாரும் பணிகளும், சிறு பழுதுகளை சரிசெய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 16 கால்வாய்களில் ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றும் பணி 19,405 மீட்டர் நீளத்தில் முடிவடைந்துள்ளது. 10,385 மீட்டர் நீளத்தில் கழிவுகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுப்பணித்துறையின் சார்பிலும் நீர்நிலைகளில் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால், வண்டல் வடிகட்டித் தொட்டி, சாலை மற்றும் சீரமைப்புப் பணி, நீர்நிலைகளில் ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றும் பணி ஆகியவற்றை தொடர்ந்து கண்காணித்து சிறப்பாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*இதன் தொடர்ச்சியாக, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், பெருங்குடி மண்டலம், வார்டு 184க்குட்பட்ட கள்ளுக்குட்டை, பெரியார் சாலையில் சாலை வெட்டுக்கள் முடிவுற்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் பணியினைப் பார்வையிட்டு, அங்கு சாலை மற்றும் தெருக்களில் குப்பைகள் கொட்டப்பட்டுள்ளது குறித்து ஆய்வு செய்து, இதுகுறித்து பொதுமக்களிடம் கலந்துரையாடி விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.*



தேனி வடக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக செயற்குழுக் கூட்டம் தேனியில் மண்டபத்தில் மண்டபத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணை பொதுச் செயலாளர், ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

## ஏரியூர் ஒன்றியக் கழகச் செயலாளர் என்.செல்வராஜ் தாயார் என்.கண்ணம்மாள் மறைவு!

### தடங்கம் பெ.சுப்பிரமணி - பி.என்.பி.இன்பசேகரன் அஞ்சலி!

தருமபுரி, அக். 21 - தருமபுரி கிழக்கு மாவட்டம் ஏரியூர் ஒன்றியச் செயலாளர் என்.செல்வராஜ் தாயார் மறைவுக்கு கழகத்தினர் அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினர்.

தர்மபுரி கிழக்கு மாவட்டம் ஏரியூர் ஒன்றியக் கழகச் செயலாளர் என்.செல்வராஜ் தாயார் என். கண்ணம்மாள் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி, முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன் மற்றும் கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினர்.

# தமிழர்களின் அறம்!

என் இனிய தமிழ் சொந்தங்களே.....! 'திரும்பிப் பார்' - இது கலைஞரின் ஒரு படத்தின் தலைப்பு மட்டுமல்ல. திராவிடத் தமிழர்கள் அனைவரும் உணரவேண்டிய மகத்தான உண்மை. நாம் யார்? நமது அருமை பெருமை தெரியுமா உங்களுக்கு? திரும்பிப் பாருங்கள் தெரியும். மலைத்துப்போய் நின்றுவிடாதீர்கள். அத்தனை அரும்பெரும் சாதனைகளை நமது முன்னோர்கள் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள்! அவற்றைத் தெரிந்து கொண்டு வாருங்கள். நமது அடுத்த படியை அமைக்க அது ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தரும்.

லேசாக தூசு படிந்திருந்தால் துடைத்துக் கழுவி சுத்தம் செய்துவிடலாம். மாசு பழுத்து விட்டால் சுத்தம் செய்வது அசாத்தியமாகி விடும். திரையுலகம் தோன்றிய காலத்தில் அதன் அசுர பலத்தினை நன்கு புரிந்து கொண்டு.... கற்றுத் தேர்ந்திருந்த காரணத்தினால் மன்னர்களின் அமைச்சர்களாகவும் பின்வந்த வெளிநாட்டுக்காரர்களின் திவான்களாகவும் துபாஷ்கள் - கணக்காளர்களாகவும் -பணியாற்றி - அதனால் அதிகார வர்க்கமாக மாறியிருந்த அக்கிரஹாரத்து மைனாரிட்டி - சினிமா - நாடகம் - ஆடல்-பாடல்-அனைத்தையும் தங்கள் கையில் எடுத்து கோலோச்சி வந்தனர்.

எங்கேயாவது அத்தி பூத்தது போல் மற்ற இனத்தவர் இந்தத் துறைகளிலே வளர்ந்து விட்டால் அவர்களை எப்படியாவது வளைத்துப்போட்டு அவர்கள் குடும்பங்களில் இவர்கள் நுழைந்துவிடுவார்கள்-அல்லது அந்த திறமைசாலிகளை தங்கள் குடும்பங்களில் இணைத்துக்கொள்வார்கள். இதற்கு பல நூறு உதாரணங்களை சொல்ல முடியும்.

ஒரு உதாரணம் கானக்குயில் எம்.எஸ்.சுப்புலட்சுமி அம்மையார் அவர்கள் கிடையாது. போதுமா?



வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

இதேபோல் கலை உலகில் காட்டு தர்பார் நடத்திய மைனாரிட்டி இனத்தவரின் தன் எழுத்தால் வெற்றி கண்டு அவரின் திரைமொழியை அசல் தமிழ்மொழியாக மாற்றியமைத்த பெருமை முத்தமிழ் அறிஞருக்கு மட்டுமே உண்டு.

மைனாரிட்டி இனம் திரைப்படங்களில் மடமையையும் - புராணங்களையும் - மந்திர தந்திரங்களையும் - சனாதன தர்மத்தையும் - பரப்பி வந்த காலத்தில் தன் புரட்சிக் கருத்துக்களாலும் அனல் தெறிக்கும் அர்த்தம் பொதிந்த மிடுக்கான அடுக்கு மொழியாலும் தமிழ்மொழியை போக்கி மொழி வளர்க்கும் கடமையைச் செய்தவர் கலைஞர் அவர்கள். பராசக்திக்கு முன்பாக பல படங்கள் கலைஞரின் பயிற்சி அரங்கங்களாக காட்சி தந்தாலும் அவரின் 'பராசக்தி'க்குப் பின்னால் அவரின் திரைமொழி நம் இனத்தின் மொழி வளத்தை மாற்றி அமைத்ததை யாருமே மறுக்க முடியாது.

ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக் கோனே - காசு காரியத்தில் கண் வையடா தாண்டவக்கோனே என்ற வரிகளின் படி எழுதினார் கலைஞர்.

படத்தின் பெயரோ 'பராசக்தி' ஆனால் வசனத்தில் 'அது கல் போசாது' என ஒரு வசனம். தொடர்ந்து வந்த வசனம்- 'பூசாரியை தாக்கினேன். அவன் பக்தன் என்பதற்காக அல்ல. அவன் பக்தி பகல் வேஷம் ஆகிவிட்டதை கண்டிப்பதற்காக.' சென்சார் தடை போட முயன்றனர். அங்கிருந்த அதிகாரியும் மைனாரிட்டி இனத்தவரே!

அடுத்தொரு வசனம் - 'கோவில் கூடாதென்பதற்காக அல்ல! கோவில் கொடியவர்களின் கூடாரம் ஆகிவிக்கூடாது என்பதற்காக! இதிலே நாத்திகமோ தவறான கருத்தோ எங்கே இருக்கிறது? ஆத்திகத்தை காப்பாற்றும் கருத்தல்லவா இது?

அந்தப் பேசாத கல் பேசத் தொடங்கினால் என்ன பேசியிருக்கும் சொல்லுங்கள் பக்திமான்களே? இந்தப் பூசாரி போன்ற போலிகளால் எனக்கு கெட்ட பெயர் வருகிறது. அவனை தண்டியுங்கள். இதைப் போல் மதத்தின் பெயரால் தங்கள் சொந்த ஆசைகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்ற நினைப்பவர்களே உண்மையான நாத்திகவாதிகள் என அன்னை பராசக்தி சொல்லியிருக்க மாட்டாரா?

'கண்ணிலே அன்பிருந்தால் கல்லிலே தெய்வம் வரும்' என சொன்னவரும் ஒரு தமிழ் கவிஞரே! ஆன்மிகத்தை ஒரு கோட்பாடாக மதித்து வணங்கியது திராவிடம். ஆன்மிகத்தை தங்கள் சொந்த வளர்ச்சிக்கும் மற்றவர்களை அடக்கிவைக்கவும் பயன்படுத்தியது ஆரியம்!

பதவிகளை உதறிவிட்டு பக்தி வளர்க்க வந்தவர்கள் பலருண்டு தமிழர்களில்!

இளங்கோவடிகள் -சேக்கிழார் - மாணிக்கவாசகர் - இப்படிப் பெரும் வரிசையுண்டு. ஆரியத்தில் பதவிக்காக பக்தியை பயன்படுத்தியவர்களே அதிகம் உண்டு. சற்று சிந்தித்தால் தற்போது கூட இது உண்மை என்பதை கண்கூடாகப் பார்க்கலாம். பேசும் சக்தியை மனிதனுக்கு தந்துவிட்டு போசாத சிலைகளாக கோவில்களில் வீற்றிருக்கும் தெய்வங்களின் திருவிளையாடல்களை ஆரியம் தவறாக பயன்படுத்தியதனால்தான் நாத்திகம் பெருகியது. தெய்வங்களுக்கு ஜனநாயக நம்பிக்கை உண்டு. அவர்களுக்கு தெரியாதா மூன்று பெரிசா? தொண்ணூற்று ஏழு பெரிசா என்று. தமிழர்களை மதவிரோதிகளாக மூன்று சதவீதத்தினர் சித்தரிக்க நினைப்பது அறிவீனம். அன்பும் ஜோதியும் தமிழர்களின் அறமாகும்.

### குமரியில் உள்ள

# திருவள்ளுவர் சிலை இரவிலும் ஒளிரும் வகையில் ஏற்பாடு!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் பேட்டி !



சென்னை, அக். 21 - தமிழ்நாட்டிற்கு 2023 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் முடிய 8 மாதங்களில் 7,60,545 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், 19,11,87,624 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளார்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்தி ரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்தி ரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறைஅரசு முதன்மைசெயலாளர் டாக்டர். க.மணிவாசன் முதன்மை செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா பங்கேற்றனர்.

இக்கூட்டத்தை தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர்கா.ராமச்சந்திரன் அளித்த பேட்டி வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறிஉள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 ல் ஆகஸ்ட் மாதம் முடிய 8 மாதங்களில் 7,60,545 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022 ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் ஆகஸ்ட் மாதம் முடிய 8 மாதங்களில் 19,11,87,624 என உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில் கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர்சிலையைஇரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில்லேசர்தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் மேற்கொள்ளும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடம் ரூ.23.60கோடிமதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், பிச்சாவரம் சுற்று லாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், தருமபுரிமாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

முட்டுக்காடு படகு இல்லத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் 200 நபர்கள் அமரும் வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி விரைந்து நடைபெற்று வருகின்றது. மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் பொழுதுபோக்கிற்காக தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலான ஒளிரும் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தலமாக மாற்றும் பணிகள் ரூ.2.22 கோடி மதிப்பீட்டிலும், உதகை படகு குழாமில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் மரவீடுகள், மரத்தின் மேல் வீடுகள், குடில் வீடுகள் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஜவ்வாது மலையில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், ஏலகிரி மலையில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும், திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரியில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் படகுசவாரி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தும் பணிகளும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலையில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் சாகசசுற்றுலா, திறந்தவெளி முகாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன.

'தென்னிந்தியாவின் ஸ்பா" என்று அழைக்கப்படும் குற்றாலத்தை ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப் படுத்தும் பணிகளும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி ஆகிய சுற்றுலாத்தலங்களில் ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத்தல மேம்பாட்டு பணிகளும், தூத்துக்குடி கடற்கரையை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுக்கள் மற்றும் கடற்கரை விளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு பொழுது போக்கு அம்சங்கள் கொண்ட கடற்கரை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப் படுத்தும் பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரைப் பகுதியை ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் நீர் விளையாட்டுகள், கடற்கரை விளையாட்டு கள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படுத்தும் பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப்பணிகளை பணிகள் குறித்தகாலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்று லாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க.சார்பில் மாபெரும் பொது மருத்துவ முகாம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, அக். 21 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் கொண்டு மாபெரும் பொது மருத்துவ முகாம் நாளை (22.10.2023 ஞாயிற்றுக்கிழமை ) காலை 9 மணிக்கு, மாதவரம், 17 வது வட்டம், வடபெரும்பாக்கம் சென்னை மாநகராட்சி சமுதாய கூடத்தில் நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த மருத்துவ முகாமினை சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

கே.கருணாகரன், கே.அங்குசாமி, இ.கண்ணப்பன், கா.தாமரைச்செல்வன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்த மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு உயரம், எடை , இரத்த அழுத்தம், ரத்தத்தில் சர்க்கரை அளவு, இ.சி.ஜி, எக்கோ, தரமான மருத்துவர்களை கொண்டு பரிசோதனை மற்றும் இலவசமாக மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கே.பி. சங்கர், எம்.எல்.ஏ, நா.சந்திரபாபு, மிசா மதிவாணன், வி.இராமநாதன், வி.கண்ணதாசன், வீ.கவி.கணேசன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், தி.மு.தனியரசு, ஜி.துக்காராம், ஏ.வி. ஆறுமுகம், பெ.சரவணன், வை.மா.அருள்தாசன், மி.வே.கருணாகரன், ஜி. தயாளன், ஜி.ராஜேந்திரன், ஜெ.ஜெய் மதன், என்.பரந்தாமன், ராஜி, இரா.முருகேசன், பி.சாந்தி, ஆர்.டி.மதன் குமார், எம்.எம்.செந்தில், வி.தியாகராஜன், சி.ஏழுமலை, எஸ்.எ.சீனிவாசன், எம்.கோமளவள்ளி, அம்மு மூர்த்தி, பி.வெங்கடேசன், பி.முனியாண்டி, து. கோபால், லட்சுமி காந்தன், ஜி.தேவநேசன், ஏ.சுந்தர் ராஜ், கு.தமிழ்மணி, ஆர். பி.குமார், சு.மதிவாணன், க.காசிநாதன், சி.கோவிந்தராஜ், ரா.மோகனசுந்தரம், கே.ரவிக்குமார், ஜே.அபுல் ஹசன், வி.திராவிட வீரன், க.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ்.கவுரி, ஆர்.முரளி, பி.தரணி, காசிநாதன், பி.நிர்மல்குமார், சே.செல்வன், நா. மோகன் குமார் நாகூர், வி.கார்த்திகேயன், பா.சந்திரன், கே.ராஜா, நந்தினி சண்முகம், எம்.என்.அஜய் தென்னவன், ஏ.விஜயன், யுவராஜ், என்.கவிதா நாராயணன்,

சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், கேபிள் தா.கணேசன், மு. சதீஷ்குமார், டி.ஜி.ஆர். மணிவண்ணன், ஜி.கே. இனியன், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, கே.ஏழுமலை, எஸ்.உதயகுமார், பா.கோபிநாத், பி.குணசேகர், எஸ். சிவக்குமார், எச்.பீர்முகமது, கே.சண்முகப்பிரியன், ஜி.சேகர், சி.அருணாசலம், பி.ஜெயராஜ், கே.தசரதன் , ஏ.முகமதுவசீம், மனோகரன், டி.வினோத், ஜி.ராஜ்குமார், எம்.அமுதா மணிராஜ், எஸ்.கலைச்செல்வி, ஆர். சுதா, யுவராணி, எம்.காந்தா, எஸ்.கருணாகரன், டி.அமிர்தராஜ், பி.துரைசாமி, ஜெய் சங்கர், தங்கராஜ், கே.சரவணன், பேன்சி ரமேஷ், மணி கண்டன், ஏ.சுதா செல்வி ரூபினி, வெங்கடேசன், சந்திரன், தா.விக்னேஸ்வரன், மா.குமணன், என்.பிரபு, ஆ.சசிதரன், ஆர்.பி.சௌந்தரராஜன், ஆ.கோவிந்தராஜ், சி.டி.ஸ்டாலின், சி.பாலாஜி, பி.லதா, வி.பார்த்தசாரதி, சு.சுகேந்திரன், ந.குமார், சி.மூர்த்தி, கு.ராஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.



தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. இல்ல உதவியாளரும் காலஞ்சென்ற தாம்பரம் நகர கழக பொருளாளருமான மூ.விஸ்வநாதன் மூத்த மகன் கழகத்தின் மீதும் முத்தமிழறிஞர் கலைஞர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் மாறாத பற்று கொண்ட கழகத்தின் முத்த முன்னோடியுமான வி.வெங்கடேசன் (எ) ராஜி (20.10.2023) நேற்று இயற்கை எய்தினார். தகவலறிந்து தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி மரியாதை செய்தார். உடன் மண்டலத் தலைவர்கள் டி.காமராஜ். எஸ்.இந்திரன் மற்றும் கழக முன்னோடிகளும் பொது மக்களும் கலந்து கொண்டு இறுதி மரியாதை செய்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கட்டுரைப் போட்டி!

## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்கல்! வானவில் விஜய் தலைமை!

சென்னை, அக். 21 சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாணவ மாணவியர்களுக்கான கட்டுரை போட்டி நாளை (22.10.2023 (ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணிக்கு, சௌந்திர பாண்டியன் நாடார் பள்ளி, அயனாவரத்தில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் வானவில் விஜய் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் வே.வாசு கூ.பீ. ஜெயின் எம்.சி மற்றும் டி. வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விக்னேஷ் சீனிவாசன், ஏ.வேதா ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி சே.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, ஜெ.தங்கராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மாணவ மாணவியர்களுக்கான கட்டுரை போட்டியில் சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வி.கௌதமன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பகுதி மாணவர் அணி அமைப்பாளர்கள் டி.ஜான் கிராமன், எஸ்.எஸ்.மணி கண்டன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவேற்காடு அடுத்த கோலடியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் நகரப் பொருளாளர் ஜெ.சரவணன் ஏற்பாட்டில் பள்ளி மாணவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு அறுசுவை உணவுகளை வழங்கினார். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், வட்ட கழகச் செயலாளர் கே.பி.எஸ்.சுதாகர், மா.விநாயகம், துரைகோபால், நிர்வாகிகள் பி.ஜி.எம்.விநாயகம், என்.ராஜி, நாராயணன். நரேஷ், இளையராஜா, சுடலைமணி, ராஜா, விவேக்தனா, என்.சி.பிரவீன், ராஜினி, பொன்ராஜ், வி.ரமேஷ், பால்ராஜ், ஆனந்தகுமார், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### கட்சிப் பாகுபாடு கருதாது - அனைத்துத் தொகுதிகளிலும் மக்களுக்கு நாம் மகத்தான திட்டங்களை நிறைவேற்றுவது கண்டு

# எதிர்க்கட்சியினரே கழக ஆட்சியை மனமுவந்து பாராட்டுகிறார்கள்!

## கொளத்தூரில் கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, அக்.21-**

**கொளத்தூர் தொகுதியில், நேற்று மாலை, கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கி உரையாற்றிய முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “அரசியல் நோக்கம் சிறிதுமின்றி, கட்சிப் பாகுபாடு கருதாது அனைத்துத் தொகுதிகளிலும் நாம் மக்களுக்கு நிறைவேற்றி வரும் மகத்தான திட்டங்கள் கண்டு, எதிர்க்கட்சியினரே கழக அரசை மன முவந்து பாராட்டுகிறார்கள்!” என்று பெருமி தத்துடன் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.10.2023) கொளத்தூர் தொகுதியில் பல் வேறு நலத்திட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

பின்னர், ஜி.கே.எம். காலனியில் நடை பெற்ற நிகழ்ச்சியில், கழக மூத்த முன்னோடி களுக்குப் பொற்கிழி வழங்கி ஆற்றிய உரை வருமாறு:

மாவட்டக் கழகச் செயலாளர் சேகர் பாபு அவர்கள் இங்கே தொடக்கத்தில் பேசுகிற போது ஒன்றை குறிப்பிட்டுச் சொன்னார். கொளத்தூர் தொகுதி என்று சொன்னால், நான் எப்போது எல்லாம் வருகிறேனோ அப் போதெல்லாம் ஒரு எழுச்சியை - உணர்ச்சி யை-மகிழ்ச்சியைபுத்துணர்ச்சியை, நான் பெறக்கூடியவகையில், ஆறுநிகழ்ச்சிகளுக்குக் குறையாமல் பங்கேற்கிறேன். இன்றைக்கு எட்டாவது நிகழ்ச்சி, ஆனால் அவர் ஆறு என்று சொல்லிவிட்டார். அதில் ஒரே ஒரு திருத்தம்தான்.

மாலை தொடங்கிய நிகழ்ச்சிகள், ஏறக்கு றைய மூன்று மணி நேரமாக தொடர்ந்து, நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள் ளக்கூடிய வாய்ப்பைப் பெற்று, அரசு நிகழ்ச் சிகள் எல்லாம் முடித்துவிட்டு கழக நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். என்னதான் அரசுப் பொறுப் பில் இருக்கிறோம் என்று சொன்னாலும், அதற்குக் காரணம் கழகம்தான் என்பதை நாம் மறந்துவிட முடியாது. மாலை தொடங் கிய நிகழ்ச்சியை நான் எண்ணிப்பார்க்கி றேன். ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் இருந்தால் ஞாபகம் வைத்துச் சொல்லலாம். ஆனால் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்து விட்டு வந்திருக்கின்ற காரணத்தினால், அவைகளை எல்லாம் முன்கூட்டியே குறித்து வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன்.

- பல்லவன் சாலையில் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பில் கால்பந்தாட்ட ஆடுக ளம்; அதைத் திறந்து வைத்தேன்.
- அதைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் 8ஆவது தெருவில் 54 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலைத் திறந்து வைத்தேன்.
- ஜவகர் நகர் 1ஆவது சர்குலர் சாலை யில், தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா வைக் குறிப்பிடும் வகையில் கலைஞர் நூற் றாண்டு நினைவு கண் மருத்துவ மையம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.
- அனிதா அச்சீவர்ஸ் அகாடமி சார்பில் தையல் பயிற்சி மையம் திறந்து வைக்கப்பட் டிருக்கிறது.

அதற்குப் பின்னால், சட்டமன்ற அலுவல கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகள்;

அதாவது 55 பேருக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், சிலருக்கு மருத்துவ உதவிகள், இரண்டு இணையர்களுக்கு திருமண உதவிகள், ஒரு சிலருக்கு உதவி உபகரணங்கள்;

அதற்குப் பின்னால், இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னால், வி.வி.நகர் பகுதி யில், 33 புதிய மறுசீரமைப்புப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாக்கள். இவையெல்லாம் முடித்துவிட்டு நிறைவாக, இப்போது இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். மூத்த முன் னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கக்கூடிய நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

**உங்கள் வீட்டுப் பிள்ளையாய் நினைத்து - நீங்கள் வரவேற்கும் காட்சி!**

நினைத்துப் பார்க்கிறேன், ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தனித்தனியாக வைத்து மேடை போட்டு வைத்திருந்தால், இந்த நிகழ்ச்சிக்கு இந்த நேரத்திற்கு வந்திருக்க முடி யாது. அதனால் நேரத்தின் அருமை கருதி எனக்கு இருக்கக்கூடிய காலச் சூழ்நிலை கருதி, நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் அவர் களும், இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிர்வா கிகளும் அவைகளை எல்லாம் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் மேடையெல்லாம் போடாமல் எளிய வகையில், ஆனால் அதே நேரத்தில் இனிமையான வகையில் எழுச்சியோடு இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஏற்பாடு செய்து, அவைகளையெல்லாம் சீக்கிரமாக முடித்துவிட்டு நிறைவாக நடக்கக்கூடிய இந்த நிகழ்ச்சிக்கு உங்களிடத்தில் நான் வந்து சேர வேண்டும். அந்தவகையில்தான் நான் உங் களிடத்தில் நான் வந்து சேர்ந்திருக்கிறேன்.

அதனால்தான் தொடக்கத்தில் சொன் னேன். கட்சியால்தான் ஆட்சி. திராவிட முன் னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெறக்கூ டிய இந்த நிகழ்ச்சி, ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. குறைந்தபட்சம் பத்து நாட்களுக்கு ஒருமுறை நான் இந்தத் தொகுதிக்கு வருவதை வழக்க மாக வைத்திருக்கிறேன். அப்படி வரும்போ தெல்லாம், திறப்பு விழாக்கள், அடிக்கல் நாட்டு விழாக்கள், கட்சி நிகழ்ச்சிகள், திருமண நிகழ்ச்சிகள், திருமண ஜோடிகளின் இல்லத் திற்குச் சென்று வாழ்த்துச் சொல்வது, நம்மு டைய கழகத் தோழர்கள் யாராவது நம்மை விட்டுப் பிரிந்துவிட்டால், அவருடைய இல் லத்திற்குச் சென்று இரங்கல் தெரிவிப்பது, பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களைச் சென்று பார்ப்பது, சில இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்வது, இப்படி தொடர்ந்து இந்தப் பகுதி யில், இந்தத் தொகுதியில், செய்து கொண்டி ருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு உங் கள் வீட்டுப் பிள்ளையாய் என்னை நினைத்து நீங்கள் அன்போடு, பாசத்தோடு வரவேற்கக் கூடிய இந்தக் காட்சி இருக்கிறது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.10.2023) கொளத்தூர், ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் நடைபெற்ற விழாவில், கழக மூத்த முன்னோடிகள் 600 நபர்களுக்கு பொற்கிழி வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

*தம்பி உதயநிதி அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செல்கின்றபோது, அமைச்சராக இருக்கின்ற போதல்ல, அமைச்சராவதற்கு முன்னால், இளைஞரணியின் செயலாளராக என்றைக்குப் பொறுப்பு எடுத்துக் கொண்டாரோ அன்றிலிருந்து அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றால், எங்கேயாவது நிகழ்ச்சிக்கு தேதியைக் கேட்டார்கள் என்றால், “கட்சி முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவதாக இருந்தால் நான் வருகிறேன், அந்த நிகழ்ச்சிக்கு ஒன்று ஏற்பாடு செய்யவேண்டும், அத்துடன் பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறேன்” என்று சொல்லி, கட்டாயப்படுத்தி, அதை உறுதி செய்துகொண்டுதான் எந்த நிகழ்ச்சிக்கும் செல்கிறார். இந்த நேரத்தில். உள்ளபடியே பாராட்டவேண்டும். மகன் என்ற காரணத்திற்காக அல்ல, கட்சியின் முன்னோடிகளுக்கு உரிய மரியாதை அவர் வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பதற்காகத்தான் அவரை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

நான் காரில் வருகின்றபோது நம்முடைய மாவட்டச் செயலாளரிடத்திலும், மற்றவர்களி டத்திலும் சொல்லிக்கொண்டு வந்தேன். முத லமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு இந்தத் தொகுதிக்கு வருகின்றபோது, மனுக்களாக வந்து குவியும். அது குவியத் தொடங்கிய போது நம்மிடத்தில் மக்கள் இவ்வளவு எதிர் பார்க்கிறார்களே என்று, கொஞ்சம் பயம் வந் தது. நானும் அந்த மனுக்களை எல்லாம் பொறுமையாக வாங்கி, அதற்குப் பிறகு அலு வலகத்தில் உட்கார்ந்து பரிசீலித்து படிப்படியா கச் செய்ய ஆரம்பித்து, இன்றைக்கு மனுக் கள் ஒருமுறை வருகிறபோது 25 மனுக்கள் வந்தாலே பெரிய விஷயம், அந்த அளவுக்குக் குறைந்துவிட்டது.

**கோரிக்கை மனுக்களுக்கு விரைந்து தீர்வு!**

எதற்குச் சொல்கிறேன் என்றால், அந்த மனுக்களைத் தரக்கூடிய தோழர்கள், தாய்மார்கள், பெரியவர்கள், இளைஞர்கள், மகளிர், மாணவர்கள் ஆகியோர் எல்லாம் நம்பிக்கையோடு அந்த மனுக்களைத் தருகி றார்கள். அந்த மனுக்களைப் பெற்று எதற்கெல் லாம் தீர்வு காண முடிகிறதோ, அதற்கெல்லாம் தீர்வு கண்டு கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

கொளத்தூருக்கு வருவது என்றாலே, அதில் ஒரு தனி இன்பம். இதைச் சொல்வ தால் மற்ற தொகுதியைச் சார்ந்தவர்கள் யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. எல் லாத் தொகுதிக்கும் போவதால் எனக்கு இன் பம் கிடைக்கிறது. ஆனால் கொளத்தூர் வரு கிறபோது என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதியாயிற்றே என்ற அந்த உணர்வு வரும். மற்ற தொகுதிகளில் உள்ளவர்களும் நான்தான் முதலமைச்சராக வரவேண்டும் என்றுதான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

**வாக்களிக்காத மக்களும் மகிழ்ச்சி அடையும் வகையில் நடைபெறும் ஆட்சி!**

தேர்தலில் ஓட்டு போட்டீர்கள், ஓட்டு போட் டபிறகு, ஓட்டு எண்ணிக்கை நடந்தது, தமிழ் நாடு முழுவதும் யார் யாரெல்லாம் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்கின்ற போது, தேர்தலில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள் என்று இலயோலா கல்லூரி வாக்கு எண்ணும் மையத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. உடனே அச்சான்றிதழைப் பெற்றுக்கொண்டு நேரடியாக தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடத்திற்குதான் நாங்கள் சென்றோம். அந்த நினைவிடத்தில் தலைவர் கலைஞ ருக்கு நாங்கள் மரியாதை செய்துவிட்டு அங் கிருந்து புறப்படும்போது, நிருபர்கள் சூழ்ந்து கொண்டு என்னிடம் கேட்டார்கள். “ஆட்சிக்கு வரக்கூடிய அளவுக்கு உங்களுக்கு பெரும் பான்மை வந்துவிட்டது. நீங்கள் தான் ஆட்சி அமைக்கப் போகிறீர்கள். மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? இந்த வெற்றி யைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?” என்று கேட்டபோது, “மகிழ்ச்சி”, என்று ஒரு வார்த்தை சொன்னேன். எங்களுக்கு வாக்க ளித்தவர்களுக்காக நன்றி சொல்கின்ற அதே நேரத்தில் நீங்கள் வாக்களித்து சரியான நப ரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டும், அவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும். மகிழ்ச்சி அடையக்கூ டிய அளவிற்கு நாங்கள் பணியாற்றுவோம். அவர்கள் மட்டுமல்ல, வாக்களிக்காத மக்க ளும் மகிழ்ச்சி அடையக்கூடிய அளவிற்கு, ஆகா, இவர்களுக்கு ஓட்டுப்போடாமல் விட் டுவிட்டோமே என்று கவலைப்படக்கூடிய அளவிற்கு அவர்கள் பாராட்டவேண்டும். அதுதான் என்னுடைய குறிக்கோள் என்று சொன்னேன். அதுதான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் கண்கூ டாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், எவ் வளவோ திட்டங்கள், தேர்தல் நேரத்தில் அறி வித்த உறுதி மொழிகள் இவைகளை எல் லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம், காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம். செய்து முடித்துக் கொண்டிருக்கிறோம் என்பது உங் களுக்கு நன்றாகத் தெரியும். அதில் முக்கியமானது என்னவென்று கேட்டீர்கள் என்றால், அதை அறிவித்தபோதே, என் னோடு இருந்தவர்கள் “முடியுமா?” என்று கேட்டார்கள். “நடக்குமா?” என்று கேட்டார் கள். ஆட்சிக்கு வந்த பிறகு, “இது சாத்தியப்ப டுமா?” என்று கேட்டார்கள். அதுதான் குடும் பத் தலைவிகளுக்கு உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய திட்டம். உள் ளபடியே நானே பயந்தேன். காரணம், ஆட் சிக்கு வந்தபோது நிதி நிலவரத்தைப் பார்த் தால், அவ்வளவு மோசமாக இருந்தது. அதனால் நிறைவேற்ற முடியுமா? என்ற அச்சம் ஏற்பட்டது உண்மைதான். எல்லோ ருக்கும் ஏற்பட்டதுபோல எனக்கும் ஏற்பட்டது. ஆனால் நிதிநிலைமை ஓரளவிற்கு சரி செய்து, சீர்படுத்தி, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய நம் முடைய அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஐ தேர்ந்தெடுத்து அன்று முதல் வழங்கினோம், அக்டோபர் மாதமும் வழங்கப்பட்டுவிட்டது. இதில் என்ன பெரிய சிறப்பென்றால் செப்டம்பர் 15ஆம் நாளன்று தான் வழங்கப்படும் என்றுதான் அறிவித் தோம். ஆனால், 14ஆம் தேதி இரவே பணம் மகளிரின் வங்கிக் கணக்குக்குச் சென்றுவிட் டது. இப்போது அக்டோபர் 14 விடுமுறை, ஆனால் 13ஆம் தேதியே பணம் அவர்களுக் குச் சென்றுவிட்டது. எந்தவிதக் குறுக்கீடும் இடையில் கிடையாது. எந்தவிதத் தலையீ டும் கிடையாது. அந்தக் குடும்பத்தின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகப் போகக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்கின்ற அற்புதமான திட்டத்தை அறிவித் தோம். அந்தத் திட்டத்தின் நோக்கம் என்ன வென்று கேட்டால், 234 தொகுதிகள் இருக்கின் றன. ஆளும் கட்சி - தி.மு.க., எதிர்க்கட்சிஅ. தி.மு.க., நம்முடைய தோழமைக் கட்சிகள் காங்கிரஸ், இடது கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய முஸ்லீம் லீக், மனித நேய மக்கள் கட்சி, ம.தி.மு.க., வி.சி.க. போன்ற பல கட்சிகள் இருக்கின்றன. அது போல, எதிர்க்கட்சியாக அ.தி.மு.க.

234 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங் கிய ஒரு அவைதான் சட்டமன்றம். அந்த 234 தொகுதிகளிலும், அந்தந்தத் தொகுதி யில் இருக்கக்கூடிய எம்.எல்.ஏக்கள் விரும் பக்கூடிய 10 திட்டப்பணிகளை நீங்கள் தேர்ந் தெடுத்துக் கொடுத்தீர்கள் என்றால் அதை நிறைவேற்றிக் கொடுக்கிறோம் என்று ஒரு திட்டத்தை அறிவித்தோம். அந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுக் கொண்டி ருக்கிறது. அந்த “உங்கள் தொகுதியில் முத லமைச்சர்” என்ற திட்டத்தின்கீழ் எம்.எல். ஏக்கள் தெரிவு செய்கிறார்கள் என்றால் அந்த எம்.எல்.ஏ. தேர்வு செய்கிறபோது அது முடி யுமா, நடக்குமா என்று அந்தந்த மாவட்டத் தில் இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்க ளோடு கலந்து பேசி, ஆய்வு செய்து அதற்குப் பிறகு அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

**அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரே நமது அரசைப் பாராட்டுகிறார்!**

அந்த அடிப்படையில் 1896 கோரிக்கை களை அனுப்பினார்கள். அதில் இந்த ஆண் டுக்கு மட்டும் 788 பணிகளைச் செயல்படுத் தப் போகிறோம். இதற்காக 11ஆயிரத்து 239 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கி றது. வரும் ஆண்டில் 203 பணிகளை முடிப் பதற்காக 5 ஆயிரத்து 901 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் பத்திரிகையிலும், சமூக ஊடகங்களிலும் பார்த்திருப்பீர்கள். அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர், அவர் பாராட்டி செய்தி கொடுத்திருக்கிறார்.

“நான் பத்து கோரிக்கைகளை அனுப்பி வைத்திருக்கிறேன். அதில் 3 கோரிக்கை களை முதலமைச்சர் நிறைவேற்றிக் கொடுத் துவிட்டார். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்று வெளிப்படையாக அவர் சொல்லி இருக்கிறார். யாரென்று உங்களுக்குத் தெரி யும், தெரியும் அல்லவா? அதை நான் விளம் பரப்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால் அவருக்கு ஏதாவது பிரச்சனை வந்துவிடும். ஆனால், வெளிப்படையாக வந்துவிட்டது, அவர் வேறு யாரும் அல்ல, முன்னாள் அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர் கள். சில பேர் தொலைபேசியில் எனக்குத் தகவல் சொன்னார்கள்.

**பாரபட்சம் பாராமல் திட்டங்களை நிறைவேற்றுகிறோம்!**

இதை நான் சொல்வதற்குக் காரணம், கட்சி பாகுபாடு இல்லாமல் அரசியல் நோக் கத்தை எண்ணிப்பார்க்காமல், மக்களு டைய பிரச்சினை, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டி ருக்கக்கூடிய பிரதிநிதிகள் அவர்கள். மக்களின் பிரச்சினையை அடிப்படையாக வைத்து அவற்றையெல்லாம் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்.

நான் தொடக்கத்தில் சொன்னதுபோல, இதையெல்லாம் நிறைவேற்றுவதற்கு, இந் தப் பொறுப்பில் நான் உட்காருவதற்கு அந்த வாய்ப்பை மக்கள்தான் உருவாக்கித் தந்தார் கள். ஆனால் மக்கள் உருவாக்கித் தருவதற் காக ஓயாது உழைத்திருக்கக்கூடிய முன்னோ டிகள்தான் இந்த இயக்கத்தின் முன்னோடிகள், அதை மறந்திட முடியாது. இது இன்றல்ல, தி.மு.க. ஆட்சியில் இல்லாத நேரத்திலும், நான் இளைஞர் அணிச் செயலாளராக இருந் தபோது, கட்சியின் துணைப் பொதுச்செயலா ளராக இருந்தபோது, பொருளாளராக இருந் தபோது, செயல் தலைவராக இருந்தபோது, தலைவராக இருக்கும் இப்போதும் இந்தப் பணிகளைச் செய்து கொண்டிருந்தோம்; செய்து கொண்டிருக்கிறோம். ஏதோ புதிதாக செய்கின்ற நிகழ்ச்சி அல்ல இது.

**கழக முன்னோடிகளுக்கு மரியாதை! தம்பி உதயநிதியைப் பாராட்டுகிறேன்!**

இன்றைக்குக் கூட இளைஞரணியின் செயலாளர் தம்பி உதயநிதி அவர்கள் ஒவ் வொரு மாவட்டத்திற்கும் செல்கின்றபோது, அமைச்சராக இருக்கின்ற போதல்ல, அமைச் சராவதற்கு முன்னால், இளைஞரணியின் செயலாளராக என்றைக்குப் பொறுப்பு எடுத் துக் கொண்டாரோ அன்றிலிருந்து அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றால், எங்கேயாவது நிகழ்ச்சிக்கு தேதியைக் கேட் டார்கள் என்றால், “கட்சி முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவதாக இருந்தால் நான் வருகிறேன், அந்த நிகழ்ச்சிக்கு ஒன்று ஏற் பாடு செய்யவேண்டும், அத்துடன் பல நிகழ்ச் சிகளிலும் கலந்து கொள்கிறேன்” என்று சொல்லி, கட்டாயப்படுத்தி, அதை உறுதி செய் துகொண்டுதான் எந்த நிகழ்ச்சிக்கும் செல்கி றார். இந்த நேரத்தில். உள்ளபடியே பாராட்ட வேண்டும். மகன் என்ற காரணத்திற்காக அல்ல, கட்சியின் முன்னோடிகளுக்கு உரிய மரியாதை அவர் வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பதற்காகத்தான் அவரை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**கழக முன்னோடிகள்- எங்களுக்கு தொடர்ந்து அறிவுரை வழங்குங்கள்!**

அதேபோல இன்றைக்கு நீங்கள் எல்லாம் இல்லை என்றால், இந்தக் கட்சியே இல்லை. நீங்கள் எல்லாம் இந்த இயக்கத்தினுடைய வேர்கள். இந்த வேர்கள் தான் இன்றைக்கு மரமாக, கிளையாக வளர்ந்து, நாங்கள் எல் லாம் இந்தப் பொறுப்பில் இருக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட முன்னோடிகளை பெருமைப்படுத்துவதை ஏதோ ஒரு கடமையாக அல்ல, நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால்தான் இந்த இயக்கம் மகிழ்ச்சியாக இருக்க முடியும். நீங்கள் தெம் போடு இருந்தால்தான் இந்த இயக்கம் வளர முடியும். இந்த இயக்கம் வளர்ந்தால் மக்கள் நாட்டில் நலமாக வாழ்ந்திடமுடியும். அதற்கா கத்தான் இன்றைக்கு உங்களை ஊக்கப்ப டுத்த, உற்சாகப்படுத்த இந்த பொற்கிழி வழங் குகிறோம். உங்கள் பணி முடிந்துவிட்டது என்று உங்களை விட்டுவிடமாட்டோம். ஏதோ ஓய்வு கொடுத்துவிட்டார்கள் என்று நீங்கள் நினைத்து விடாதீர்கள். ஏனென்றால் தலை வர் கலைஞர் அவர்கள் என்னை அழைக்கிற போதெல்லாம், ஓயாமல் உழைக்கக்கூடிய உழைப்பாளி என்று பலமுறை என்னிடத்தில் சொல்லியிருக்கிறார். ஓயாமல் இன்றைக்கு உழைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இந்த இயக்கம் தான், மக்கள் தான் காரணம். ஆகவே, இன்னும் நீங்கள் எங்களுக்கு அறிவுரைகள், ஆலோசனை கள் தொடர்ந்து வழங்கிட வேண்டும். நீங்கள் பக்கபலமாக இருந்தால்தான், நாங்களும் கடமைகளை வேக வேகமாக நிறைவேற்ற முடியும். அந்த உணர்வோடுதான் உங்க ளைப் பெருமைப்படுத்துகிறோம். அதன் மூல மாக நாங்கள் பெருமைப்படுகிறோம். நாங் கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆகவேதான், அந்த நிலையில்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இது நம்மு டைய நிகழ்ச்சி, நம்முடைய தொகுதி, இது நம்முடைய குடும்ப விழா, அப்படிப்பட்ட விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடை கிறேன்.

**செயல்பாபு, சேகர்பாபுக்கு எனது இதயபூர்வமான நன்றி!**

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கக் கூடிய நம்முடைய கழக நிர்வாகிகள், பகுதிக் கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், குறிப் பாக ஒன்றே ஒன்று சொல்ல வேண்டும் என்று சொன்னால் நம்முடைய செயல் பாபு, சேகர் பாபு அவர்களுக்கு என்னுடைய இதய பூர்வமான நன்றியை இந்த நேரத்தில் தெரி வித்துக் கொண்டு உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியை யும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றினார்.

ந.கோபால் தலைமை! சரத்பாலா பங்கேற்பு!

# திருப்பெரும்புதூர் தெற்கில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

திருப்பெரும்புதூர், அக்.21

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம், மாத்தூர் ஊராட்சிக்கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நாளை (22.10.2023-ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு மாத்தூர் ஊராட்சியில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் ந.கோபால் தலைமை வகிக்கிறார்.

பெ.கோபிநாதன், ப.பரமசிவன், பெ.கிருஷ்ணன், பெ. அரிதாஸ் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

ஜி.ஆறுமுகம், எம்.ஜி. எம். சதீஷ், இரா.மோகன், க.ஆறுமுகம், ர.டில்லி பாபு, கோ.திவ்யா, க. ராஜேந்திரன், ந.சரவணன், வி.சந்தானம், ஏ. சித்ரா, அ.பால சுந்தரம், அ.ராஜேந்திரன், ச.கோபி, நா.முருகன், சு.வீரராகவன், கோ.லதா, ச.அரிகிருஷ்ணன், த.கோதண்டம், இ.ஜெயபால், மு. நாகராஜ், ஆர்.செல்வம், எம்.அரவிந்த், ஜி.சுரேந்தர் மற்றும் பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைக் கழகப் பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் த.துரைசாமி, அ.தமிழ்மாறன், ஆ.மனோகரன், எஸ்.டி.கருணாநிதி, மா.கணேஷ்பாபு, இரா. சதீஷ்குமார், மாலதி போஸ்கோ, ப.இராமமூர்த்தி, பாலா என்கிற பால்ராஜ், ஏ.மோகனன், க.ரவிச்சந்திரன், ஜெகன்குமார், ரஞ்சினி கன்னியப்பன், எஸ்.ஏ.சர்தார் பாஷா, பி.ஆர்.நேரு, ஜா. செந்தில் தேவராஜ், கு.ப.முருகன், எல்.டி. ஜார்ஜ், கோ.விநாயகமூர்த்தி, த.தணிகாசலம், இரா.அருண்பாரத் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

க.மருதுபாண்டி நன்றி கூறுகிறார்.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், இந்து சமய – அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். இதில் ஆசிரியர் நக்கீரன் கோபால், தலைமை கழகச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் நல வாரிய தலைவர் துறைமுகம் காஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபிநேசர், பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ். ராஜசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். பகுதி துணைச் செயலாளர் கே.ஆர். அபரஞ்சி, வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை ஆகியோர் நன்றி கூறினர்.

நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து இயக்கம்:

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முயற்சிக்கு வெற்றி நிச்சயம்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் அறிக்கை!

சென்னை, அக்.21-

தமிழ்நாடு அரசின் விளையாட்டுத்துறையை மேம்படுத்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீறிய முயற்சி போற்றுதலுக்குரியது எனவும், 'நீட்' எனும் அரக்கனை ஒழித்திட அவர் நடத்தும் கையெழுத்து இயக்கம் நிச்சயம் வெற்றிபெறும் எனவும், நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திருமதி ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மிக எளிமையான ஆட்சியாளர் என்ற பெயரை தமிழ்நாட்டு மக்கள் இடையே பெற்று இருக்கிறார். எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும் தமிழக மக்களின் நலன் ஒன்றையே பெரிதாக கருதி திராவிட இயக்கத்தின் கொள்கை வீரனாக மேடை பேச்சில் நல்லதை நல்லது என்றும் அல்லதை தீது என்றும் தனது பேச்சால் தீயாய் தெரிக்கவிட்ட உயரிய சிந்தனையும், எளிமையான குணமும் தமிழர்களின் நெஞ்சில் நீங்கா இடத்தை பெற்றுள்ளார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அனைத்து மாணவர்களும் விளையாட்டுத் துறை அவசியம்என்றுவிளையாட்டுத் துறையை மேம்படுத்தி விடுமுறை நாட்கள் என்று கூட பாராமல் விளையாட்டுத் துறை நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்து வருங்கால மாணவர்களை ஊக்குவித்து விளையாட்டுத் துறை மிக முக்கியம் என்பதை நிருபித்து உள்ளார்.

அதிகம் பேசுவதை விட, அதிக அளவு மக்களுக்கு நன்மை செய்வதையே நான் விரும்புகிறேன் என்று சூளுரைத்து தமிழகம் எங்கும் பம்பரமாய் சுழன்று வரும் அமைச்சர் என்பதில் யாரும் மறுக்க முடியாது.

இளைஞர்கள் இடையே விளையாட்டுப் போட்டிகள் நல்ல பண்புகளை வளர்த்து சிறப்பான குடிமகனை உருவாக்குவதில் தீவிரமாக செயல்பட்டு கிராமப்புரங்களிலும் இளைஞர்களின் திறமையை வெளிக்காட்டுவதில் கவனம் செலுத்துவதை மக்கள் மனங்களை வென்று தமிழக நம்பிக்கை நட்சத்திரமாக வருங்கால கழகத்தின் தூணாக இருந்து தமிழக முதல்வரின் பாதையை பின் பற்றி கட்சித் தொண்டர்களுக்கும் தமிழக மக்களுக்கும் தோழனாகவும் உள்ள அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெற்றி என்பது செயல்யாற்றுபவர்களுக்கு மட்டும் தான் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு நமது இளம் தளபதி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரவு பகல் என்றும் பாராமல் தமிழக அரசியலில் இதுவரை இல்லாத அளவில் வரலாற்று சாதனை நிகழ்த்தி வருகிறார்.

அது மட்டுமல்ல மாணவர்கள், இளைஞர்களை நல்வழிப்படுத்த எடுத்து வரும் முயற்சிகள் அனைவராலும் பாராட்டப்படுகிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் உயர்கல்வியில் வெற்றி பெற தடையாக இருக்கும் 'நீட்' எனும் கொடூரனை தூக்கி எறிய அமைச்சர் உதயநிதி நடத்தும் கையெழுத்து இயக்கம் நிச்சயம் வெற்றி பெறும். அவரின் பின் அணி வகுப்போம் என்றும், துணை நிற்போம் என்றும் நமது திராவிட இயக்கத்தின் தலைவர் திருமதி ஓவியம் ரஞ்சன் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் த.ஜெகதீசன் தலைமை!

# வேளச்சேரியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பாட்டுப் பட்டிமன்றம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - என்.ஆர்.இளங்கோ - தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, அக் 21-

சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் வேளச்சேரி மேற்கு பகுதியில் வழக்கறிஞர் த.ஜெகதீசன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் இயற்றமிழ் அரசர் கலைஞரைப் போற்றும் இன்னிசைப் பாட்டுப் பட்டிமன்றம் நாளை (22.10.2023, ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் என்.எம்.எஸ்.திருமண மண்டபம், வேளச்சேரி யில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக்கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், மூத்த வழிக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி, தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி.ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

தலைப்பு: டாக்டர் கலைஞரின் நிலைத்த புகழுக்கு நெடுங்காரணம் அவரின் அருந்தமிழ் படைப்பா? - அரசியல் படைப்பா? எனும் பாட்டு பட்டிமன்றத்தில்

அருந்தமிழ் படைப்பே! எனும் தலைப்பில் சொல்லரசி பேரா சு.சங்கீதா, சேலம் ஐஸ்வர்யா ஆகியோரும் அரசியல் படைப்பே! எனும் தலைப்பில் மணப்பாறை லலிதா பரமேஸ்வரி, காரைக்கால் யோதர்ஷினி ஆகியோரும் வாதிடுகின்றனர்.

நடுவராக - பேரா. பழனி செயல்படுகிறார்.

இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், துணைமேயர் மு.மகேஷ்குமார், ஜெ.எம்.எச்.அசன் மௌலானா, எம்.எல்.ஏ, ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ, ஏ.எம்.வி பிரபாகரராஜா, பெ.மணிமாறன், இரா. துரைராஜ், எஸ்.பாஸ்கரன், வே.ஆனந்தம், அரிமா சு. சேகர், கே.எஸ்.ரவிச்சந்திரன், ஜெ.பச்சையப்பன், சூர்யா வெற்றிக்கொண்டான், வீ.கவி.கணேசன், பி.பொன்னுசாமி, எம். ஜி.மதிவாணன், ச.முருகன், ஆர்.பாலாஜி, ஜெ.கார்த்திகேயன், எம்.ஜெய்கணேஷ், க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, காசிமுத்து மாணிக்கம், ரத்னா லோகேஸ்வரன், எஸ், குணசேகரன், த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுமிபாண்டியன், மகேஸ்வரி முருகவேல், பா.துரைகபிலன், எஸ். வி.ரவிச்சந்திரன், எம்.கிருஷ்ணமூர்த்தி, வி.இ.மதியழகன், மு.இராசா, கே.கண்ணன், நொளம்பூர் வே. ராஜன், துரைவீரமணி, ஜி. வெங்கடேசன்,

தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள்: சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஶ்ரீதரன், அ.அரிகிருஷ்ணன்,ஆர் பாலசுந்தரம், பி.ஜெ.பாஸ்கர், சைதை ச.சம்பத் உ.துரைராஜ், ப. ரவி, எஸ்.டி.தங்கராஜ், எம். கே.ஏழுமலை, மின்னல் கந்தப்பன், த.பஷீர், இராமபுரம் வ.செல்வகுமார், பி.எஸ். முருகேசன், ஆ.மகாதேவன்.

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: கழக த. ரமேஷ், அடையார். சி. சுரேஷ், சி. பரிமேலழகர், சைதை சாதிக் கனிமொழி தனசேகரன், பா. அருண்குமார், கொட்டிவாக்கம், எம். பார்த்திபன், அஞ்சல் ராமன், நா. முணிகண்டன், நிஷா சையத், மருத்துவர் அனிஷ், எம்.எஸ். ஹரிபாபு, எஸ். முகேஷ் கண்ணா, ஆர். சசிகுமார், வி. ராஜேஷ் மோகன். மாவட்ட இளைஞர் அணி துணை அழைப்பாளர்கள்: எம். விநாயகமூர்த்தி, ச.சங்கர்கணேஷ், ஆர். கிருஷ்ணகுமார், ஜெ.இ. பாண்டியன், கா.வீ. தியாகராஜன், ராமாபுரம் செ.ரவி, கோட்டூர் எஸ். பிரகாஷ்,

வேளச்சேரி மேற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: சி. புழனி, எம்.ஏ. சங்கர், பொ.த. எழில்வாணன், சே. மைதிலி, ந. டில்லிகுமார், அருணா வேலாயுதம், எஸ். சந்தானம், ஆ. ச. ஶ்ரீகாந்த், கே.சி. வனஜா, அ. ரவிகிருஷ்ணன்.

வேளச்சேரி மேற்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பொ த மதிவாணன், ஜி.பி.எஸ்.பாலசதீஷ், கே.என்.தாமோதரன், த.பார்த்திபன், தே.கோபி, க.பாரதிராசன், எஸ்.முருகேவேல், வி. சக்திவேல், வழக்கறிஞர் ம.தமிழரசு, பெ. ராஜி, அ.பாண்டியன், க. கணேஷ்குமார், மு.தனசேகர், வி.எம்.டி.ராஜாரமணன், எஸ். ஜெயக்குமார்.

வேளச்சேரி மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: ஆர். நாகராஜ், ஜெ.பவளவண்ணன், சி.முருகன், என்.நேசன், ஆ. வடிவேலன், வி.பார்த்தசாரதி, வி.ஜி. மோகன், க.பாலாஜி, ஜெ. சீத்தாபதி,சி.மணிவண்ணன், எ.வி.ரங்கா, கே.ஆர்.பி. பாண்டியன், வி.கோபால கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

கூட்ட ஏற்பாடு: சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி.

இறுதியாக மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர் அணி வா. திருக்குறளார் நன்றி கூறுகிறார்.






# தி.மு.க. இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி

# நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம்

## நாள் : 21.10.2023 சனிக்கிழமை, நேரம் : காலை 10 மணி

அடிமை அ.தி.மு.க. அரசின் உதவியுடன் நீட் தேர்வைத் திணித்து மருத்துவர் ஆக வேண்டும் என்ற நம் மாணவர்களின் கனவைச் சிதைக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்யக்கோரியும் இன்று மாபெரும் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்க உள்ளோம். 50 நாட்களில் 50 லட்சம் மக்களின் கையெழுத்துகளைப் பெற வேண்டும் என்ற இலக்குடன் தொடங்கப்படவுள்ள இவ்வியக்கத்தில் அனைவரும் பங்கேற்று, நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தை மக்கள் இயக்கமாக வலுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்தக் கையெழுத்து இயக்கத்தை கழகத்தின் மூன்று அணி செயலாளர்களான நாங்கள், இன்று சென்னையில் தொடங்கும் அதே வேளையில் தமிழ்நாட்டின் அனைத்துக் கழக மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையில், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாநில நிர்வாகிகள் முன்னிலையில் இக்கையெழுத்து இயக்கம் தொடங்கடப்பட உள்ளது.

இதில் ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் ஒரு சிறப்புப் பேச்சாளர் பங்கேற்று, நம் மாணவர்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் நீட் தேர்வு குறித்தும் அதன் பின்னால் உள்ள அரசியல் குறித்தும் மக்களுக்கு எடுத்துரைக்க உள்ளனர். கழக மாவட்ட வாரியாகப் பேசவுள்ள பேச்சாளர்களின் விவரம் வருமாறு:-

| வ. எண் | கழக மாவட்டம் | இடம் | கருத்துரையாளர்கள் |
|---|---|---|---|
| 1 | சென்னை மாவட்டக் கழகங்கள் | கலைவாணர் அரங்கம், சென்னை. | • ஆ.ராசா எம்.பி., கழகத் துணைப் பொதுச் செயலாளர்.<br>• பிரின்ஸ் கஜேந்திரபாபு, பொதுச் செயலாளர், பொதுப் பள்ளிகளுக்கான மாநில மேடை.<br>• ‘தமிழ்க் கேள்வி’ செந்தில்வேல், ஊடகவியலாளர்.<br>• வழக்கறிஞர் மதிவதனி, துணைப் பொதுச் செயலாளர், திராவிடர் கழகம்.<br>• மணிரத்தினம், நீட் போராளி அனிதாவின் சகோதரர். |
| 2 | திருவள்ளூர் கிழக்கு | பழனி பிரேமலதா திருமண மண்டபம், திருவள்ளூர் சாலை, ஊத்துக்கோட்டை. | • ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. செயலாளர், ஆதிதிராவிடர் நலக்குழு |
| 3 | திருவள்ளூர் மேற்கு | ஐ.ஆர்.என் திருமண மண்டபம், திருவள்ளூர். | • பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், செயலாளர், தலைமைக் கழகச் செய்தித் தொடர்புக்குழு |
| 4 | திருவள்ளூர் மத்திய | ஜெய் கிறிஸ் திருமண மண்டபம், பட்டாபிராம். | • டி.கே.எஸ்.இளங்கோவன், தலைவர், தலைமைக் கழகச் செய்தித் தொடர்புக்குழு |
| 5 | காஞ்சிபுரம் வடக்கு | எஸ்.எஸ்.மஹால் திருமண மண்டபம், பம்மல். | • பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பொதுச்செயலாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை. |
| 6 | காஞ்சிபுரம் தெற்கு | சுந்தர் மஹால் திருமண மண்டபம், ஜி.எஸ்.டி சாலை, வடக்கு பைபாஸ், மதுராந்தகம். | • சுகுணா திவாகர், பத்திரிகையாளர். |
| 7 | இராணிப்பேட்டை | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை. | • சூர்யா சேவியர், எழுத்தாளர். |
| 8 | திருப்பத்தூர் | கிருஷ்ணாலயா திருமண மண்டபம், ஆம்பூர். | • வழக்கறிஞர் சிவஜெயராஜ், இணைச் செயலாளர், தலைமைக் கழகச் செய்தித் தொடர்புக்குழு. |
| 9 | வேலூர் | மாவட்டக் கழக அலுவலகம், வேலூர். | • டி.செங்குட்டுவன், செயலாளர், அமைப்புசாரா ஓட்டுநர் அணி. |
| 10 | கிருஷ்ணகிரி கிழக்கு | சுபம் ஹால், வெங்கடேஸ்வரா காம்ப்ளக்ஸ், பெங்களூர் மெயின் சாலை, கிருஷ்ணகிரி. | • குடியாத்தம் குமரன், துணைச் செயலாளர், கழகக் கொள்கைப் பரப்புக்குழு. |
| 11 | கிருஷ்ணகிரி மேற்கு | மீரா மஹால், சப்ஜெயில் ஏதிரில், ரயில்வே சாலை, ஒசூர். | • டான் அசோக், எழுத்தாளர். |
| 12 | தருமபுரி கிழக்கு | தளபதி அரங்கம், மாவட்டக் கழக அலுவலகம், தருமபுரி. | • கொளத்தூர் மணி, தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம். |
| 13 | தருமபுரி மேற்கு | நாராயணசாமி கவுண்டர் திருமண மண்டபம், பாப்பிரெட்டிப்பட்டி பேருந்து நிலையம் அருகில், சேலம் பிரதான சாலை. | • கரூர் முரளி, துணைச் செயலாளர், கழகக் கொள்கைப் பரப்புக்குழு. |
| 14 | விழுப்புரம் வடக்கு | வள்ளி அண்ணாமலை திருமண மண்டபம், திருவண்ணாமலை சாலை, செஞ்சி. | • எஸ்.கே.பி..கருணா, செயலாளர், பொறியாளர் அணி. |
| 15 | விழுப்புரம் தெற்கு | சூர்யா பொறியியல் கல்லூரி, விக்கிரவாண்டி. | • மாண்புமிகு அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழகத் துணைப் பொதுச் செயலாளர். |
| 16 | சேலம் கிழக்கு | தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், ஆத்தூர் பிரதான சாலை, வாழப்பாடி. | • சையத் ஹபீஸ் சித்திக், துணைச் செயலாளர், தலைமைக் கழகச் செய்தித் தொடர்புக்குழு. |
| 17 | சேலம் மத்திய | தெய்வீக மண்டபம், அழகாபுரம், சேலம். | • இந்திரகுமார் தேரடி, ஊடகவியலாளர். |
| 18 | சேலம் மேற்கு | நடராஜ் மஹால் திருமண மண்டபம், அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பின்புறம், எடப்பாடி. | • பா.ம.மகிழ்நன், ஊடகவியலாளர். |
| 19 | நாமக்கல் கிழக்கு | ஸ்ரீமஹால் திருமண மண்டபம், திருச்சி சாலை, நாமக்கல். | • எஸ்.தரணிதரன், துணைச் செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி. |
| 20 | நாமக்கல் மேற்கு | செங்குந்தர் திருமண மண்டபம், சட்டையம்புதூர், தேவனாங்குறிச்சி சாலை, திருச்செங்கோடு. | • மாண்புமிகு அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், துணைத் தலைவர், ஆதிதிராவிடர் நலக்குழு. |
| 21 | ஈரோடு வடக்கு | ஸ்ரீ குமரன் மஹால் திருமண மண்டபம், திப்புசுல்தான் சாலை, சத்தியமங்கலம். | • வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, இணைச் செயலாளர், தலைமைக் கழகச் செய்தித் தொடர்புக்குழு |
| 22 | ஈரோடு தெற்கு | ஏ.ஆர்.ஆர் மஹால் திருமண மண்டபம், பூந்துறை சாலை, ஈரோடு. | • தமிழ் காமராசன், தமிழ் ஆராய்ச்சி மாணவர். |
| 23 | திருப்பூர் வடக்கு | இராமசாமி முத்தம்மாள் திருமண மண்டபம், பல்லடம் சாலை, திருப்பூர். | • எம்.எம்.அப்துல்லா, எம்.பி., செயலாளர், அயலக அணி. |
| 24 | திருப்பூர் தெற்கு | சிவரஞ்சனி மஹால் திருமண மண்டபம், தாராபுரம். | • புலவர் செந்தலை ந.கவுதமன், புரவலர், மாநில இலக்கிய அணி. நெறியுரைஞர், தமிழ் இணையக் கல்விக்கழகம். |
| 25 | நீலகிரி | கலைஞர் அறிவாலயம், மாவட்டக் கழக அலுவலகம், உதகை. | • வழக்கறிஞர் வெண்மணி, செயலாளர், திராவிடர் தமிழர் கட்சி. |
| 26 | கோயம்புத்தூர் வடக்கு | ஸ்ரீ பாலாஜி மஹால் திருமண மண்டபம், வீரபாண்டி பேரூராட்சி அலுவலகம் அருகில். | • வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, தலைவர், மாணவர் அணி. |
| 27 | கோயம்புத்தூர் மாநகர் | ஹோட்டல் கிஸ்கால் டாடாபாத், கோயம்புத்தூர். | • திருச்சி என்.சிவா, எம்.பி., செயலாளர், கழகக் கொள்கைப் பரப்புக்குழு. |
| 28 | கோவை தெற்கு | ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வி.கே திருமண மண்டபம், பெரிய நெகமம். | • வழக்கறிஞர் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., இணைச் செயலாளர், சட்டத்துறை. |
| 29 | கரூர் | பிரேம் மஹால் திருமண மண்டபம், கோவை சாலை, கரூர். | • வே.மதிமாறன், எழுத்தாளர். |
| 30 | திருச்சி வடக்கு | பிரம்மேந்திரா மஹால் திருமண மண்டபம், காட்டுப்புத்தூர், திருச்சி. | • கவிஞர் சல்மா, இணைச் செயலாளர், தலைமைக் கழகச் செய்தி தொடர்ப்புக்குழு. |
| 31 | திருச்சி மத்திய | கழக முதன்மைச் செயலாளர் அலுவலகம், சாஸ்திரி சாலை, திருச்சி. | • ஏ.எஸ்.வி.பிரகதீஷ்வரன், மாநில துணைப் பொதுச் செயலாளர், த.மு..எ.க.ச., புதுகை பூபாளம் கலைக்குழு. |
| 32 | திருச்சி தெற்கு | ரவி மினி ஹால், கரூர் பைபாஸ் சாலை, திருச்சி. | • மாண்புமிகு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டக் கழகச் செயலாளர். |
| 33 | பெரம்பலூர் | மாவட்டக் கழக அலுவலகம், பாலக்கரை, பெரம்பலூர். | • நெல்லிக்குப்பம் புகழேந்தி, இணைச் செயலாளர், கழகக் கொள்கைப் பரப்புக்குழு. |
| 34 | அரியலூர் | குழுமூர் அனிதா திடல், செந்துறை ஒன்றியம், அரியலூர். | • மாண்புமிகு அமைச்சர், எஸ்.எஸ்.சிவசங்கர், மாவட்டக் கழகச் செயலாளர். |
| 35 | கடலூர் கிழக்கு | கிருஷ்ண மஹால் திருமண மண்டபம், காட்டுமன்னார்கோயில். | • வழக்கறிஞர் சரவணன், உறுப்பினர், கழகத் தணிக்கைக் குழு. |
| 36 | கடலூர் மேற்கு | தொ.மு.ச அலுவலகம், நெய்வேலி. | • ஆர்.எஸ்.பாரதி, கழக அமைப்புச் செயலாளர். |
| 37 | மயிலாடுதுறை | விஜய் மகால் திருமண மண்டபம், மயிலாடுதுறை. | • தூத்துக்குடி சரத்பாலா, மாவட்ட அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, தூத்துக்குடி வடக்கு. |
| 38 | நாகப்பட்டினம் | யாழிசை திருமண மண்டபம். நாகப்பட்டிணம். | • ஆரணி மாலா, மாவட்டத் துணை அமைப்பாளர், இலக்கிய அணி, திருவண்ணாமலை வடக்கு. |
| 39 | தஞ்சாவூர் வடக்கு | ஆர்.ஏ.எஸ். பெரியநாயகி மகால் திருமண மண்டபம், கும்பகோணம். | • டாக்டர் யாழினி பி.எம். சமூக வலைத்தளப் பொறுப்பாளர், மகளிர் அணி. |
| 40 | தஞ்சாவூர் மத்திய | அண்ணா நூற்றாண்டு வளாகம், தஞ்சாவூர். | • குமரி விஜயகுமார், இணைச் செயலாளர், மகளிர் அணி. |
| 41 | தஞ்சாவூர் தெற்கு | ஜி.என்.பி திருமண மஹால், பட்டுக்கோட்டை. | • கந்திலி கரிகாலன், தலைமைக் கழகப் பேச்சாளர். |
| 42 | திருவாரூர் | பொன் தமிழ் திருமண மண்டபம், விளமல், திருவாரூர். | • அனிச்சம் கனிமொழி, ஈரோடு மாநகர அமைப்பாளர், மகளிர் அணி. |
| 43 | புதுக்கோட்டை வடக்கு | கற்பக விநாயகா மகால் திருமண மண்டபம், புதுக்கோட்டை. | • மருத்துவர் கலாநிதி வீராச்சாமி, எம்.பி., தலைவர், அயலக அணி. |
| 44 | புதுக்கோட்டை தெற்கு | எஸ்.ஆர்.மகால் திருமண மண்டபம், புதுக்கோட்டை. | • அ.சுபேர்கான், செயலாளர், சிறுபான்மை நல உரிமைப்பிரிவு. |
| 45 | திண்டுக்கல் கிழக்கு | வி.ஜி.எஸ் மீட்டிங் ஹால், எஸ்.பி.கேம்ப் அலுவலகம் அருகில், திண்டுக்கல். | • நாகை திருவள்ளுவன், தலைவர், தமிழ்ப் புலிகள் கட்சி. |
| 46 | திண்டுக்கல் மேற்கு | வி.வி.மஹால் திருமண மண்டபம், ஒட்டன்சத்திரம். | • வி.பி.இராசன், இணைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலக்குழு. |
| 47 | சிவகங்கை | கே.எஸ்.எம்.மகால், சிவகங்கை. | • பேராசிரியர் சபாபதிமோகன், செயலாளர், கழகக் கொள்கைப் பரப்புக்குழு. |
| 48 | மதுரை வடக்கு | குறிஞ்சி திருமண மண்டபம், யாதவா மகளிர் கல்லூரி அருகில், திருப்பாலை. | • கம்பம் பெ.செல்வேந்திரன், செயலாளர், மாநிலத் தேர்தல் பணிக்குழு. |
| 49 | மதுரை மாநகர் | கோபால்சாமி திருமண மஹால், பைக்காரா, திருப்பரங்குன்றம் பிரதான சாலை, மதுரை. | • கவிஞர் மனுஷ்யபுத்திரன், ஆலோசகர், தகவல் தொழில்நுட்ப அணி. |
| 50 | மதுரை தெற்கு | வி.எஸ்.ஆர். திருமண மஹால், உசிலம்பட்டி சாலை, திருமங்கலம். | • கோவி.செழியன், அரசு கொறடா, இணைத் தலைவர், மாநில வர்த்தகர் அணி. |
| 51 | தேனி வடக்கு | தனலட்சுமி மகால் திருமண மண்டபம், வீரபாண்டி பேரூர். | • பொன்.முத்துராமலிங்கம், கழக உயர்மட்ட செயல்திட்டக்குழு உறுப்பினர். |
| 52 | தேனி தெற்கு | கவிப்பிரியா திருமண மண்டபம், சின்னமனூர். | • மருத்துவர் சஃபி, துணைச் செயலாளர், சுற்றுச்சூழல் அணி. |
| 53 | விருதுநகர் வடக்கு | ராஜ்கோ மஹால், திருச்சுழி சாலை, காந்தி நகர், அருப்புக்கோட்டை. | • மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டக் கழகச் செயலாளர். |
| 54 | விருதுநகர் தெற்கு | சிவகாசி பேப்பர் வியாபாரிகள் சங்கம், ஜவஹர்லால் நேரு சாலை, சிவகாசி. | • திண்டுக்கல் ஐ.லியோனி, செயலாளர், கழகக் கொள்கைப் பரப்புக்குழு. |
| 55 | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் மஹால், பாரதி நகர், இராமநாதபுரம் | • முனைவர் ஜெயரஞ்சன், துணைத்தலைவர், மாநிலத் திட்டக்குழு. |
| 56 | தூத்துக்குடி வடக்கு | கனி பேலஸ் திருமண மண்டபம், தூத்துக்குடி. | • புதுக்கோட்டை விஜயா, தலைமைக் கழகப் பேச்சாளர். |
| 57 | தூத்துக்குடி தெற்கு | கே.டி.எம். மஹால் திருமண மண்டபம், திருச்செந்தூர். | • பொள்ளாச்சி சித்திக், துணைச் செயலாளர், தலைமைக் கழகச் செய்தித் தொடர்புக்குழு. |
| 58 | திருநெல்வேலி கிழக்கு | பி.ஆர்.மஹால் திருமண மண்டபம், வள்ளியூர். | • சேலம் சுஜாதா, பிரச்சாரக் குழுச் செயலாளர், மகளிர் அணி. |
| 59 | திருநெல்வேலி மத்திய | வீரபாண்டியன் மஹால் திருமண மண்டபம், பாளையங்கோட்டை. | • சைதை சாதிக், மாவட்ட அமைப்பாளர், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, சென்னை தெற்கு. |
| 60 | தென்காசி வடக்கு | ஜெயசாந்தி மகால், ரயில்வே பீடர் சாலை, சங்கரன்கோவில். | • முனைவர் செ.சுந்தரவள்ளி, மாநில துணைச் செயலாளர், த.மு.எ.க.ச. |
| 61 | தென்காசி தெற்கு | சேனைத் தலைவர் திருமண மண்டபம், ஐந்தருவி சாலை, குற்றாலம். | • திருஞானம், ஆசிரியர், ‘புன்னகை’ கல்வி மாத இதழ். |
| 62 | கன்னியாகுமரி கிழக்கு | சிவகாமி அம்மாள் திருமண மண்டபம், வடசேரி, நாகர்கோவில் | • சூரியா கிருஷ்ணமூர்த்தி, எழுத்தாளர். |
| 63 | கன்னியாகுமரி மேற்கு | வசந்த மாளிகை ஆடிட்டோரியம், சாமியார் மடம். | • கா.அமுதரசன், துணைச் செயலாளர், மாணவர் அணி. |

மாண்புமிகு முதலமைச்சர்-கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட மாவட்டக் கழகங்களின் பாக முகவர்கள் கூட்டம் திருவண்ணாமலையில் 22-10-2023, ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதால் திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு மற்றும் தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களுக்கான கையெழுத்து இயக்கம் தொடக்க நிகழ்ச்சி, வேறொரு நாளில் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர் தி.மு.க. இளைஞர் அணி

**சி.வி.எம்.பி.எழிலரசன்**
செயலாளர் தி.மு.க. மாணவர் அணி

**எழிலன் நாகநாதன்**
செயலாளர் தி.மு.க. மருத்துவ அணி

சென்னை – 18.

நாள் : 20–10–2023.





# NEET SIGNATURE MOVEMENT

நாள் : 21.10.2023 – இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை.




நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி
மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைக்க வருகை தரும்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்

# இளம் தலைவர்

*அவர்களே வருக! வருக!!*

அன்புடன்
**தூத்துக்குடி எஸ்.ஜோயல்**
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்



**மாணவர்களே ஒன்று கூடுவோம்! வென்று காட்டுவோம்!!**


#WING2POINTO
சமூக வலைத்தள
தன்னார்வலர்கள் சந்திப்பு
நிகழ்விற்கு வருகை தரும்
கழகத் தலைவர், திராவிட நாயகன்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை
தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பாக
வருக வருக என
வரவேற்கிறோம்!
விங் 2.0
DMK IT WING
திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள்
கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்,
மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (ம)
வர்த்தகத்துறை அமைச்சர்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.10.2023) கொளத்தூர், ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் நடைபெற்ற விழாவில், கழக மூத்த முன்னோடிகள் 600 நபர்களுக்கு பொற்கிழி வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.10.2023) கொளத்தூர், ஜவஹர் நகர், சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள், பயனாளிகளுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில்

# தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திறன் மேம்பாடு குறித்த ஆய்வுக் கூட்டம்!

## பின்லாந்து நாட்டு அமைச்சர் முன்னிலை வகித்தார்!

சென்னை, அக்.21-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தலைமையில் நேற்று (20.10.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கூட்ட அரங்கில், பின்லாந்து நாட்டு கல்வி அமைச்சர் திருமதி அனா மஜா ஹென்ரிக்சன் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திறன் மேம்பாட்டு முனைப்புகள் குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு முன்னதாக பின்லாந்து குழுவினர் அம்பத்தூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டு வரும் திறன் பயிற்சிகளை பார்வையிட்டனர். டாடா குழுமத்துடன் இணைந்து 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உருவாக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தரத்திலான தொழில்நுட்ப மையங்களில் அம்பத்தூரில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப மையத்தையும், அசோக் லேலண்ட், மாருதி சுசுகி ஆகிய நிறுவனங்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பப் பணிமனைகளையும் பார்வையிட்டார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உலக அளவில் தகுதியான வேலைவாய்ப்பை பெறுவதற்கு திறன் பயிற்சி வழங்குவது ஒரு முக்கிய காரணியாக திகழ்கிறது. தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களை வறுமை நிலையிலிருந்து உயர்த்துவதற்கும், பொருளாதார பல்வகைப்படுத்துதல் மற்றும் உற்பத்தி பிரிவுகளை கொண்ட கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் தமிழ்நாட்டில் பல்வேறு திறன் மேம்பாட்டு முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் இந்தாண்டு 30,200 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு அதிகபட்சமாக 94.5% சேர்க்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

மேலும், தமிழ்நாட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாக செயல்படுத்தப்படும் பயிற்சிகளையும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் பயிற்சிகள் மற்றும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் குறித்தும் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டன. பின்னர், தமிழ்நாடு மற்றும் பின்லாந்து நாட்டு அமைச்சர்களுக்கிடையே தமிழ்நாட்டின் மாணவர்களுக்கு பின்லாந்தில் திறன் பயிற்சி மேற்கொள்வதற்கும் பின்லாந்து மாணவர்கள் தமிழ்நாட்டில் உள்ள திறன் பயிற்சிகளை பெறுவதற்கும் வழிவகை செய்யப்படும் என பரஸ்பரமாக தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திருமதி எ.சுந்தரவள்ளி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - கார்த்திகேய சிவசேனாபதி பங்கேற்பு! க.கணபதி எம்.எல்.ஏ. முன்னிலை! வி.ராஜேஷ் தலைமை!

# சென்னை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் ஊடகவியலாளர் அரங்கம்!

## இந்து என்.ராம் - எம்.எஸ்.பெருமாள் - நக்கீரன் கோபால் - மை.பா.நாராயணன் மணி - தி.செந்தில்வேல் சிறப்புரை!

சென்னை, அக். 21

சென்னை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு உயிரினும் மேலான தலைவரை போற்றும் ஊடகவியலாளர்கள் அரங்கம் இன்று (21.10.2023 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, ஓம் சக்தி நகர், பொன்னுரங்கம் சாலை, நாராயணா பள்ளி அருகில், இராமாபுரத்தில் நடைபெறுகிறது.

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், பகுதிச் செயலாளர் க.கணபதி முன்னிலை வகிக்கிறார்.

சென்னை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் இராமாபுரம் வி.ராஜேஷ் தலைமை வகிக்கிறார்.

இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி, அ.விஜயபாலா, கே.ராஜூ, ஆ.ராதாசெல்வம், வ.சண்முகம், எம்.எல்.நாதன், எம்.மதன்ராஜ், எஸ்.டேவிட், எம்.எஸ். கார்த்திக், எஸ்.கர்ணன், எஸ்.ஜெகதீசன், ஜி.சேகர், இ.பிரகாசம், எஸ்.பூங்கொடி, வி.இளங்கோவன், எஸ்.பூபாலன், எஸ்.சேகர், இ.சீனிவாசன், ஏ.மணிவண்ணன், வ.சந்திரசேகர், ப.ரமேஷ், எஸ்.பரணி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் இந்து என்.ராம், பொதிகை தொலைக்காட்சி எம்.எஸ். பெருமாள், நக்கீரன் கோபால், மை.பா.நாராயணன், மணி, தமிழ்கேள்வி தி.செந்தில்வேல் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகின்றனர். கவிஞர் இளையகம்பன் நெறி உரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் பழ.செல்வகுமார் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இ.இளங்குமரன், ஆர். எம்.கணேஷ் நன்றி கூறுகின்றனர்.

### பண்டிகைக் காலத்தை முன்னிட்டு

# ஆவின் பொருட்களின் விற்பனையை 20 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை!

## அமைச்சர் த.மனோ தங்கராஜ் உத்தரவு!

சென்னை, அக்.21-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவின் பால் உபபொருட்களின் விற்பனையை 20% அதிகரிக்க பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தமிழ்நாட்டில் தரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் ஆவின் நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பால் விற்பனையில் முன்னோடி நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 27 ஒன்றியங்கள் மூலம் சுகாதாரமான முறையில் பால் மற்றும் பால் உபபொருட்களை நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் விநியோகம் செய்து வருகிறது.

ஆவின் நிறுவனம் தனது பால் உபபொருட்களான வெண்ணெய், நெய், பால்கோவா, மைசூர்பாகு, குலாப்ஜாமுன், ரசகுல்லா, லஸ்ஸி, மோர், சாக்லேட், தயிர் மற்றும் ஐஸ் கிரீம் போன்ற பால் பொருட்களை தரமான முறையில் தயாரித்து ஆவின் பாலகங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதலாக 20% விற்பனையை அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகை காலங்களில் ஆவின் பால் உபபொருட்கள் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்க ஆவின் பாலகங்கள் மற்றும் முகவர்கள் மூலம் தங்கு தடையின்றி விநியோகம் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைவரும் தங்களுக்குத் தேவையான இனிப்பு மற்றும் காரம் வகைகளை ஆவின் நிறுவனத்தில் முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம் என்று பால்வளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.





தமிழ்நாடு அரசின் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் விருதாளரும், கோவை சூலூர் பாவேந்தர் பேரவை நிறுவனருமான புலவர் செந்தலை கவுதமன் மற்றும் பாவேந்தர் பேரவை தேவராஜ் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் திருச்சி பெரியார் மாளிகை வருகை தந்து “தாய் வீட்டில் கலைஞர்” மற்றும் இயக்க நூல்களை வாங்கினர். திருச்சி பெரியார் மாளிகையில் தந்தை பெரியார் பயன்படுத்திய பிரச்சார ஊர்தி (வேன்) முன்பு ஒளிப்படம் எடுத்து மகிழ்ந்தனர். திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் இரா.ஜெயக்குமார், திருச்சி மாவட்ட தலைவர் ஞா.ஆரோக்கியராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.

### தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது! சென்னை-புறநகர்ப் பகுதிகளில் நடைபெறும்

# சாலைப் பணிகளின் நிலை குறித்து ஆய்வுக்கூட்டம்!

## வடகிழக்குப் பருவமழை தொடங்கும் முன் - பணிகளை முடித்திட அறிவுறுத்தல்!

சென்னை, அக்.21

அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் நேற்று சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளின் நிலை குறித்தும், சாலை வெட்டுக்களைச் சீரமைக்கும் பணிகள், சாலைப் போக்குவரத்து நெரிசல் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர், சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட், இயக்குநர், பேரிடர் மேலாண்மை, செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, இணை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சியின் கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி), பெருநகர சென்னை மாநகராட்சி, இணை ஆணையர் (பணிகள்), நிர்வாக இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், இணை நகராட்சி நிர்வாக இயக்குநர், கூடுதல் மாநகர காவல் ஆணையர் (போக்குவரத்து), கூடுதல் முதன்மை தலைமை பாதுகாவலர், வனத்துறை மற்றும் வட்டார துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பல்வேறு துறைகளின் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலாளர், மண்டலம் வாரியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஐந்தாவது ஆய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் சாலைப்பணிகளின் நிலை குறித்தும், சாலை வெட்டுக்களை சீரமைக்கும் பணிகள், சாலைப் போக்குவரத்து நெரிசல் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்.

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமைச் செயலாளர் அவர்கள் கடந்த ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி மண்டல அளவில் போக்குவரத்து கண்காண்புக் குழு அமைக்கப்பட்டு கள ஆய்வு செய்து போக்குவரத்துக்கு நெரிசலை குறைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார். மேலும், தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தியபடி இரயில்வே துறையினருடன் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டது என்றும் செயின்ட் ஆன்ருஸ் சர்ச் அருகில் கல்வெர்ட் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளதாகவும், அனைத்து கல்வெர்ட்டுகளிலும் தூர்வாரி மழைநீர் செல்ல நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத்துறை மேற்கொண்டு வரும் சாலைவெட்டு சீரமைக்கும் பணி குறித்து ஆய்வு செய்தார்.

இணை ஆணையர் (பணிகள்), பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் 14.10.2023 அன்று நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப சாலைவெட்டு சீரமைக்கும் பணிகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்தும் விவரித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1670 சாலைகளில் நிரந்தர சாலை வெட்டு சீரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, 294 சாலைகள் தற்காலிக சாலை வெட்டு சீரமைப்புப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் மீதமுள்ள 255 சாலைகளில் நிரந்தர சாலை வெட்டு சீரமைப்புப் பணிகளையும் மற்றும் 211 சாலைகளில் தற்காலிக சாலை வெட்டு சீரமைப்புப்பணிகளை மூன்று நாட்களுக்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர், சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் அவர்கள் ஆற்காடு சாலையில், சாலை சீரமைப்புப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்றும், காளியம்மன் கோவில் தெரு மற்றும் மவுண்ட் பூந்தமல்லி சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை சீரமைப்புப் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்று தெரிவித்தார்.

கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, அண்ணா சாலை, ஜி.எஸ்.டி சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை, 100 அடி சாலை, மேடவாக்கம் பிரதான சாலை, வேளச்சேரி - -தாம்பரம் சாலை, மர்மலாங் பாலம் இரும்புலியூர் சாலை, வளசரவாக்கம் வள்ளுவர் நகர் சாலை, எருக்கஞ்சேரி சாலை, மேடவாக்கம் மாம்பாக்கம் சாலை, வானகரம் அம்பத்தூர் புழல் சாலை ஆகிய சாலைகளில் மேற்கொண்டு வரும் சாலை வெட்டு சீரமைப்புப் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என தெரிவித்தார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் இந்த சீரமைப்புப் பணிகளில் அனைத்து சாலைகளிலும் DBM வரை 25.10.2023-க்குள் விரைந்து முடிக்குமாறும், BC பணிகள் பருவமழைக்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் மணலி விரைவு சாலையில் வாகனங்கள் இரு புறங்களில் நிறுத்தி விடுவதால் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது என்றும் சாலையில் வாகனங்களை நிறுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

இணை ஆணையர் (பணிகள்) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -4 முதல் மண்டலம்-13 வரை உள்ள 25 தெருக்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளில் 15 சாலைகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள் மீதமுள்ள 10 சாலைகளில் பணிகளை வரும் 25.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். கொசஸ் தலையாறு வடிநில பகுதியில் 6 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 4 இடங்களில் வரும் 25.10.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார். கோவளம் வடிநிலப்பகுதியில் 17 இடங்களில் மின் கம்பங்கள் அகற்றப்பட்டு நடைபெற்று வரும் இணைப்பு கால்வாய்களை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

மேலும், மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்ட இடங்களில் Silt Catch Pit அமைக்கும் பணி, construction debri அகற்றும் பணி, சாலை வெட்டு சீரமைக்கும் பணிகளை 25.10.2023க்குள் முடிக்குமாறும் புதிதாக Silt Catch Pit அமைக்கும் பணிக்கு பள்ளங்கள் தோண்டக்கூடாது என்று அறிவுறுத்தினார்.

நீர்வள ஆதாரத் துறை மேடவாக்கம் பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியில் அதிக திறன் கொண்ட மோட்டார் பம்புகள் நான்கு இடங்களில் மழைநீர் அகற்ற தயார் நிலையில் வைக்குமாறு அறிவுறுத்தினார். மேலும், 9 இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் shutter அமைக்கும் பணிகளில் 4 இடங்களில் பணி முடிக்கப்பட்டுள்ளது மீதமுள்ள 5 இடங்களில் shutter அமைக்கும் பணிகளை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். போரூர் சர்ப்ளஸ், நன்மங்கலம், கெருகம்பாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் இருந்து மழைநீர் வெளியேறும் இடங்களில் நீர்வள ஆதாரத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் கள ஆய்வு செய்து சீராக மழைநீர் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நெடுஞ்சாலைகள் துறை, ஈ.வெ.ரா பெரியார் சாலை, அண்ணா சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் Silt Catch Pit அமைக்கும் பணி, construction debri அகற்றும் பணி, சாலை வெட்டு சீரமைக்கும் பணிகளை 25.10.2023க்குள் முடிக்குமாறும் புதிதாக Silt Catch Pit அமைக்கும் பணிக்கு பள்ளங்கள் தோண்டக்கூடாது என்று அறிவுறுத்தினார். பணிகளில் விபத்து ஏற்படாத வண்ணம் இருக்க சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் அமைத்துள்ள தடுப்பரண் (barricading) போன்று அமைக்குமாறு அறிவுறுத்தினார். மழைநீர் வடிகால்களில் மழைநீர் செல்ல போதிய inlet அமைக்குமாறு அறிவுறுத்தினார். நடைபாதைகளைச் சீரமைக்குமாறும் அறிவுறுத்தினார்.

கிழக்கு கடற்கரை சாலையில் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படாத 10 இடங்களில் மழைநீர் வெளியேறுவதற்கு ஏதுவாக போதிய மோட்டார் பம்புகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தாம்பரம் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் ராதா நகர் சுரங்க பாதை மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

ஆவடி மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில் ஜி.எஸ்.டி சாலை மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

தலைமைச் செயலாளர் பெருநகர சென்னை மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி அனைத்து சாலைகளிலும் debri அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இறுதியாக வடகிழக்குப் பருவமழை 3 நாட்களில் (23.10.2023ல்) துவங்கும் என்று சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளதாகவும், அதன் பொருட்டு நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் முடிக்க வேண்டும் என்றும் புதிய சாலை வெட்டுப் பணிகள் மேற்கொள்ளக்கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளையும் முழுமையாக முடிக்க வேண்டும். Silt catch pitகளில் உள்ள மண், கான்கிரீட் கலவைகள் மற்றும் தார் கலவைகள் அகற்றி மழைநீர் சீராக செல்ல வழிவகை செய்ய வேண்டும். சுரங்கப்பாதைகளில் மோட்டார் பம்புகள் அனைத்தும் சரியாக இயங்குவதை உறுதிபடுத்த வேண்டும். மேலும், சுரங்கப்பாதையில் பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் ஆழத்தின் அளவு பொதுமக்கள் அறியும் வண்ணம் பொறுத்தப்பட வேண்டும். மரக்கிளைகள் கழிக்கப்பட வேண்டும். பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அனைத்து எந்திர நுழைவாயில்களை சரிசெய்து மூடி கொண்டு சரியாக மூடப்பட்டிருக்க வேண்டும். புதிதாக அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்கள் பழைய வடிகால்களில் சரியாக இணைப்பு ஏற்படுத்த வேண்டும்.

அனைத்துத் துறைகளும் சாலை சீரமைப்புப் பணிகளில் DBMவரை 25.10.2023 க்குள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகளை பருவமழைக்கு முன்னர் முடித்து, பொதுமக்களை அச்சுறுத்தும் வண்ணம் மழைநீர் வடிகால்களில் இடைவெளி இருக்கக் கூடாது என்றும் பொதுமக்கள் சிரமமின்றி செல்லவும் வாகனங்கள் சீராக செல்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

கலைஞர் 100 1924 - 2023

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (Mech) அவர்களால் குறுகிய கால மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது.**

இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 2167A / N / 2023
வடக்கு வட்டார பயன்பாட்டிற்கென (மண்டலம் 1 முதல் 5 வரை) 50 எண்ணிக்கையில் டிராக்டர்களில் பொருத்தப்பட்ட நீரிறைக்கும் பம்புகள் (4"X4" Size) அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் 375 மணி நேரத்திற்கு (ஒவ்வொரு பம்பிற்கும்) வாடகை முறையில் பணியமர்த்தும் பணி.

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **30.10.2023** பிற்பகல் **3.00,** மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **31.10.2023** பிற்பகல் **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5702 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)**




திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி தொகுதி ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலையில் பொன்னேரி நகர செயலாளர் வழக்கறிஞர் ஜி.ரவிகுமார் வரவேற்புரையாற்றினார். பொன்னேரி தொகுதி பொறுப்பாளர் மாநில மாணவரணி துணைச் செயலாளர் க.அமுதரசன். பங்கேற்று, வாக்குச் சாவடி பாக முகவர்கள் செயல்பாடுகள் குறித்து கருத்துகளை வழங்கினார். கூட்டத்தில் மு.கதிரவன், எம்.எல்.ரவி, டாக்டர்பரிமளம்விஸ்வநாதன் வெஅன்புவாணன், பா.சுகுமாறன், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ். நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன் .பி.முத்து, க.சு தமிழ்உதயன் பழவை அலவி, ரோஸ்பொன்னையன், தேசராணிதேசப்பன், டாக்டர்.மா.தீபன் ஒன்றிய நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# நீட் : கழகம் கண்ட களங்கள் !

தமிழ்நாட்டின், தமிழ் மக்களின் ‘சுயமரியாதையை’ மீட்பதற்காகவும், காப்பதற்காகவும் உருவான இயக்கம் திராவிட பேரியக்கம்.

சுயமரியாதையை உறுதி செய்வதற்கான ஆயுதமாக கல்வியை அது கண்டறிந்தது. அதனால்தான் ‘கல்வி உரிமை’ இந்த இயக்கத்தின் ஜீவாதாரப் பிரச்சினையாக என்றைக்கும் இருக்கிறது.

நீதிக்கட்சி காலத்தில், திராவிட இயக்கத்தின் அடிப்படை சாசனமாக முன்வைக்கப்பட்டது, ‘பார்ப்பனரல்லாதார் கொள்கை பிரகடனம்’.

1916 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அந்த அறிக்கைக்கு இன்று வயது 107 க்கும் கூடுதல்.

‘எங்களுக்கு கல்வி உரிமையை கொடு’ என்கிற கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது அந்த அறிக்கை.

நூறு ஆண்டுகள் கழித்து நீட் தேர்வுக்கு எதிரான நம்முடைய போராட்டங்களின் அடிப்படை, ‘எங்கள் கல்வி உரிமையை பறிக்காதே’ என்பதாக இருக்கிறது.

கல்வி உரிமையை கொடு என்கிற இடத்திலிருந்து, பெற்ற கல்வி உரிமையை பறிக்காதே என்கிற இடத்திற்கு இந்த இயக்கம் வந்து சேர நூறு ஆண்டுகளானது.

அந்த உரிமையை பெறுவதற்கும், காப்பதற்கும் திராவிட இயக்கம் நடத்திய போராட்டம் தான், தமிழ்நாட்டின் நூற்றாண்டு வரலாறு.

2019 நாடாளுமன்ற தேர்தல் - இந்தியா முழுவதும் மதத்தையும், சாதியையும், வகுப்புவாத வெறுப்பையும் மையமாக வைத்து நடைபெற்ற போது, தமிழ்நாட்டு அரசியல் களம் புதிய கல்விக் கொள்கையையும், நீட் தேர்வையும் விவாதித்து அரசியலின் மையப் பிரச்சினையாக்கி வாக்களித்தது.



சூரியா கிருஷ்ணமூர்த்தி

இதற்குப் பின்னணியில் இருந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அயராத பரப்புரை, நீட் தேர்வின் கேடுகளை தமிழ்நாட்டு மக்களிடம் கொண்டு சேர்க்க ஊருக்கு ஊர் பயிற்சி பாசறைகளை நடத்தியது கழகம், தேர்தல் அறிக்கையில் பிரதானமாக இடம் பெறச் செய்து மக்களிடம் பிரச்சாரம் செய்து, தமிழ்நாட்டின் கல்வி உரிமையை பறிக்கும் நீட் தேர்வுக்கு எதிரான இயக்கத்தை முன்னின்று உருவாக்கி, வழி நடத்தியது. அந்தப் போராட்டத்தை

முன்பை விட தீவிரமாக முன் எப்போதையும் விட வீரியமாக இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறது கழகம்.

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நீட் தேர்வு ஒழிக்கப்பட்டுவிடும் என்று சொன்னீர்களே என்ன செய்தீர்கள் ? என்று கேட்கிறார்கள். கேட்பது யார் என்பதை பார்த்தால் சிரிப்பு தான் மிஞ்சுகிறது.

தமிழ்நாடு அரசின், கழகத்தின் நீட் தேர்வுக்கு எதிரான தொடர் நடவடிக்கைகளை முடக்கி வைத்திருக்கும் ஆளுநர் - பாஜக - அதிமுக கூட்டணியை சேர்ந்தோர் கேட்கிறார்கள், தமிழ்நாட்டு மக்களை முட்டாள்கள் என எண்ணி கேட்கிறார்கள்.

நீட் தேர்வுக்கு எதிராக தன்னால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் அலுவல் ரீதியாக செய்து கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு. மக்கள் மன்றத்தில் போராட்டங்கள் மூலமாக செய்து கொண்டிருக்கிறது கழகம்.

கழகத்தின் இளைஞரணி செயலாளரோ இதனை தன் முதன்மை இலக்காக கொண்டு போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார். இளைஞரணியோடு, மாணவர் அணியும், மருத்துவ அணியும் படை திரண்டு போராடுகிறது.

கழக அரசு அமைந்தவுடன், நீட் தேர்வுக்கு எதிராக அது வரையில் மக்கள் மன்றத்தில் அரசியல்ரீதியாக கட்டமைத்த போராட்டத்தை, சட்டமியற்றும் மன்றங்களில் அரசின் போராட்டமாக மாற்றினார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்

17/06/2021 அன்று முதலமைச்சராக முதல்முறை டெல்லி சென்ற போது, நீட் தேர்வுக்கு விலக்கு வழங்கிட பிரதமரை வலியுறுத்தினார்.

21/06/2021 அன்று ஆளுநர் உரையிலிலேயே, நீட் தேர்வுக்கு எதிரான அரசின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டது.

எடுத்தோம், கவிழ்த்தோம் என்று குறுகிய காலத்தில் பெயர் கிடைக்கும் என்பதற்காக, கண்துடைப்புக்காக எதையும் செய்யும் இயக்கம் அல்ல தி.மு.க

மாநில சுயாட்சியை மீட்டெடுக்க இராஜமன்னார் ஆணையம் தொடங்கி, மாநில நுழைவுத் தேர்வுகளை ரத்து செய்ய உதவிய அனந்தகிருஷ்ணன் ஆணையம் வரையில் இந்த இயக்கம் கண்ட வரலாற்று வெற்றிகள் எல்லாவற்றுக்கு பின்னாளும் உடைக்க முடியாத தரவுகளும், சட்டத்தின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் உள்ளன.

அந்த வகையில், நீட் தேர்வுக்கு எதிரான தரவுகளை திரட்ட, ஆட்சி பொறுப்பேற்ற ஒரு மாதத்தில் 10/06/2021 அன்று, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டை காக்க, உரிய தரவுகளையும் பரிந்துரைகளையும் வழங்க நீதியரசர் ஏ.கே. இராஜன் அவர்களின் தலைமையிலான உயர்மட்ட ஆய்வுக் குழுவை அமைத்தார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

ஆணையத்திற்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டன, ஆணையம் செயல்படவே சட்ட போராட்டம் நடத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது, நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி வென்றோம்.

14/07/2021 அன்று, 86,342 க்கும் மேற்பட்டோரின் கருத்துகள், திரட்டப்பட்ட எண்ணற்ற தரவுகள், சட்ட ஆலோசனைகள் ஆகியவற்றை உள்ளடக்கி, 165 பக்கங்கள் கொண்ட அறிக்கையை நீதியரசர் ஏ.கே.இராஜன் அவர்களின் தலைமையிலான ஆணையம் வழங்கியது.

13/09/2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் மசோதா நிறைவேற்றப்பட்டது.

15/09/2021 அன்று நீட் தேர்வு குறித்து அறிக்கை வெளியிட்டார் முதலமைச்சர் அவர்கள்

‘கல் நெஞ்சங்கொண்டோரை கரைப்போம், மனம் தளராதீர்கள் மாணவர்களே, உங்களை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம்’ என்று மாணவர்களிடம் கோரிக்கை வைத்த அதே அறிக்கையில், ‘நீட் எனும் அநீதியை ஒழிக்கும் வரை நாம் ஓயமாட்டோம்’ என்கிற உறுதியை மீண்டும் வழங்கினார்.

10/10/2021 அன்று, நீட் தேர்வுக்கு எதிராக தேசிய அளவிலான கருத்துருவாக்கம் மற்றும் அணிசேர்க்கை முயற்சியாக ஆந்திர பிரதேசம், டெல்லி, சத்திஸ்கர், ஜார்கண்ட், கோவா, கேரளா, மகாராஷ்ட்ரா, ஒடிசா, பஞ்சாப், இராஜஸ்தான், தெலுங்கானா, மேற்கு வங்கம் ஆகிய 12 மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு, நமது முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்.

கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏ.கே.ராஜன் குழுவின் அறிக்கையோடு மேற்கண்ட கடிதத்தை 12 மாநில முதலமைச்சர்களிடம் கொண்டு சேர்த்தனர்.

27/11/2021 அன்று நீட் விலக்க மசோதாவின் மீது முடிவெடுக்க ஆளுநர் அவர்கள் காலதாமதம் செய்ததை அடுத்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களை நேரில் சந்தித்து, மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க கோரினார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

28/12/ 2021 அன்று மாண்புமிகு இந்திய குடியரசு தலைவர் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்த, நாடாளுமன்ற மக்களவையின் தி.மு.க குழு தலைவர் திரு.டி. ஆர்.பாலு அவர்களின் தலைமையில் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் முயன்றனர். பின்னர் குடியரசு தலைவர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது

ஜனவரி, 2022 - தமிழ்நாட்டு எம்.பிக்களின் மனு மீது மேல் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி, மேற்கண்ட கடிதம் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது.

அதன் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்சாவை சந்திக்க தமிழ்நாடு எம்.பிக்கள் முயன்றனர். அனுமதி வழங்கப்படவில்லை.

06/01/2022 - ‘தமிழ்நாட்டின் மக்கள் பிரதிநிதிகளை, மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் சந்திக்க மறுப்பது மக்களாட்சியின் மாண்புக்கு எதிரானது’ - என்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், 110 விதியின் கீழ் அறிக்கை வெளியிட்டு, அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

08/01/2022 அன்று சட்டமன்ற அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது.

‘சட்டமன்றத்தால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு சட்டமுன்வடிவை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் இருப்பது சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்தையே கேள்விக்குறியாக்கும் வகையிலும்; மக்களாட்சித் தத்துவத்துக்கும் சட்டமன்ற இறையாண்மைக்கும் எதிராகவும் உள்ளது.’ என்று உரையாற்றினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

12/01/2022 - தமிழ்நாட்டில் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளை பிரதமர் காணொளி வாயிலாக திறந்து வைத்த நிகழ்வில், பொதுவெளியில் நீட் விலக்கு கோரி வலியுறுத்தினார் முதலமைச்சர் அவர்கள்

01/02/2022 - தமிழ்நாடு அரசின் நீட் விலக்கு சட்ட மசோதாவை, திருப்பி அனுப்ப கையெழுத்திட்டார் ஆளுநர்.

02/02/2022 - தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவை, உடனடியாக சட்டப்பேரவைக்கு அனுப்பியது தமிழ்நாடு அரசு.

03/02/2022 - அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார் முதலமைச்சர் அவர்கள்

05/02/2022 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில், சட்ட முன்வடிவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டது.

08/02/2022 - தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்பு கூட்டம் கூட்டப்பெற்று, வரலாற்றில் முதல் முறையாக புள்ளி மாறாமல் அதே மசோதாவை மீண்டும் நிறைவேற்றப் பட்டது.

அன்றே மசோதா ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவை மீண்டும் நிறைவேற்றிய அழைப்பினால், ஆளுநரால் அதை திருப்பி அனுப்ப முடியாது என்கிற அரசியல் சாசன நெருக்கடியை பயன்படுத்தியது கழகம்.

15/03/2022 - இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவை, மாண்புமிகு குடியரசு தலைவருக்கு உடனடியாக அனுப்பும்படி, மாண்புமிகு ஆளுநரை சந்தித்து வலியுறுத்தினார்.

31/03/2022 அன்று மாண்புமிகு இந்திய பிரதமரை சந்தித்தபோதும், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரி வலியுறுத்தினார்.

மே, 2022 - தமிழ்நாடு அரசுன் நீட் விலக்க மசோதாவை குடியரசு தலைவருக்கு அனுப்பினார் ஆளுநர்.

மக்கள் மன்றம், சட்டமன்றம், நாடாளுமன்றம் என கழகம் தொடர்ந்து போராடியது.

14/03/2023 - தமிழ்நாட்டின் நீட் விலக்க சட்ட முன்வடிவு, உள்துறை அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளதாக குடியரசு தலைவர் மாளிகை தெரிவித்தது.

14/08/2023 - மசோதாவுக்கு ஒப்புதல் கோரி குடியரசு தலைவருக்கு, முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்.

20/08/2023 அன்று தமிழ்நாடு முழுவதும் கழக இளைஞரணிச் செயலாளர் - மாண்புமிகு இளைஞர் நலத் துறை அமைச்சர் தலைமையில், தமிழ்நாடு முழுவதும் மாபெரும் உண்ணாவிரத அறப்போரை கழக இளைஞரணி, மாணவரணி மற்றும் மருத்துவ அணி உடன்பிறப்புகள் நடத்தினர்.

21/10/2023 அன்று நீட் தேர்வுக்கு விலக்கு கோரி, 50 நாளில் 50,00,000 கையெழுத்து பெறும் இயக்கத்தை தொடங்கி வைக்கிறார் இளைஞரணிச் செயலாளர்.

ஆணையம் அமைக்க போராட்டம், அமைத்த ஆணையத்தை காப்பாற்றுவதற்கு சட்ட போராட்டம், அனுப்பிய மசோதா மீது நடவடிக்கை எடுக்க ஆளுநரிடம் போராட்டம், மசோதாவை மீண்டும் நிறைவேற்றி அனுப்ப போராட்டம், குடியரசுத் தலைவருக்கு மசோதாவை அனுப்பி வைக்க போராட்டம், உள்துறை அமைச்சகத்திடம் நடவடிக்கை எடுக்க கோரி போராட்டம் என சளைக்காமல் போராடுகிறது கழகம்.

இதில் ஏதேனும் ஒரு போராட்டத்தில் அதிமுக கலந்து கொண்டிருக்கிறதா என்கிற கேள்வியை நாம் எழுப்பியாக வேண்டி இருக்கிறது.

இந்தப் போராட்டங்கள் எல்லாம் பாஜக மற்றும் ஆளுநர் கூட்டணிக்கு எதிராக மட்டும் நடத்தப்படவில்லை, அவர்களை அன்றைக்கும் இன்றைக்கும் காப்பாற்றி வரும் அதிமுகவிற்கு எதிராகவும் சேர்த்தே நடத்தப்பட்டதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள்.

வாக்குறுதி என்ன ஆயிற்று ? என் கேட்பவர்களுக்கு, சொல்ல ஒரே ஒரு பதில் இருக்கிறது.

பெண்ணுக்கு சொத்துரிமை கொடுக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை பெரியார் நிறைவேற்றினார், 70 ஆண்டுகள் கடந்தும் அதனை உறுதியோடு செயல்படுத்தியது கழகம்.

பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு கொடுப்போம் என அண்ணா வாக்குறுதி கொடுத்தார், அதை 70 ஆண்டுகள் கடந்தும் மறுக்காமல் நிறைவேற்றியுள்ளது கழகம்.

அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் முயற்சியை முத்தமிழறிஞர் மேற்கொண்டார், அதனை 50 ஆண்டுகள் கடந்தும் மறக்காமல் சாத்தியமாக்கியுள்ளது கழகம்.

தி.மு.கழகத்தின் வாக்குறுதிகள் ஒவ்வொன்றும் உறுதியோடு கொடுக்கப்பட்ட சாசனங்கள், அவை நிச்சயம் நிறைவேற்றப்பட்டே தீரும்.

அதை நிறைவேற்றுவதற்கான போராட்டத்தை கழகம் ஒருநாளும் கைவிடாது. தமிழ்நாட்டின் முக்கால் நூற்றாண்டு வரலாறு சொல்லுகிற செய்தி இதுதான்.

ஆக, கழகம் நீட் தேர்வை ஒழித்தே தீரும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.10.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி.சு நகர் 8வது தெருவில் 54 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சிறுவர் பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பி. கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.10.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர், பல்லவன் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கால்பந்து விளையாட்டுத் திடலை திறந்து வைத்து, விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பி. கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் – அதானிக்கு சிறை!

# பிரதமர் மோடி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவார்!

## காளையார்கோவில் பொதுக்கூட்டத்தில் ஆ.ராசா எம்.பி. பேச்சு!

சிவகங்கை, அக். 21 -

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தெப்பக்குளம் கீழ்கரையில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் 7000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர்கள் யோக. கிருஷ்ணகுமார், ஆர்.எம். கென்னடி, பேரூராட்சி மன்ற தலைவர் பிரிய தர்ஷினி கவிராஜ், பொதுக்குழு உறுப்பினர் பி. டி. ஆர். முத்து ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு தி.மு.க. துணை பொது செயலாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.ராசா எம்.பி. பேசியதாவது:-

இந்த ஆண்டு தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை கொண்டாடி வருகிறோம். தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் கொண்டாடி வருகிறார்கள். கலைஞர் ஒரு தத்துவம். தமிழகத்தில் சாதாரண குக்கிராமத்தில் திருக்குவளை யில் ஏழை வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு பிறந்து படிப்படியாக வளர்ந்தவர். கலைஞரது பிறந்த நாளை கொண்டாடுவது தமிழ் மொழி, இனத்திற்கு, எழுச்சி ஏற்படுகிறது. சமூக நீதி எங்கு வேண்டும் என்று விரும்புகிறார் களோ அங்கெல்லாம் கலைஞர் பிறந்த நாள் சிறப்பாக கொண்டாடப் பட்டு வருகின்றது .

13 வயதில் தனது பொது வாழ்க்கையை துவக்கியவர். 94 வயது இறுதிவரை மொழி, இனம், நாட்டிற்காக அயராது பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணா மறைவுக்கு பிறகு கழகத் தலைவராக ஆண்டுகள் கழக தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும், ஐந்து முறை முதல்வராகவும் இருந்துள்ளார். கலைஞர் பெரியார் தத்துவத்தை தன் உள்ளடக்கிய பிதாமகன். திராவிடம் என்பது ஒரு தத்துவம். கலைஞர் தமிழகத்தில் இருந்து டெல்லியை ஆட்சி செய்தார். அரசியல் சட்டத்தை வலிமைப்படுத்துவதற்காகடெல்லியுடன்



பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டு அதில் வெற்றியும் பெற்றார். ஜனநாயகத் திற்கு எப்பொழுது எல்லாம் ஆபத்து வந்ததோ அப்போதெல்லாம் அதை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தவர். ஜனநாயகத்தை காத்த தலைவர் கலைஞர் ஆவார். சிலர் வாக்கு வங்கிக்காக அரசியல் செய்கிறார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் கொள்கையையும், தத்துவத்தையும் விடாமல் அரசியல் செய்தார். வாக்கு வங்கி அரசியலை அவர் என்றும் விரும்ப வில்லை.

1977 ஆம் ஆண்டில் கலைஞர் முதல்வரானதும் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக் கும் மின் வசதி செய்து கொடுத்தார். அதனால் இன்று குக்கிராமங்க ளில் மின்சார வசதி ஏற்பட்டுள்ளது. ஆனால் நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தில் பிரதமர் மோடி அவர்கள் இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள கிராமங்களில் இன்னும் மின்சார வசதி செய்துதரப்பட வில்லை. அதை விரைவில் செய்திட வேண்டும் என்று பேசினார். அப்பொழுது நான் எங்களது தமிழகத்தில் 50 ஆண்டுகளுக்கு முன்பாக அனைத்து கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து பட்டது என்று கூறினேன். இது தான் திராவிட மாடல் ஆட்சி. ஜாதி ஒழிய வேண்டும் என்று பெரியார் பேரறிஞர் அண்ணா நினைத்ததை கடைசிவரை கலைஞர் பாடு பட்டு அதை போக்கும் வகையில் பணியாற்றினார்.

பிரதமர் மோடி தொழிலதிபர் அதானியுடன் சேர்ந்து கொண்டு பல்வேறு ஊழல் முறைகேடு களில் ஈடுபட்டுள்ளார். இதை அமெரிக்காவிலிருந்துவெளி வரும் பத்திரிகை ஆதாரத்துடன் வெளியிட்டுள்ளது. இது குறித்து பாராளுமன்றத்தில் கேட்டால் மோடி பதில் சொல்வதே இல்லை. மாறாக அமலாக்கத் துறை வருமான வரித் துறை, சி.பி.ஐ. போன்றவர்களை நினைத்து அடக்க பார்க்கிறார். திமுக அதற்கு அஞ்சப்போவ தில்லை. யாரைப் பார்த்து மிரட்டுகிறீர்கள். 2ஜி வழக்கில் நான் நிரபராதி என்று விடுதலை பெற்றுள்ளேன். ஆனால் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை என்னை பார்த்து 2 ஜி ஊழல் என்று பேசி வருகிறார். இது விவரம் குறித்த அவருக்கு தெரியவில்லை. என்று நினைக்கிறேன். இந்த வழக்கு விவரம் குறித்து தெரிந்து கொண்டு பேச வேண்டும்.

இஸ்ரேல்பாலஸ்தீன போரில் இந்தியா இஸ்ரேலை ஆதரிப்பது தவறாகும். இது நேரு வகுத்த அனுசாரா நாடு கொள்கைக்கு எதிரானதாகும். ஊழலின் மொத்த உருவமாக பிரதமர் மோடி திகழ்கிறார். அவர் நம்மைப் பார்த்து ஊழல் என்று கூறுவது விந்தையாக உள்ளது.

இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால் தொழிலதிபர் அதானி சிறைக்குப் போவார். மோடி குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவார். 3மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் மணிப்பூர் கலவரத்திற்கு இதுவரை பிரதமர் மோடி சிறு வருத்தம் கூட தெரிவிக்க வில்லை. மன்னிப்பு கேட்கவில்லை. இத்தகைய பிரச்சினைகளை மறைப்பதற்காக ஜாதி, மத மோதல்கள், சிறுபான்மையின மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகிறது. இன்று பிரதமர் மோடி முதல்வர் தளபதி அவர்களைப் பார்த்து பயப்படுகிறார். அதற்கு காரணம் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. மோடி என்ற முகமூடி உருவத்தில் வரும் விஷப் பாம்பை அடக்கும் தடி கொண்டு முதல்வர் தளபதி அவர்கள் இந்தியா கூட்டணியை பலமாக அமைத்து வருவதே காரணமாகும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், வழியில் முக்கலவையாக தமிழக முதல்வர் ஆட்சியையும் கட்சியினையும் சிறப்பாக நடத்தி வருகிறார் .வரும் பாராளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக முதல்வர் அவர்கள் அல்லும் பகலும் அயராது திட்டமிட்டு பணியாற்றி வருகிறார்.நமது கழகத் தொண் டர்கள் அயராது பணியாற்றி வெற்றிக்காக உழைத்திட வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை வீழ்த்து வதற்கான பணிகளில் ஈடுபட வேண்டும். அப்பொழுது தான் இந்தியாவை காப்பாற்ற முடியும். மூன்று மாதங்களாக இந்த பொதுக் கூட்டத்தை நடத்துவதற்காக மிகவும் சிறப்பான முறையில் மாநாடுபோல் ஏற்பாடு செய்து நடத்திய ஒன்றியச் செயலாளர் ஆரோக்கியசாமி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகளுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ராசா எம்.பி. பேசினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி அரசியல் ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். பொதுக்கூட்டத் தில் 7000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், ஆ.ராசா எம்.பி முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தமிழரசி எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினார்கள். பாகமுகவர்களுக்கு கைபேசி, நலிந்த கழக முன்னோடி களுக்குபொற்கிழி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை எளிய மாணவிகளுக்கு கல்வி நிதி உதவி, ஆதரவற்ற தொண்டு நிறுவனங்களுக்கு அரிசி மூட்டைகள் ஆகியவை வழங்கப்பட்டது.

முடிவில் கிளை செயலாளர் ஆர்.வி.எஸ்.அரங்கநாதன் நன்றி கூறினார் .

இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் த சேங்கை மாறன், கே. எஸ். எம் .மணி முத்து, முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், ஒன்றிய செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங் கம், நாகனி ரவி, பூபால சிங்கம், நா.நெடு ஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், நகரச் செயலாளர்கள் பெரி. பாலா, க. பொன்னுச் சாமி பொதுக்குழு உறுப்பினர்கள் கரு . அசோகன், பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்து துரை மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் சி. முத்து, வனிதா கண்ணதாசன், ஜான் சந்தியாகு சி. குழந்தை சாமி , எம். முருகேசன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் அருட்செல்வி அரசு, எஸ்தர் மேரி ஸ்டீபன், இளைஞரணி ஆர். சௌந்தரராஜன், பி தினேஷ் ராஜா, பேரூர் கழகச் செயலாளர் ஜெயராமன், எ.சந்திரபோஸ் மற்றும் ஏராளமானவர் கள் கலந்து கொண்டார்கள்.

பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளரும் , முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான வே.ஆரோக்கியசாமி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

முன்னதாக முதன்முறையாக காளையார் கோவிலுக்கு வருகைதந்த ஆ. ராசா எம்.பிக்கு மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் முன் னாள் அமைச்சர் மு.தென்னவன் ஒன்றிய செயலாளர் வே. ஆரோக்கியசாமி முன்னிலையில் மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் வரவேற்பு அளித்தார்கள்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தலைமையில் பின்லாந்து நாட்டு கல்வி அமைச்சர் திருமதி அனா மஜா ஹென்றிக்சன் முன்னிலையில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் திறன் மேம்பாட்டு முனைப்புகள் குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி எ. சுந்தரவள்ளி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வெற்றி செல்லாது என்று அறிவித்தால் மட்டும் போதாது

# ஓ.பி.ரவீந்திரநாத் குமாரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்!

## தங்க தமிழ்ச்செல்வன் மனு: உச்சநீதிமன்ற நீதிபதிகள் பாராட்டு!

புதுடெல்லி, அக்.21-

தேர்தல் வேட்பு மனுவில் உண்மை விவரங்களை மறைத்த தேனி நாடாளுமன்ற உறுப்பினர் ஓ.பி. ரவீந்திரநாத்தின் வெற்றி செல்லாது என அறிவித்தால் மட்டும் போதாது. அவரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தொடர்ந்த மனுவில் இருந்து புதிய விஷயத்தை தாங்கள் தெரிந்து கொண்டிருப்பதாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர்.

வேட்பு மனுவில் உண்மை விவரங்களை மறைத்து ஓ.பி.ரவீந்திரநாத் குமார் தாக்கல் செய்த வேட்புமனு ஏற்கப்பட்டது சட்டவிரோதம், அதனால் அவரது வெற்றியை ரத்து செய்ய வேண்டும் என தேனி தொகுதியை சேர்ந்த மிலானி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில் குறிப்பாக, வாணி பின்னலாடை நிறுவனத்தில் இயக்குனராக இருந்த போது வாங்கிய சம்பளத்தை மறைத்துள்ளார்.

வாணி ஃபேப்ரிக்ஸ் நிறுவனத்தில் 15 ஆயிரம் பங்குகள் வைத்திருப்பதையும் வேட்பு மனுவில் மறைத்துள்ளார்.

விவசாயத்தில் மட்டுமே வருமானம் கிடைத்ததாக கூறிய நிலையில், வட்டி தொழில் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் மூலம் கிடைத்த வருமானத்தையும் மறைத்துள்ளார்.

4 கோடியே 16 லட்ச ரூபாய்க்கு அசையும் சொத்துகள் இருக்கக்கூடிய நிலையில், ஒரு கோடியே 35 லட்ச ரூபாய் என்று மட்டுமே வேட்பு மனுவில் காட்டியுள்ளார்.

இந்த சொத்து விவரங்கள் குறித்து தேர்தல் அதிகாரி முறையான விசாரணை செய்யவில்லை என குற்றஞ் சாட்டியிருந்தார்.

அந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், ஓ.பி.ரவீந்திரநாத் வெற்றியை செல்லாது என தீர்ப்பளித்தது.

76 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ரவீந்திரநாத் குமார் வெற்றிபெற்றுள்ளதால், அவர் தகவலை மறைத்தார் என்ற காரணத்தை கூறி அவரது தேர்தல் வெற்றியை செல்லாது என அறிவிக்க முடியாது என்கிற ரவீந்திரநாத் தரப்பு வாதத்தை ஏற்க முடியாது

சொத்து, கடன், பொறுப்பு, வருமானம் ஆகியவற்றை மறைத்தது நிரூபிக்கப்பட்டுள்ளது எனவே ஓ.பி.ரவீந்திரநாத் குமாரின் வேட்புமனுவை ஏற்றது முறையற்றது. அதனால் மிலானி தாக்கல் செய்த இந்த தேர்தல் வழக்கை ஏற்றுக்கொண்டு, ஓ.பி.ரவீந்திரநாத்குமார் பெற்ற வெற்றி செல்லாது என தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது

இந்த தீர்ப்பை எதிர்த்து ஓ.பி.ரவீந்திரநாத் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு (கடந்த ஜூலை 30 ஆம் தேதி) மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு உச்சநீதிமன்றத்தால் கடந்த ஆகஸ்ட் 4 ஆம் தேதி விசாரிக்கப்பட்ட நிலையில் ஓ.பி. ரவீந்திரநாத்தின் தேர்தல் வெற்றியை செல்லாது என அறிவித்த சென்னை உயர்நீதிமன்ற உத்தரவிற்கு இடைக்கால தடை விதிப்பதாகவும் மக்களவை உறுப்பினராக ஓ.பி. ரவீந்திரநாத் தொடரலாம் என்றும் இந்த வழக்கு தொடர்பாக அனைத்து மனுதாரர்கள் மற்றும் எதிர் மனுதாரர்கள் இரண்டு வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என நோட்டீஸ் பிறப்பித்து வழக்கின் விசாரணையை ஒத்தி வைத்தனர்.

இதற்கிடையில் ஓ.பி. ரவீந்திரநாத் வெற்றியை செல்லாது என அறிவித்தால் மட்டும் போதாது அவர் தேர்தல் பத்திரத்தில் உண்மையை மறைத்தது என்பது கிரிமினல் குற்றமும் கூட எனவே அவரை தகுதி நீக்கம் செய்து அடுத்த தேர்தலில் போட்டியிட தடை விதிக்க வேண்டும் என தங்க தமிழ்ச்செல்வன் சார்பில் தனியாக மனுதாக்கல் செய்யப்பட்டு இருந்தது. இந்த மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது எதன் அடிப்படையில் இந்த மனுவை தாக்கல் செய்து உள்ளீர்கள்? இதே விவகாரத்தில் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர் மேல்முறையீடு செய்துள்ளார் அப்படி இருக்கும் பொழுது இந்த மனுவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த தங்க தமிழ்ச்செல்வன் தரப்பு வழக்கறிஞர் டி. டி.நிசாந்த் மற்றும் வழக்கறிஞர் வைரவன் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் அடிப்படையில் வேட்பாளர்கள் அனைவரும் தங்களது சொத்து மதிப்பை முழுமையாக பதிவு செய்ய வேண்டும். ஆனால் இதை ஓ.பி. ரவீந்திரநாத் முழுமையாக செய்யவில்லை. இது கிரிமினல் குற்றம் மட்டுமல்லாமல் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிரானது என்றும் வாதிட்டார். நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது என்பதால் தான் தனியாக மனு தாக்கல் செய்திருக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

அதை ஏற்ற நீதிபதிகள் உண்மையில் இந்த விவகாரத்தை வேறு ஒரு கோணத்தில் அணுகி இருக்கிறீர்கள் இந்த மனுவின் மூலமாக நாங்களும் இன்று ஒரு புது விஷயத்தை கற்றுக் கொண்டிருக்கிறோம் என நீதிபதிகள் சிரித்தபடி கூறினார்கள் மேலும் இந்த மனு தொடர்பாக ஓ.பி. ரவீந்திரநாத் பதில் அளிக்க நோட்டீஸ் பிறப்பித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் தனது வெற்றி செல்லாது என உத்தரவை எதிர்த்து ரவீந்திரநாத் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவுடன் இந்த வழக்கு சேர்த்து விசாரிக்கப்படும் என அறிவித்தனர்.

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

# பல்லவபுரம் தெற்கு பகுதியில் பாக முகவர் செயல் வீரர்கள் கூட்டம்!

## பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னாட் அறிக்கை!

பல்லவபுரம், அக்.21-

பல்லவபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பாக முகவர் செயல் வீரர்கள் கூட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னாட் விடுத்துள்ள அறிக்கையில் பல்லாவரம் தெற்கு பகுதி திமுக சார்பாக வட்டங்கள் தோறும் பாகங்கள் வாரியாக பாக செயலர்கள் கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன 22-10-2023 அன்று 28 மற்றும் 21வது வார்டுகளில் பாகசெயல் வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளன காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரையும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையும் 269, 270, 271, 273, 274 ,204 ஆகிய பாகங்களில் செயலர்கள் கூட்டம் நடைபெற உள்ளன.

இக்கூட்டங்களில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு தேர்தல் களத்தில் பணியாற்றுவது என்பது குறித்தும் குறிப்பாக வாக்குச்சாவடி முகவர்கள் நூறு வாக்காளருக்கு ஒருவர் என நியமிக்க பட்டவர்களை வரும் தேர்தல் களத்தில் எவ்வாறு தேர்தல் பணி ஆற்று வைப்பது என்பது குறித்தும் கழக அரசின் திட்டங்களை விளக்கி தேர்தல் களத்தில் சிறப்பாக பணியாற்றுவது எவ்வாறு என்பது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி நடைபெறும் கூட்டங்களில் சிறப்பு உரையாற்ற உள்ளார்.

மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள், மாவட்ட வழக்கறிஞர், அணி துணை அமைப்பாளர், வழக்கறிஞர் ஆர். குமரேசன், பம்மல் வடக்கு பகுதி துணைச் செயலாளர் மு. ஸ்ரீதர், ஆயிரம் வருகை தந்து கலந்து கொள்ள உள்ளார்கள். நமது பகுதி கழகத்தின் பொறுப்பாளர்களாக மாவட்ட கழக பிரதி கே.தனசேகர், பகுதி அவை தலைவர் வை.த.ரா.மூர்த்தி ஆயிரம் கலந்து கொள்ள உள்ளார்கள்.

எனவே வட்ட கழகச் செயலாளர்கள் தங்கள் வட்டத்தில் உள்ள பாக முகவர்கள் தலைமையில் சிறப்பாக பாகம் செயல் வீரர்கள் கூட்டத்தை கூட்டிட வேண்டும். அக்கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கணித நிர்வாகிகள், பாகத்தில் உள்ள கழக உடன்பிறப்பு அனைவருக்கும் அழைப்பிதழ் தந்து அவர்களை கூட்டத்தில் பங்கேற்க செய்து விடுமாறு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னாட் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விளாத்திகுளத்தில் நடைபெற்ற மாநில பொதுக்குழு உறுப்பினர் கொப்பைராஜின் இல்லத் திருமண விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.இராமச்சந்திரன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். உடன் ஒன்றிய பேரூர்க் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.






இணையத்தில் தி.மு.கழகத்தின் இதயமாகத் திகழும் தகவல் தொழில் நுட்ப அணியின் சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர், செயின்ட் ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் நேற்று மாவட்ட தொகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். அதுபோது நம் கொள்கை எதிரிகளின் சூழ்ச்சிகளுக்கும் பொய்களுக்கும் தக்க பதிலடி தந்து வருவதோடு, நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பட்டிதொட்டியெங்கும் கொண்டு சேர்க்கும் கழக தகவல் தொழில்நுட்ப அணியினரை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டினார். திட்டமிட்டு பரப்பப்படும் Disinformation, அவற்றின் உண்மைத்தன்மை அறியாமல் பகிரப்படும் Misinformation ஆகியவற்றுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் இன்னும் ஆற்றலுடன் செயல்படுவோம் என்று புதிய நிர்வாகிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தினார்.

### செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் கிடைக்காது என்று அண்ணாமலை கூறுவது ஆணவத்தின் உச்சம்!

# நீதிமன்ற நடைமுறையில் தலையிடுவது மிகப்பெரிய குற்றமாகும்!

## காங்கிரஸ் மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம்!



சென்னை, அக். 21-

தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க.வில் சேர்ந்தவுடனே சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, தோல்வியடைந்து பிறகு தமிழ்நாடு பா.ஜ.க. தலைவராக பதவி உயர்வு பெற்ற அண்ணாமலை பொறுப்பேற்றது முதற்கொண்டு நாள்தோறும் அடாவடித்தனமான அதிரடி பேச்சுகளால் ஊடக வெளிச்சம் பெற்று மிகப்பெரிய தலைவராக முடியும் என்று கனவு கண்டு செயல்பட்டு வருகிறார். ஆனால், அவரது செய்தியாளர்கள் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளை சகித்துக் கொள்ளாமல் அவர்களை கேவலப்படுத்துவதோடு, களங்கப்படுத்துகிற அராஜக போக்கை கடைப்பிடித்து வருவதால் ஊடகங்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் சம்பாதித்து வருகிறார். இவரது பேட்டி என்றாலே ஊடகவியலாளர்கள் நாங்கள் செல்ல மாட்டோம், வேறு யாரையாவது அனுப்புங்கள் என்று கூறும் அளவுக்கு இவர் மீது பத்திரிகையாளர்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள்.

**தலைவர்களை இழிவுப்படுத்தும் அண்ணாமலை!**

அடிப்படையில் தான் தோன்றித்தனமாகச் செயல்படும் இவருக்கு மூத்த பா.ஜ.க. தலைவர்கள் யாருமே ஆதரவாக இல்லை. இவரைச் சுற்றியிருப்பவர்கள் அனைவருமே சந்தர்ப்பவாதத்தின் அடிப்படையில் பா.ஜ.க.வை சேர்ந்தவர்கள் தான். இந்த சூழலில் ஒட்டுமொத்த பா.ஜ.க. எதிர்ப்பை சம்பாதித்து வருகிறார் அண்ணாமலை.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி அமைய வேண்டும் என்கிற பா.ஜ.க.வின் விருப்பத்திற்கு எதிராக அண்ணாமலை தொடர்ந்து செயல்பட்டு வந்தார். அ.தி.மு.க., ஜெயலலிதா, அண்ணா போன்ற தலைவர்களை இழிவுபடுத்திப் பேசினார். இதை சகித்துக் கொள்ளாத அ.தி.மு.க., பா.ஜ.க.வோடு எந்த காலத்திலும் ஒட்டும் கிடையாது, உறவும் கிடையாது. கூட்டணியும் கிடையாது என்று எடப்பாடி பழனிசாமி தெளிவாக அறிவித்து விட்டார். அதற்குப் பிறகு அண்ணாமலை தில்லிக்கு அழைக்கப்பட்டு, இனி அ.தி.மு.க.வுக்கு எதிராக எதுவும் பேசக் கூடாது என்று வாய்ப்பூட்டு போடப்பட்டது. அதற்கு பிறகு பல் பிடுங்கிய பாம்பாக, பியூஸ் போன பல்பாக செயல்பட்டு வருகிறார்.

**அமித்ஷா தீட்டிய சதித்திட்டம்!**

இந்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் கொங்கு மண்டல தளபதியாக செயல்பட்டு கடந்த மக்களவை, சட்டமன்றத் தேர்தல்கள், ஊரக, உள்ளாட்சித் தேர்தல்களில் அ.தி.மு.க., பா.ஜ.க. கோட்டை என்கிற மாயத் தோற்றத்தைத் தகர்த்தெறிந்து தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற கடும் பணியாற்றி காரணமாக இருந்த செந்தில் பாலாஜியை ஏதாவது ஒரு வழக்கில் சிக்க வைக்க அண்ணாமலையின் பரிந்துரையின் பேரில் உள்துறை அமைச்சர் அமித்ஷா தீட்டிய சதித் திட்டம்தான் கைது நடவடிக்கை. அதன் காரணமாக அ.தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த போது 8 ஆண்டுகளுக்கு முன்பு முறைகேடு நடைபெற்றதாகக் கூறி தொடுக்கப்பட்ட வழக்கில் மத்திய அமலாக்கத்துறை அவசியமில்லாமல் மூக்கை நுழைத்து அந்த வழக்கை அடிப்படையாகக் கொண்டு சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டு 4 மாதங்களாக புழல் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

**நீதிபதி போல காட்டிக்கொள்வதா?**

கைது செய்யப்பட்டவுடனேயே நெஞ்சு வலி ஏற்பட்டு காவேரி மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு ஓய்வெடுக்கக் கூட வாய்ப்பு தராமல் புழல் சிறையில் அடைப்பதில் அமலாக்கத்துறை தீவிரம் காட்டியது.

இதனால், கடுமையான மன உளைச்சல் ஏற்பட்டு இதய நோயாளியான செந்தில் பாலாஜி கடும் துன்பத்திற்கு ஆளாகி வருகிற சூழலில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜாமின் மனு தாக்கல் செய்திருந்தார். ஒரு சாதாரண வழக்கில் ஒரு குற்றவாளியை விசாரிக்க 4 மாதங்கள் எடுத்துக் கொண்ட பிறகும், அவரை ஜாமினில் விடுவிக்கக் கூடாது என்று வாதாடியதால் சென்னை உயர்நீதிமன்றம் அவரது ஜாமின் மனுவை தள்ளுபடி செய்து விட்டது. இந்நிலையில் அரைவேக்காடு அண்ணாமலை தாம் ஒரு நீதிபதி போலக் காட்டிக் கொண்டு செந்தில் பாலாஜிக்கு ஜாமின் கிடைக்காது என்று ஆணவத்தின் உச்சியில் அமர்ந்து கொண்டு கொக்கரித்திருக்கிறார்.

**பகல் கனவு காணும் அண்ணாமலை!**

இன்றைக்கு மேல்முறையீட்டிற்காக உச்ச நீதிமன்றத்தில் ஜாமின் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இச்சூழலில் இந்தியாவை ஆளுகிற பா.ஜ.க. கட்சியின் தமிழக தலைவர், தமிழக அமைச்சராக இருக்கிற செந்தில் பாலாஜிக்கு ஜாமின் கிடைக்காது என்று ஒரு மாநில பா.ஜ.க. தலைவர் கூறுவது நீதிமன்ற நடைமுறையில் தலையிடுவது மிகப்பெரிய குற்றமாகும். இத்தகைய குற்றத்தை கூலிக்கு கூட்டத்தை சேர்த்து அதிரடி பேச்சுக்களின் மூலம் தாம் ஒரு தலைவராக முடியும் என்று பகல் கனவு காண்கிற அண்ணாமலை செய்திருக்கிறார். இவருக்குச் சட்டம் என்ன தண்டனை கொடுக்கிறதோ இல்லையோ, தமிழக மக்கள் வருகிற மக்களவை தேர்தலில் தமிழக பா.ஜ.க.வுக்கு ஒரு தொகுதியில் கூட டெபாசிட் கிடைக்காத நிலையை ஏற்படுத்தி உரிய பாடத்தைப் புகட்டுவார்கள் என்பது உறுதி. இந்தியாவிலேயே ஒரு மாநிலத்தில் ஓர் இடத்தில் கூட வெற்றி பெற முடியாமல் டெபாசிட் இழந்து அண்ணாமலையின் அருவெறுப்பு அரசியலால் தமிழக பா.ஜ.க. மிகப்பெரிய விலையைத் தரப்போவது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வாறு அவர், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



மதுரை தெற்கு மாவட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சிவநேசன் தாயார் சமீபத்தில் மறைந்ததையொட்டி கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி., அவரது இல்லத்திற்கு நேரில் சென்று மறைந்த அவரது தாயாரின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், துணை செயலாளர் பச்சையப்பன் தலைமை கழக வழக்கறிஞர் பா.கணேசன், மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சே. மணிமாறன், வடக்கு மாவட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கலாநிதி, மாநகர அமைப்பாளர் தேவசேனன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

# நீட் தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதா ஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, அக். 21-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வில் இருந்து விலக்குக் கோரி தூத்துக்குடியில் இன்று (21.10.2023) கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது என வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மருத்துவக் கல்வி பயில்வதற்கு நீட் தேர்வு அவசியம் என ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இதனால் கிராமப்புற மாணவர்கள், அரசுப் பள்ளி மாணவர்கள் ஆகியோர் மருத்துவக் கல்வி பயில்வதற்கான வாய்ப்பு பாதிக்கப்படுகிறது. எனவே தமிழகத்திற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

நீட் தேர்வில் இருந்து விலக்கு தர வேண்டுமென்ற தமிழக மக்களின் வேண்டுகோளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

மருத்துவ உயர் படிப்புக்கு நீட் தேர்வில் "0" மதிப்பெண் பெற்றாலும் சேர்ந்து பயிலலாம் என ஒன்றிய அரசு அறிவிப்பு செய்ததன் மூலம் நீட் தேர்வு தேவையற்றது என்பதை நம்மால் அறியமுடிகிறது.

இக்கோரிக்கையை நிறைவேற்றக் கோரி குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோரிடம் 50 நாட்களில் 50 லட்சம் கையொப்பம் பெற வேண்டுமென தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும், மாநில இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களும் வலியுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பாக நீட் விலக்கு கோரி கையெழுத்து இயக்கம் தொடக்க விழா நிகழ்ச்சி தூத்துக்குடி பாளை ரோடு ராஜாஜி பூங்கா எதிரில் உள்ள கனி பேலஸ் திருமண மண்டபத்தில் இன்று (21.10.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள், மருத்துவர்கள், பொதுமக்கள் மற்றும் தி,மு.க மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை, செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர்கள், உறுப்பினர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள், ஒன்றிய பெருந் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள், பேரூராட்சி தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி தலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் ஒன்றிய நகர, பகுதி, பேரூர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், வட்டம், வார்டு, நிர்வாகிகள், கழக முன்னோடிகள் திரளாக பங்கேற்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

# ஆவடி மாநகர தி.மு.க. சார்பில் பி.எல்.ஏ.2. - பி.எல்.சி. ஆய்வுக்கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு !



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி வடக்கு பகுதி, மேற்கு பகுதி, கிழக்கு பகுதி, திருவேற்காடு நகரம் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எல்லாபுரம் மத்தியம், திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, பூவிருந்தவல்லி மேற்கு ஆகிய நிர்வாகங்களில் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தலைமையில் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் ஆர். டி.இ.ஆதிசேசன் மற்றும் பழ.கணேசன் முன்னிலையில் மாவட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் மேற்பார்வையாளர்கள் BLA2. BLC ஆய்வு செய்யும் நிகழ்ச்சி கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

**நாள் : 22.10.2023 – நேரம் : காலை 9 மணி**

| நேரம் | இடம் | நிர்வாகம் ஒன்றிய நகர பகுதி செயலாளர்கள் | வார்டு ஊராட்சி |
|---|---|---|---|
| காலை 9 மணி | ஆவடி மேற்கு பகுதி கழக அலுவலகம் | ஆவடி மேற்கு பகுதி பொன் விஜயன் | வார்டுகள் 15-16-17-18-19- |
| காலை 10 மணி | எம்.எம்.திருமண மண்டபம், சோழம்பேடு | ஆவடி கிழக்கு பகுதி பேபி சேகர் | வார்டுகள் 25- 26-27-28- 30-32- |
| மதியம் 12 மணி | மங்களம் திருமண மண்டபம் திருமுல்லைவாயில் | ஆவடி கிழக்கு பகுதி பேபி சேகர் | வார்டுகள் 6- 7-8- 9- 10-29 |
| மதியம் 3 மணி | ராமாலையா திருமண மண்டபம், திருவேற்காடு | திருவேற்காடு நகரம் என்.இ.கே.மூர்த்தி | வார்டு 1 முதல் 4 வரை வார்டு 9 முதல் 18 வரை |
| மாலை 6 மணி | ஹரி கிருஷ்ணா திருமண மண்டபம், நந்தவன மேட்டூர் | ஆவடி வடக்கு பகுதி ஜி.நாராயண பிரசாத் | வார்டுகள் 13- 23-36- 38- 39 |
| காலை 10 மணி | தாமரைபாக்கம் | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் தங்கம் முரளி | |
| **வார்டு ஊராட்சி :** வெங்கல், செம்பேடு, தாமரைபாக்கம், கொமக்கம்பேடு, மாகரல், சேத்துப்பாக்கம், குருவோயில், கண்ணிகாபுரம், ஆயிலசேரி | | | |
| காலை 11 மணி | | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் ஆர்.ஜெயசீலன் | பெருமாள்பட்டு |
| மதியம் 1 மணி | வி.எம்.சத்திரம் ஆண்டர்சன்பேட்டை | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் டி.தேசிங்கு | |
| **வார்டு ஊராட்சி :** அன்னம்பேடு, கருணாகரசேரி, திருமணம், சித்துக்காடு, கொசவன்பாலயம், கொரட்டூர், கொட்டாம்பேடு, கூடப்பாக்கம், படூர், நேமம், மேல்மனம்பேடு, வெள்ளவேடு, குத்தம்பாக்கம் | | | |
| மதியம் 2 மணி | புட்லூர் | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் ஆர்.ஜெயசீலன் | புட்லூர் |
| மாலை 4 மணி | பத்மாவதி ராமதாஸ் மண்டபம் 25. வேப்பம்பட்டு | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் சே.பிரேம் ஆனந்த் | 25. வேப்பம்பட்டு 26. வேப்பம்பட்டு அயத்தூர் |
| மாலை 6 மணி | ஆர்.எம். கெஸ்ட் ஹவுஸ், காக்களூர் | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் ஆர்.ஜெயசீலன் | காக்களூர் |

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், BLA2. BLC மேற்பார்வையாளர்கள், வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

### திமிரி நம்பரை கழக முன்னோடி

# என்.ஆர்.பி.சீனிவாசன் முதலாமாண்டு நினைவேந்தல்!

## படத்திறப்பு - நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

ஆர்க்காடு, அக். 21-

திமிரி ஒன்றிய இளைஞரணி முன்னாள் அமைப்பாளர் - நம்பரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவருமான என்.ஆர்.பி.சீனிவாசன் அவர்களின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று (21.10.2023-சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் நம்பரையில் நடைபெறுகிறது.

அது சமயம் அன்னாரது படத்திறப்பு நிகழ்ச்சியும், தொடர்ந்து மலர் வெளியீடு, நலிந்தோர்க்கு நல உதவிகள், கவி அரங்கம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறு கிறது.

ராணிப்பேட்டை மாவட்டக் கழக நிர்வாகிகள், ஆர்க்காடு தொகுதி, ஒன்றிய நகரக் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னணியினர் நிகழ்ச் சிகளில் பங்கேற்கிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கிளைக் கழகச் செயலாளர் என்.எஸ்.பரந்தாமன் செய்து வருகிறார்.



கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் மேற்கு பகுதி 94அ வட்டத்தில்வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணியில். வில்லிவாக்கம் மேற்கு பகுதி செயலாளர், 8வது மண்டல குழு தலைவர் கூ.பீ.ஜெயின் எம்.சி., வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் வே.கௌதமன், வட்டச்செயலாளர் ஆர். தீனதயாளன் மற்றும் பா.ஜானி, 15வது பாக முகவர் பழனி மற்றும் கழக நிர்வாகிகள் ஈடுபட்டனர்.



சிவகங்கை மாவட்டம் அரளிக்கோட்டையில் நடைபெற்ற மக்கள் தொடர் முகாமில் அரளிக்கோட்டை மேல்நிலைப் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி.வகுப்பில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவ – மாணவிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சொந்த நிதியில் இருந்து உதவிகளை வழங்கி பாராட்டினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், மாவட்ட வருவாய் அலுவலர் மோகன் சந்திரன் உட்பட அலுவலர்கள் உள்ளார்கள்.

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# நீட் தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம் துவக்கம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, அக்.21-

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர்-உதயநிதிஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி இன்று(21ஆம் தேதி) மதுரை, திருப்பாலை குறிஞ்சி மகாலில் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பாக நீட்தேர்வில் தமிழ்நாட்டிற்கு விலக்களிக்கக் கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் துவங்க உள்ளதாக மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார், அதன்விபரம் வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு மாணவர்களின் மருத்துவ கனவை சிதைத்து உயிரைப் பறிக்கும் நீட் தேர்வுக்கு ஒன்றிய அரசு விலக்கு அளிக்கக் கோரியும், ஒன்றிய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்ட தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மருத்துவ பட்டப் படிப்புக்கான சேர்க்கை 2021என்ற சட்ட முன்முடிவுக்கு அனுமதி அளிக்க மறுத்து குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பாமல் காலதாமதம் ஏற்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசாங்கத்தை கண்டித்தும் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பாக மாபெரும் கையெழுத்து இயக்கம் இன்று (21.10.2023-சனிக்கிழமை) காலை 10.30மணிக்கு மதுரை திருப்பாலை யாதவா பெண்கள் கல்லூரி அருகிலுள்ள குறிஞ்சி திருமண மண்டபத்தில் இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பாரகு ஆகியோர் முன்னிலையில், கழக கொள்கைப் பரப்பு செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கம்பம் செல்வேந்திரன் சிறப்புரையாற்ற தொடங்கப்பட உள்ளது.



இல்லம் தேடி மக்களை சந்தித்து நீட் தேர்வுக்கு எதிராக 50நாட்களில் 50லட்சம் கையெழுத்து வாங்கிட வேண்டும் என்ற இலக்கோடு தொடங்கப்பட உள்ள இந்த கையெழுத்து இயக்க துவக்க விழாவில் மதுரை வடக்கு மாவட்ட கழகத்தின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பெரம்பலூர் - அரியலூர் மாவட்டம் - ஒன்றிய - நகர - பேரூர்

# அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் - குன்னம் சி.இராஜேந்திரன் - எம்.பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர். அக். 21-

பெரம்பலூர் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல், பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், எஸ்.ஜோயல், இன்பா,ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, ஜி.பிரதீப்ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினார்கள்.

இந்த நேர்காணலில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்டச் செயலாளர் குன்னம்சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, டாக்டர் செ.வல்லபன், பொதுக் குழு உறுப்பினர் எஸ்.அண்ணாதுரை, பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், அரியலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், பேரூர் செயலாளர்கள் ஏ.எஸ்.ஜாகீர்உசேன், எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், அரியலூர் மாவட்ட ஒன்றிய கழக செயலாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்பழகன், வா.சௌந்தரராஜன், ரெ.அசோகசக்கரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.ஷாஜகான் பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், தங்க.கமல், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், அரியலூர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீர.சிவா, எஸ்.ஆர்.முருகேசன், ஆ. தமிழ்மாறன், சுபா.ச.வசந்த பகலவன், த.குணசீலன், சோ.ப. தர்மராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

# நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம்!

### ஜி.கார்த்திகேயன் -ஆர்.சத்திய நாராயணன் - பா.கமலக்கண்ணன் அறிக்கை!

கடலூர், அக். 21-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக, இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி இணைந்து 'நீட்' தேர்வை ரத்துச் செய்யக்கோரி நடத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.சத்திய நாராயணன், மருத்துவர் அணி டாக்டர் பா.கமலக்கண்ணன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு (ம) சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி இணைந்து 'நீட்' தேர்வை ரத்துச் செய்யக் கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (21-10-2023) காலை 9.00 மணியளவில் காட்டு மன்னார் கோவில், கிருஷ்ணமஹால் ஏ.சி. (எம்.ஆர்.கே. பொறியியல் கல்லூரி எதிரில்) நடைபெறவுள்ளது.

அதுசமயம், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிமன்றபிரதிநிதிகள், மாநகர மேயர், ஒன்றிய குழுத்தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி, மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் அனைவரும் 'நீட்' தேர்வு ரத்துச் செய்யக்கோரி நடைபெறும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தில் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திக்கேயன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.சத்திய நாராயணன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்.பா.கமலக்கண்ணன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.



கலைஞர் நூற்றாடு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு கலைப் பண்பாட்டுத் துறை நுண்கலைப் பணி திட்டங்களின் கீழ் மாநில அளவிலான ஓவியம் மற்றும் சிற்பக் கலைக் காட்சி தொடக்க விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சென்னை – சூளைமேடு ஸ்ரீ தர்சினி கலைக் கூடத்தின் தாளாளர் மற்றும் இயக்குநர் தா.தர்மலிங்கம், ஓவியத் துறையில் சிறப்பான வகையில் பயிற்சி அளிப்பதை பாராட்டி கலைப் பண்பாட்டுத் துறையின் சார்பில் 2022–2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த கலை ஆசிரியருக்கான நல்லாசிரியர் விருதையும் ரூபாய் 10,000க்கான பொற்கிழியையும் வழங்கினர். அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் தா.மணிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஜனநாயகம் நிலைக்க இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும்!

இந்தியா (INDIA) கூட்டணி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால்தான் ஜனநாயகம் நிலைக்கும், இல்லையெனில் சர்வாதிகாரம் தளிர்க்கும்.

ஜனநாயகத்தின்மீதும், ஜனநாயகத்தைக் கட்டிக்காக்கும் அமைப்புகள் மீதும், அரசியல்சட்டத்தின் மீதும் இன்று நடப்பதுபோன்ற நவீன தாக்குதல் நாட்டின் விடுதலைக்குப்பின் எப்பொழுதும் நடைபெற்றதில்லை.

1976ஆம் ஆண்டில் மறைந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், அரசியல்சட்டப் பிரிவுகளின்படிதான் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தினார் (Proclamation of Emergency). ஆனால், அவர் குறிப்பிட்டுள்ள அவசரநிலைப் பிரகடனத்திற்கான சூழ்நிலை உள்நாட்டில் நிலவிடவில்லை என்பதுதான் அன்றைய எதார்த்த நிலைமை.

இவற்றையெல்லாம் அறிந்தபின்னர்தான் மறைந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சென்னை மெரினாக் கடற்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அவசரகால நிலைமை அமலில் இருக்கும்பொழுது நடைபெற்ற அத்துமீறிய, சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார்.

ஆனால், இன்று ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி முழுமையாக இந்திய அரசியல் சட்டத்தையே செயலிழக்கச் செய்யும் திட்டமிட்ட நடவடிக்கைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டே வருகிறது. ஜனநாயகத்தில் (Transparancy) வெளிப்படைத் தன்மை என்பது மிக முக்கியமான அடிப்படை அம்சமாகும். ஒன்றிய அரசின் முடிவுகளும், திட்டங்களும், நாடாளுமன்ற விவாதத்திற்கும், கருத்துப் பரிமாற்றத்திற்கும் வருவதென்பதே ஒன்றிய அரசின் வெளிப்படைத் தன்மையை மக்கள் பிரதிநிதித்துவ மன்றத்தின் மூலம் மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காகத்தான் என்பதை நாட்டுமக்கள் அனைவரும் தெளிவாகவே அறிவார்கள்.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு உறுப்பினர்

அரசியல்சட்டத்தை உருவாக்கிய மக்கள், தங்களின் பிரதிநிதித்துவ மன்றத்தின் மூலம் ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய அரசு மக்கள்விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அல்லது தங்கள் கட்சியின் மிருக பலத்தைப் பயன்படுத்தி மக்கள் விரோதச்சட்டங்களை உருவாக்கினாலும், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறக்கூடிய நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலில், அந்த அரசியல் கட்சியை முழுமையாக நிராகரிப்பதற்கான வாய்ப்புகள் மக்களுக்கு உண்டு.

ஆனால், அத்தகைய மக்கள் விரோத அரசு தங்களுக்கு நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் திட்டமிட்டு, அரசியல்சட்டத்திற்கு விரோதமாகவும், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு விரோதமாகவும், தங்களுக்குள்ள எண்ணிக்கைப்பலத்தின் மூலம் சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றி அமல்படுத்தினால், அதனால் ஏற்படும் பாதிப்புகளை எப்படிச் சரிசெய்வது என்ற இக்கட்டான அரசியல் குழப்பநிலையை சரிக்கட்டி நேர் செய்வதற்கான உரிமையை உயர் நீதிமன்றங்களுக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் "நீதிமன்றத்தின் மறு ஆய்வு" (Judicial Review) என்ற ஏற்பாட்டின்மூலம் இந்திய அரசியல் சட்டம் (Indian Constitution) வழங்கியிருக்கிறது.

இந்தியா என்பது ஒரு நாடு என்பதைவிட, ஒரு துணைக்கண்டம் என்பதுதான் வரலாற்று ஆசிரியர்களின் தீர்க்கமான முடிவாகும். இங்கு வேறுபட்ட கலாச்சாரம், பண்பாடு, மதம், மொழி, இனப்பாகுபாடுகளை உள்ளடக்கிய பல்வேறு தேசிய இனங்கள் தொன்றுதொட்டு பலநூறு ஆண்டுகாலமாக தங்களின் பூர்வீக வாழ்விடங்களாகத் தீர்மானித்து வாழ்ந்து வருகிறார்கள். வளர்ந்து வரும் நாட்டில் காலமாற்றங்களுக்கு ஏற்ப தேவைகளின் அடிப்படையில் பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும். அதிலும் ஜனநாயகத்தையும், மதச்சார்பின்மையையும் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொண்ட நாட்டில் அரசியல் கட்சிகளின் அடிப்படையில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்று எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில் ஒன்றியத்திலும், மாநிலங்களிலும் ஆட்சிகள் அமைக்கப்படுகின்றன.

இந்த முறையில் இயல்பாகவும், இயற்கையாகவும் ஒன்றியத்தில் ஒரு அரசியல் கட்சியும், மாநிலங்களில் வெவ்வேறு அரசியல் கட்சிகளும், எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்புகள் நிரம்ப உண்டு, தற்பொழுதுகூட இந்த வேறுபட்ட நிலைமைகளைப் பார்க்கிறோம். ஜனநாயகத்தில் இந்த நிலைமைகள் இந்தியா போன்ற மிகப்பெரிய நாடுகளில் நிகழ்வது இயல்பானதும், இயற்கையானதுமாகும்.

இத்தகைய சூழ்நிலைகளில் ஒன்றிய அரசு அரசியல் காரணங்களுக்காக, தங்களின் எண்ணிக்கை பலத்தை ஆயுதமாக்கி, மக்கள் விரோதசட்டங்களையும்,திட்டங்களையும் உருவாக்கினால், அதனால் உருவாகும் மக்கள் விரோத, ஜனநாயகவிரோதத் தாக்கத்தை பொதுத் தேர்தலுக்காக ஐந்து ஆண்டுகள் காத்திராமல், மக்கள் விரோதத்தாக்கத்தை இடைக்காலத்தில் இந்திய அரசியல்சட்டத்தின் அடிப்படையில் தடுத்து நிறுத்துவதற்காக, தொலைநோக்குடன் மக்களின் உரிமைகளையும், ஜனநாயகத்தையும் காப்பாற்றுவதற்காக பாபாசாகிப் அம்பேத்கர் அவர்களும், அரசியல் சட்ட நிர்ணய சபையில் அங்கம் பெற்றசட்டவிற்பன்னர்களும்தொலைநோக்குடன் ஆழ்ந்து சிந்தித்து உருவாக்கிய நீதிமன்றங்களுக்கான தனித்த, சிறப்பு உரிமையான சட்டங்களை மறுபரிசீலனை செய்யும் அதிகாரமாகும் (Judicial Review).

மேலும், ஜனநாயகத்தில் சட்டத்தின் பாதுகாப்பும், திட்டத்தின் பயனும் எந்த மக்களுக்காக உருவாக்கப்பட்டதோ அந்த மக்கள் பகுதியினருக்கு உடனடியாகச் சென்றடையவேண்டும் என்பதுதான் சட்டங்களின் அடிப்படை நோக்கமாகும். பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான ஒன்றிய அரசு 2014ஆம் ஆண்டு உருவான நாள் முதல், உருவாக்கப்பட்ட சட்டங்களின் விளைவுகளும், தாக்கங்களும் எதிர்மறையாகவே அமைந்துள்ளது என்பதை நாணய மதிப்பிழப்பு (Demonit aisation Act) சட்ட அமலாக்கத்தின் மூலம் ஏற்பட்ட பாதிப்புகளால் அறிய முடிந்தது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்று வேளாண் சட்டங்களும், விவசாயிகளின் நீண்ட போராட்டத்திற்குப் பின்னர் ஒன்றிய அரசால் திரும்பப்பெறப்பட்டன. சமீபத்தில் பெண்களுக்கு 33 சதவிகித ஒதுக்கீடு சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதன் அமலாக்கம் எப்பொழுது என்ற எதிர்பார்ப்பு இந்திய ஒன்றியம் முழுமையும் இருந்தது. ஆனால், ஒன்றிய அரசின் சார்பாக என்ன விளக்கம் அளிக்கப் பட்டது என்றால், நாட்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பின்னர்தான் அமுலுக்கு வரும் என்று ஒன்றிய அரசு அறிவிக்கிறது.

எனவே, பெண்களுக்கான ஒதுக்கீடுச் சட்டத்தின் பயன் பெண்களுக்கு எட்டுவது எப்பொழுது? அல்லது கானல்நீரா? என்பதற்கான ஓர் அறிவு பூர்வமான கருத்தரங்கம், தமிழ்நாடு முதல்வர் தலைமையேற்றிட மாநில மகளிர் அணித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கனிமொழி கருணாநிதி அவர்கள் ஏற்பாடு செய்த இந்திய ஒன்றிய அளவில் உள்ள "இந்தியா" (INDIA) கூட்டணியில் உள்ள அனைத்துப் பெண் ஆளுமைகளும் கலந்துகொண்டனர். குறிப்பாக அன்னை சோனியா காந்தியும், திருமதி.பிரியங்கா காந்தியும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார்கள்.

இந்திய ஒன்றிய அளவில் வருகை தந்திருந்த "இந்திய கூட்டணியைச்" சார்ந்தவர்கள் அனைவரும், குறிப்பாக பெண் ஆளுமைகள் அனைவரும் ஒன்றிய அரசின் பெண்களுக்கான 33% ஒதுக்கீட்டை அமல் படுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டம் உண்மையில் பெண்களை ஏமாற்றி வரும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நிறைவேற்றப்பட்ட ஏமாற்றுச் சட்டம்தான் என்று அனைத்து மகளிர் பிரதிநிதிகளும் நடைபெற்ற பெண்கள் உரிமை கருத்தரங்கில் முழங்கினார்கள். அது மட்டுமல்ல, தமிழ்நாடு முதல்வர் தளபதியார் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் "திராவிடமாடல்" ஆட்சியையும், அதற்கு அடித்தளமான சமூகநீதிக் கோட்பாட்டையும் அனைவரும் மனம்திறந்து பாராட்டியதோடு, தமிழ்நாடுதான் சமூகநீதிக் கோட்பாட்டின் வழிகாட்டியெனவும் சிறப்பாகப் பாராட்டினார்கள்.

இத்தகைய அகில இந்திய அரசியல் சூழ்நிலையில், வரும் 2024ம் ஆண்டு இந்திய ஒன்றியத்திற்கான நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க விருக்கிறோம். இந்திய அரசியல் அரங்கத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெறும் பாரதிய ஜனதாக்கட்சியின் ஆட்சி, தன்னுடைய அரசியல் அதிகாரத்தை எப்படியெல்லாம் ஜனநாயகத்தை வேரறுக்கவும், இந்திய அரசியல்சட்டத்தை உருக்குலைப்பதற்கான மறைமுக வேலைகளில் ஈடுபட்டுவருகிறது என்பதை 18/10/2023ஆம் தேதிய இந்து ஆங்கில நாளிதழில் சுருதிஸ்சாகர் யமுனன் என்பவர் இந்திய அரசியல்சட்டத்தின் வடிவத்தை எப்படியெல்லாம் வெளியிலும், உள்ளேயும் சிதைக்கிறார்கள் என்பதை தன்னுடைய கட்டுரையில் தெளிவுபடுத்தியுள்ளார்கள் (Demolishing the frame from outside the Constitution. Hindu Dt. 18/10/2023).

மேலும், கட்டுரையாளர் இந்திய அரசியல்சட்டத்திற்கு நெருங்கிக் கொண்டிருக்கும் பேராபத்தைப் பற்றிக்குறிப்பிடும் பொழுது, "அரசியல் சட்டம் ஆங்காங்கு மாற்றி அமைக்கப்படுவதன் மூலம் ஜனநாயகத்தின் உயர்ந்த கோட்பாடுகளுக்கும், சிந்தனைகளுக்குமான சுற்றுச் சூழ்நிலை சிதறடிக்கப்படுவதன் மூலம் இந்திய அரசியல்சட்டம் தன் அடையாளத்தை இழக்கும் ஓர் பேராபத்தைச் சந்திக்கவிருக்கிறது", என்று தெரிவிக்கிறார் (The Constitution's identity is endangered not just by a textual transformation but also in the subversion of its liberal democratic environment. Hindu Dt. 18/10/2023).

இந்தக் கட்டுரையாளர் மட்டுமல்ல; இந்திய ஒன்றியத்தில் உள்ள அறிவார்ந்த சமூகம் பல கட்டங்களில், இந்திய ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள பேராபத்தை பல்வேறு ஊடங்கள் மூலம் எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்தியா (INDIA) அரசியல் கூட்டணி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால்தான் ஜனநாயகம் நிலைக்கும், நீடிக்கும், இல்லையெனில் சர்வாதிகாரம் தளிர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இது எச்சரிக்கையல்ல, மாறாக இயல்பான அடுத்த நகர்வின் வெளிப்பாடு!!


நாள் : 2023 அக்டோபர் 21
இடம் : விங்ஸ் கன்வென்சன் சென்டர், செயின்ட் ஜார்ஜ் பள்ளி வளாகம், செனாய் நகர், சென்னை
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில, மாவட்ட, தொகுதி கழக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் (ம) சமூக வலைதள செயல்பாட்டாளர்கள் சந்திப்பிற்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களே வருக.. வருக...
கலைஞர் 100
1924 - 2023
ENGA THALAIVAR EPPAVUME MAASS
மாண்புமிகு
முனைவர் டி.ஆர்.பி.ராஜா
மாநில தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர்
தொழில் துறை அமைச்சர்
டாக்டர். ஆர்.மகேந்திரன்
மாநில தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர்
நே.சிற்றரசு M.C.
சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழுத்தலைவர்
தயாநிதிமாறன் M.P.
மத்தியசென்னை நாடாளுமன்றத் தொகுதி
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்
M.K.மோகன் M.L.A.
அண்ணாநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
தலைமை செயற்குழு உறுப்பினர்
ந.இராமலிங்கம் M.C.
செயலாளர் – அண்ணாநகர் தெற்கு பகுதி தி.மு.க.
பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர்
ச.பரமசிவம்
செயலாளர் – அண்ணாநகர் வடக்கு பகுதி தி.மு.க.
அன்புடன் வரவேற்கும்.... கார்த்திக் மோகன் B.E., M.S. மாநில துணைச் செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

# உடன்பிறப்பே... 28

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# பெத்தாம்பாளையம் பழனிச்சாமி: அண்ணா எழுதிய முதல் பெயர்!



ஓவியம் : ரவி பேலட்

2021-ஆம் ஆண்டு தேர்தலின்போது, கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு கேட்டு, தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரப் பயணம் செய்தார் நம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மேற்கு மாவட்டங்களில் காங்கேயம், தாராபுரம், பல்லடம் ஆகிய தொகுதிகளில் பேசும்போது, 'கழகத்தை அழித்துவிடுவோம்' எனச் சூளுரைத்தவர்களுக்குப் பதிலடி கொடுத்தார்.

"கழகத்தை அழிக்க நினைத்தவர்கள் அழிந்து போயிருக்கிறார்களே தவிர, தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாதது. பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்தே பார்த்து வருகிறோம். பல சுள்ளான்கள் இப்படிக் கிளம்பி இருக்கிறார்கள்" என்றார். கூடவே, அங்கு ஒரு வரலாற்றுத் தகவலையும் வாக்காளர்களுக்குப் பதிய வைத்தார்.

"1949-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ஆம் தேதி, கொட்டுகின்ற மழையில் ராபின்சன் பூங்காவில் பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அவ்வாறு தொடங்கி வைக்கப்பட்ட போது அந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி என்பது வரலாறு. அப்படிப்பட்ட பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமையில், அண்ணா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தி.மு.க.வை வீழ்த்த எத்தனை தடைகள் வந்தாலும், இந்த இயக்கத்தை எவனும் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது என்பதை நான் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்" என அந்தப் பகுதி வாக்காளர்களுக்கு மட்டுமல்லாமல், கழகத் தொண்டர்களுக்கும் வரலாற்றை நினைவூட்டினார்.

## திடகாத்திரத் தொண்டர்

'உடன்பிறப்பே' என முத்தமிழறிஞர் கலைஞர் விளிக்கும் முன்பே, அண்ணாவின் நெருக்கமான தம்பியாக கழகத்தைத் தோற்றுவிக்கும் அரும்பெரும் பணிகளில் தன்னைக் கரைத்துக் கொண்டவர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி.

இன்றைய ஈரோடு மாவட்டத்தின், பெருந்துறை அருகே உள்ள சிற்றூர்தான் பெத்தாம்பாளையம். அங்கு, செல்வாக்கான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பழனிச்சாமி. ஈரோட்டுப் பகுத்தறிவுப் பாசறையில் கிடைத்த தொடர்புகளின் மூலம் திராவிடர் கழகச் செயல்பாடுகளில் இணைத்துக் கொண்டு தீவிரமாக ஈடுபடலானார்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதால், வாட்டசாட்டமான உடல்வாகு கொண்டவர். அந்தக் காலகட்ட அரசியல் பிரச்சாரங்களுக்கு அந்த உடல்வாகும் ஒரு வசதியானது. மாட்டுவண்டிப் பயணம், பத்து, பதினைந்து நாய்கள் சூழ, பெத்தாம்பாளையம் சுற்று வட்டாரங்களில் அவரைப் பார்ப்பவர்களுக்கு இயல்பிலேயே அவரது குணத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியும். ஆனால், அவர் அதற்கு எதிர்மாறாக சீர்திருத்தம் பேசியவராக அறியப்படலானார்.

ஈரோட்டுப் பாசறையில் பேரறிஞர் அண்ணாவுடன் அறிமுகமானதும், அவரது வீச்சு இன்னும் அதிகமானது. கூடவே, அண்ணாவுடன் கொண்டிருந்த நட்பும் அவரது ஆளுமைக்குப் பலமாக இருந்தது. கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவராகவும், மாகாண நிர்வாக உறுப்பினராகவும் செல்வாக்குடன் செயல்பட்டு வந்தார்.

> **"திராவிடத்தின் எதிர்கால வேலைத் திட்டம் பற்றி பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தலைமையில், தோழர்கள் பேசுவார்கள்!"**

## கண்ணீர்த் துளிகளில் ஒன்று

1949-இல் திராவிடர் கழகத்தில் இருந்து அண்ணா தலைமையில் முக்கியப் பொறுப்பாளர்கள் விலகியபோது, அந்த நூற்று ஐம்பது பேரில் பெத்தாம்பாளையம் பழனிச்சாமியும் இருந்தார். கழகம் தொடங்கப்பட்ட செப்டம்பர் 17-ஆம் தேதி மேடையில் அவர்தான் தலைமை தாங்கினார். முன்னதாக நடைபெற்ற முக்கிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்துக்கும் தலைமை வகித்தவர் பழனிச்சாமி. குறிப்பாக, அன்றைக்கு ஒட்டப்பட்ட சுவரொட்டிகளிலும், விளம்பரங்களிலும் "திராவிடத்தின் எதிர்கால வேலைத் திட்டம் பற்றி பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தலைமையில், தோழர்கள் பேசுவார்கள்" என வரலாறு எழுதி வைத்துள்ளது.

அந்தக் கொந்தளிப்பான நாட்களில் **'திராவிட நாடு'** ஏட்டில் அண்ணா எழுதுகிறார், "நமது வாழ்நாளிலேயே பெரியதோர் சோதனை இது. இதிலே நாம் காட்டும் தூய்மை, உறுதியைப் பொறுத்துத்தான் நாட்டின் எதிர்காலம் இருக்கிறது. சிந்தியுங்கள், சோர்ந்துவிட வேண்டாம் - தீர்மானியுங்கள் - அவசரம் வேண்டாம் -அஞ்சேல், வெற்றி நமதே!" என எழுதியதுடன், அதன் கீழ் யாரெல்லாம் அணி திரள்கிறார்கள் என எழுதினார். அதில் முதல் பெயராக இருந்தது, 'பெத்தாம்பாளையம் பழனிச்சாமி (கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் மாகாண நிர்வாக உறுப்பினர்)' என்பதாகும்.

இப்படி கழகத்தின் கால்கோள் நிகழ்வை முன்னின்று நடத்தியவர் பழனிச்சாமி.

முக்கியமாக, கழகம் அன்று நடத்திய பொதுக் கூட்டத்துக்கான மொத்தச் செலவு ரூ.1,451. அதில் அண்ணா ரூ.1,000 வழங்க, மீதத் தொகையை ஐவர் வழங்கினர். அதில் ரூ.100 வழங்கி, கழகத்தின் முதல் செலவுக் கணக்கில் இடம்பிடித்தவர் பழனிச்சாமி. அப்போது அமைக்கப்பட்ட முதற் செயற்குழுவில் அவர் இடம்பெற்றார். சொல்லப்போனால், அந்தச் செயற்குழுவில் கழகத்தை 50 ஆண்டு காலம் கட்டிக்காத்த முத்தமிழறிஞர் கலைஞர் இடம்பெறவில்லை. பிரச்சாரக் குழு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

## கழகக் கொடி ஏற்ற களம் கண்டவர்

அப்போதெல்லாம் கழகத்தில் உறுப்பினராக இணைய வேண்டும் என்றால் கடும் கட்டுப்பாடுகள் உண்டு. நினைத்த மாத்திரத்தில் எளிதில் இணைந்துவிட முடியாது. தவிர, ஓர் ஊரில் கழகத்தில் கொடி ஏற்ற வேண்டும் என்றால், சச்சரவுகள், சண்டைகளைச் சந்திக்க வேண்டும். அதை எதிர்கொள்ள முதலில் பழனிச்சாமியையும், மதியழகனையும் அண்ணா அனுப்பி வைப்பார் என நினைவுகளைப் பகிர்ந்து கொள்கின்றனர் கழக முன்னோடிகள். இருவரும் பார்ப்பதற்குத் திடகாத்திரமாக இருப்பதால், எதிராளிகள் பதுங்கிக் கொள்வார்களாம். இப்படித் தொடக்கக் காலத்தில் தனது உயிரையும் பொருட்படுத்தாமல் கழகம் வளர்க்க நின்றவர் பழனிச்சாமி.

கழகம் தொடங்கப்பட்ட பின்னர் அடுத்த நான்கு மாதங்களில் திருச்சியில் முதல் மாவட்ட மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டைத் தொடங்கிவைப்பவராகப் பங்கேற்றார் பழனிச்சாமி. கழக வரலாற்றில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்ற இலக்கிய மாநாடாகக் கோவையில், 1950-ஆம் ஆண்டு முத்தமிழ் மாநாடு நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியை, மிகச் சிறப்பாக முன்னின்று நடத்தியவர் பழனிச்சாமி.

அந்தக் காலகட்டங்களில் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கோவைப் பகுதியை வீச்சாக இயக்குவதில் கழக முன்னோடிகளுடன் பழனிச்சாமியைக் களத்தில் பார்க்க முடியும். அரசியல் பற்று காரணமாகத் திருமணத்தில் ஈடுபாடு இல்லாதவராக இருந்த அவர், 1960-ஆம் ஆண்டு தனது அரசியல் இயக்கத்தோடு, உடல் இயக்கத்தினையும் நிறுத்திக் கொண்டார். எனினும், கழக முன்னோடிகளின் நெஞ்சங்களை விட்டு, அவர் அகலவில்லை என்பதைத்தான் கடந்த தேர்தல் பிரச்சாரத்தில் கழகத்தின் இன்றைய தலைவர் எடுத்துச் சொன்னார்.

## துள்ளி விளையாடிய தொட்டில்

2011-ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞரும் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களை நினைவுகூர்ந்து இருந்தார். கோவையில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், தான் இளவயதில் கோவையில் தங்கி இருந்த நாட்கள் குறித்துக் குறிப்பிட்டார்.

"என் வாழ்க்கையில் ஓர் அங்கமாக இருந்த இடம், கோவையை எண்ணிப் பார்க்கும் போதெல்லாம், மகிழ்ச்சியான, சோகமான நிகழ்வுகள் என்னைத் தாக்குவதுண்டு. பேரறிஞர் அண்ணா கழகத்தைத் துவக்கியபோது அவருடன் இருந்த பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, சாதிக் பாட்ஷா, எஸ்.ஏ.ராஜமாணிக்கம், உடுமலை நாராயணன், சி.டி.தண்டபாணி ஆகியோர் அன்று இருந்தார்கள், இன்று இல்லை" எனத் தனது நினைவுகளைப் பகிர்ந்தவர், "கோவை திராவிடர் கழகத்தின் கோட்டை, கொள்கை வீரர்களின் கோட்டை, என்னைத் தாலாட்டிய தொட்டில், நான் துள்ளி விளையாடிய தாழ்வாரம்" என்றெல்லாம் நெகிழ்ந்து பேசினார்.

அந்த நினைவுகளை, அந்த வரலாற்றை, அந்தத் தொடர்ச்சியை மீட்டெடுப்பதே மேற்கு மண்டல கழகத்தினர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமிக்குச் செய்யும் மரியாதையாக இருக்கும்.

...துடிக்கும்

## மோடியின் விபரீத பிரபலம்!




1934-இல் இத்தாலியில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டிகள் முசோலினிக்கும், ஜெர்மனியில் 1936-இல் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டிகள் ஹிட்லருக்கும், பிரபலத்தை அளித்ததாக சொல்லப்படுவதுண்டு. அதே போன்ற தோற்றத்தை இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி மூலம் மோடிக்கு அளிக்கும் வகையில் முதல் மற்றும் இறுதிப் போட்டிகள், மற்றும் நடந்து முடிந்த இந்தியா- பாகிஸ்தான் இடையிலான போட்டிகள் எல்லாம் குஜராத் மோடி மைதானத்தில் திட்டமிடப்பட்டுள்ளன.

இது போன்ற நடவடிக்கைகள் கிரிக்கெட்டை முழுக்க முழுக்க இந்து தேசியவாத அரசியல் கருவியாக மாற்றுவதற்கான மிகத் தீவிர முயற்சி என்று செப்டம்பர் மாத **'கேரவன்'** ஆங்கில இதழ் விமர்சித்துள்ளது. அமித் ஷாவின் வாரிசான ஜெய் ஷா பி.சி.சி.ஐ. மூலம் எவ்வாறு கிரிக்கெட்டை காவியாக்க முயற்சிக்கிறார் என்று அந்த இதழ் விளக்குகிறது.

## :ப்ளாஷ்பேக்



## தலைவரின் பொன் வரிகள்!

மிசா காலத்தில் கழகத்தில் நுழைந்து, 1978-ஆம் ஆண்டு மதுரை மாநகர் மாவட்ட மாணவர் தி.மு.க பொருளாளராக கழகப் பணியாற்றியவன் நான். அதைத் தொடர்ந்து கழகம் உட்கட்சி நெருக்கடியை சந்தித்த சமயத்தில், 1993-ஆம் ஆண்டு ஜூலை 25 அன்று நிர்வாகி களைச் சந்தித்து ஆலோசிக்க தலைவர் கலைஞர் மதுரைக்கு வருகை தந்தார். அப்போது மாவட்டப் பிரதிநிதி என்ற முறையில் தலைவரை சந்தித்து சால்வை அணிவித்தேன். தலைவர் அவர்கள் சிரித்துக்கொண்டே "கொள்கைத் தடம் மாறாமல் விளங்கிட, உன்னை வாழ்த்துகிறேன்" என்றார். தலைவரின் பொன் வரிகளைப் பின்பற்றி ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட அவைத் தலைவராகச் செயல்பட்டது என் வாழ்நாள் பேறு.



அருணாச்சலம்

**மா.அருணாச்சலம்,**
**மாவட்ட முன்னாள் அவைத் தலைவர்,**
**மதுரை புறநகர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

## திராவிடர் கழகக் கொடி!

**1944-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் இணைந்து, திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது. 'திராவிடர் கழக உறுப்பினர்கள் அனைவரும் கருப்புச் சட்டை அணிய வேண்டும்' என 1954-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிவு செய்யப்பட்டது. திராவிடர் கழகம் தோன்றி, 20 மாதங்களுக்குப் பின்னர், 1946-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொடி முடிவானது. கருப்புத் துணியின் மத்தியில் வட்டமாக சிவப்புத் துணி தைத்த கொடி 'திராவிடர் கழகக் கொடி' என அறிமுகம் செய்யப்பட்டது.**


## திராவிடத்தால் வாழ்கிறோம் 276




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131



கலைஞரின்
கொள்கை தீபத்தை
நாளும் ஏற்றுவோம்!




# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

நாள் : 21.10.2023 சனிக்கிழமை காலை 10 மணி
இடம் : அரசு மருத்துவக்கல்லூரி கூட்ட அரங்கம், இராமநாதபுரம்.

## கண்காட்சி அரங்கம்
## கருத்தரங்கம்
## பட்டிமன்றம்

மற்றும்

அனைத்து நிகழ்ச்சிகளையும்
குத்து விளக்கு ஏற்றி வைத்து
மாணவர்களுக்கு பரிசுகள்
வழங்க வருகை தரும்
சிறப்பு விருந்தினர்கள்
அனைவரையும் வருக. வருக.. என


*அன்புடன் வரவேற்கும்*

**முத்தமிழறிஞர்
கலைஞர் நூற்றாண்டு
“ஏழைப் பங்காளர் – கலைஞர்”
விழாக் குழு**





ARASU ARTS



கலைஞர் 100
1924 - 2023
நாள்: அக்டோபர் - 21,
நேரம்: காலை - 9:00 மணி
இடம்: விங்ஸ் கன்வெ ன்ஷன் சென்டர்,
செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி,
ஷெனாய் நகர் சென்னை - 30.
திமுக
தகவல் தொழில்நுட்ப அணி
மற்றும்
WING 2.0
ஒருங்கிணைப்பில்
கழகத்தலைவர் - மாண்புமிகு
முதலமைச்சர்
அவர்களுடன்
சமூக வலைத்தள செயல்பாட்டாளர்கள் சந்திப்பு!
வரவேற்புரை
முனைவர்.திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள்
செயலாளர் – திமுக தகவல் தொழில்நுட்ப அணி
மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
டாக்டர்.ஆர்.மகேந்திரன்
இணைச் செயலாளர் – திமுக தகவல் தொழில்நுட்ப அணி
திரு.கார்த்திக் மோகன்
மாநில துணைச் செயலாளர் - திமுக தகவல் தொழில்நுட்ப அணி
திரு.மனுஷ்யபுத்திரன்
ஆலோசகர் - திமுக தகவல் தொழில்நுட்ப அணி
திரு.கோவி.லெனின்
ஆலோசகர் - திமுக தகவல் தொழில்நுட்ப அணி
அனைவரையும் அன்புடன் வரவேற்கும்
கும்மிடிப்பூண்டி C.H.சேகர் Ex.MLA.,
மாநில துணைச் செயலாளர்., மண்டல பொறுப்பாளர் - சென்னை மண்டலம்
திமுக தகவல் தொழில்நுட்ப அணி

கலைஞர் நூற்றாண்டு விழா

கலைஞர் 100 – 49

## செந்தமிழ் படைப்பாளி!
## திராவிடப் போராளி!!

நாள் : 21.10.2023 சனிக்கிழமை மாலை 6.00மணி
இடம் : ஹயாத் மஹால், பிரகாசம் சாலை, பிராட்வே

தலைமை
**என்.பி.எம்.ஷேக்அப்துல்லா**
மாநில சிறுபான்மையினர் அணி துணை செயலாளர்

முன்னிலை
திரு. **பி.கே.சேகர்பாபு**
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்

திரு. **தயாநிதிமாறன்** எம்.பி
கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர்

மேயர் **பிரியாராஜன்**

எஸ்.இராஜசேகர் | எஸ்.முரளி
ஜி.எம்.தேவன் | பி.ஸ்ரீராமுலு எம்.சி
எம்.விஜயகுமார் | எம்.இப்ராஹிம்கனி
ஆர்.கலைச்செல்வி | பி.விஜயகுமார்
எம்.விநாயகம் எல்.சம்பத்குமார் பா.பிரதீப்குமார்

போற்றுவோர்
டாக்டர் **சுதா சேஷய்யன்**
**கலையரசி நடராஜன்**
தமிழ் சைவப் பேரவைத் தலைவர்
முனைவர் **ம.ராஜேந்திரன்**
மூத்த பத்திரிக்கையாளர் **பா.கிருஷ்ணன்**

நன்றியுரை **த.கதிரவன்** 56வது வட்ட செயலாளர் **எம்.பரத்குமார்** 56 அ வட்ட செயலாளர்



Star Digital 044 - 43 55 48 47

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க**
**சிறுபான்மையினர் அணி**

---

கலைஞர் நகர் வடக்கு பகுதி கழகத்தின் சார்பில்
128வது வட்ட கழகத்தின் சார்பில்
முத்தமிழ் அறிஞர்

# கலைஞர்

அவர்களின்
## நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
## வெண்கல சிலை திறப்பு விழா

கலைஞர் 100 1924 - 2023

நாள்
21.10.2023, சனிக்கிழமை
நேரம்
காலை 8.00 மணி
இரண்டு இடங்கள்
பகுதி கழகத்தின் சார்பில்
பச்சையம்மன் கோவில் அருகில்
128வது வட்ட கழக அலுவலகம்
காந்தி நகர் மெயின் ரோடு, விருகம்பாக்கம்

வரவேற்புரை
வீ.ஏ.ராஜா வ.செ ✧ பொன்.லோகு MC வ.செ ✧ S.மைக்கேல் வ.செ
எஸ்.பாஸ்கரன் வ.செ ✧ ஆர்.பாபு வ.செ

முன்னிலை
S.M.துரையரசன் ✧ சா.நாகராஜன் ✧ S.விஜயகுமார் ✧ P.விஜயலஷ்மி ✧ துரை.ரஞ்சித்குமார்

தலைமை
**மு.இராசா** M.A., MC
கலைஞர் நகர் பகுதி கழக செயலாளர், வடக்கு
**கே.கண்ணன்** B.Com., MC
கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர்
**மு.கோவிந்தராசன்**
128வது வட்ட கழக செயலாளர்

சிலை திறப்பாளர்
மாண்புமிகு **மா.சுப்பிரமணியன்** B.A.,LLB.,
சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர்



| | | |
|---|---|---|
| **தமிழச்சி தங்கபாண்டியன்** | **AMV.பிரபாகரராஜா** | **க.தனசேகரன்** |

திரு.கவிஞர் **காசிமுத்துமாணிக்கம்**
மாநில வர்த்தக அணி செயலாளர்

| | | | |
|---|---|---|---|
| **உ.துரைராஜ்** தலைமை பொதுக்குழு உறுப்பினர் | **எஸ்.டி.தங்கராசன்** M.A. தலைமை பொதுக்குழு உறுப்பினர் | **P.S.முருகேசன்** தலைமை பொதுக்குழு உறுப்பினர் | **வாசுகிபாண்டியன்** மாவட்ட துணைச் செயலாளர் |
| **சு.இளங்கோவன்** Ex.MC மாவட்ட பிரதிநிதி | **R.ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா** MC சமூக வலைதள பொறுப்பாளர் - மாநில மகளிர் அணி, 128வது வட்ட மாமன்ற உறுப்பினர் | **நிலவரசி துரைராஜ்** MC 136வது வட்ட மாமன்ற உறுப்பினர் | |

வி.ச.சங்கரன் • சொ.ஜெயக்குமார் • D.சார்லஸ் • சுப.முத்துவேல் • S.முருகன் • S.அபுபக்கர்
R.சசிக்குமார் • கனிமொழி தனசேகரன் • நிஷாசையத் • க.அர்ச்சுனன் • TSP.தென்னரசு
அர.அ.எழில்வாணன் • K.பாலமுருகன் • R.D.நல்லேந்திரன் • சா.ரா.சீனிவாசன் • S.சண்முகம் • அ.ஸ்ரீதர்

வருகை தரும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பிற அணி நிர்வாகிகள் அனைவரையும் வருக ! வருக !! என வரவேற்கும்...

நிகழ்ச்சி ஏற்பாடு
**கலைஞர் நகர் வடக்கு பகுதி மற்றும் 128வது வட்ட தி.மு.கழகம்**


22.10.2023 – ஞாயிற்றுக்கிழமை
BLA - 2 கூட்டத்தை தொடங்கி வைக்க திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தரும்
'இந்தியா' கூட்டணியின்
ஒருங்கிணைப்பே!
உடன்பிறப்பை வழிநடத்தும்
உயிர்த்துடிப்பே!!
வருக! வருக!!
ARASU ARTS
திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க.



30 கோடியில் ஒசூர் புதிய புறநகர் பேருந்து நிலையம் மற்றும்
3.98 கோடி மதிப்பீட்டில் மீன்மார்கெட் வழங்கிய
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு
ஒசூர் தொகுதி மக்களின் சார்பில்
நன்றி! நன்றி!! நன்றி!!!
மேற்கண்ட பணிகளை 21.10.2023 அன்று
துவக்கி வைக்க வருகை தரும்
கழக முதன்மை செயலாளர்
மாண்புமிகு. கே.என்.நேரு
நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களையும்
மாண்புமிகு. அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அவர்களையும்
வருக! வருக!! என வரவேற்கும்...
அன்புடன் திரு. ஒய்.பிரகாஷ் MLA.,
ஒசூர் சட்டமன்ற உறுப்பினர்
மாவட்ட செயலாளர்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக




தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணியின்
சமூக வலைத்தள
செயல்பாட்டாளர்கள் கூட்டம்
விழாவை சிறப்பிக்க
வருகைதரும்
கழகத் தலைவர்
திராவிட மாடல் நாயகர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களையும்
கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்
மாண்புமிகு தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர்
முனைவர்.
டி.ஆர்.பி.ராஜா
அவர்களையும்
வருக!
வருக!!
என அன்புடன் வரவேற்கும்...
பி.எம்.ஸ்ரீதர் B.Sc.,
மண்டல பொறுப்பாளர்
தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி
நாள் : 21.10.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம் : ST George Anglo Indian School, ஷெனாய் நகர்,
சென்னை-30.
2.0
Oct 20, 21 - 2023
Chennai
DMK
IT WING
தஞ்சை மண்டல தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி


கலைஞர்
100
1924 - 2023
நாள்: 22.10.2023
இடம்: கலைஞர் திடல், மலப்பாம்பாடி ஊராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்.
திருவண்ணாமலையில் நடைபெறும் வடக்கு மண்டல
வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை
கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரையாற்ற வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர்
மக்கள் முதல்வர்
அவர்களே வருக ! வருக !!
அன்புடன்
செஞ்சி K.S.மஸ்தான்
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
மாவட்ட கழக செயலாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க


நினைவைப் போற்றுகிறோம்!
தந்தை
அது உறவல்ல
உணர்வு
திமிரி ஒன்றியத்தில்
கழகம் வளர்த்திட்ட செயல்வீரர்
திமிரி ஒன்றிய இளைஞரணி முன்னாள் அமைப்பாளர்
நம்பரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்
எங்கள் நினைவெல்லாம் நிறைந்திருக்கும்
நம்பரை
N.R.P.சீனிவாசன்
அவர்களின்
முதலாமாண்டு நினைவேந்தல்
கழகத்திற்காக சிறைச்சாலைகள் சிலமுறை, கண்டன போராட்டங்கள் பலமுறை,
இடைத்தேர்தல் களங்களையும், மாநாட்டு பந்தல்களையும் மறந்ததில்லை நீங்கள்..
ஒருநாள் வென்றிடுவோம் என்று ஓடிய ஓட்டத்தில் இறுதி மூச்சுவரை
கழகத்திற்காகவே களப்பணியாற்றி கரைந்துவிடுவீர்கள் எனத் தெரிந்திருந்தால்
தயங்காமல் ஒருமுறையாவது கேட்டு பெற்றிருப்பேன் உங்களிடம் ஒரு அன்பு முத்தத்தை...
இழந்தது அந்த முத்தத்தை மட்டுமல்ல எங்கள் மொத்தத்தை...
உங்கள் அன்பின் நினைவை மறவாத
N.S.பரந்தாமன் கிளைக் கழக செயலாளர் 9952782112
நம்பரை ஊராட்சி ■ திமிரி மேற்கு ஒன்றியம் ■ இராணிப்பேட்டை மாவட்டம்
நினைவு மலரை பதிவிறக்கம் செய்ய
JAGAN ADS - 9962969675
நிகழ்ச்சி நிரல்
21-10-2023 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு மேல் நம்பரை சீனிவாசா வளாகத்தில் அன்னாரின்
திருவுருவப்படத்திறப்பு மற்றும் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு, அன்னாரது நினைவுமலர் வெளியீட்டு விழா,
நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும் அனைவரும் வருக..